# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

“கொங்கு மாமேதை” விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

1. தெய்வத்திரு. அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம்
   **(2006 ஆம் ஆண்டு)**

2. தெய்வத்திரு. காலிங்கராய கவுண்டர்
   **(2018 ஆம் ஆண்டு)**

‘கொங்கு மாமணி’ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

2001 ஆம் ஆண்டு

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

2002 ஆம் ஆண்டு

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

2003 ஆம் ஆண்டு

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி திரு. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

2004 ஆம் ஆண்டு

9. தெய்வத்திரு. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

2005 ஆம் ஆண்டு

12. NSIT. டாக்டர் எம்.முருகேசன்
13. தெய்வத்திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

2006 ஆம் ஆண்டு

15. டாக்டர் நல்ல கோவிந்தசாமி
16. சக்தி மசாலா டாக்டர் பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

2007 ஆம் ஆண்டு

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

2008 ஆம் ஆண்டு

21. ஆடிட்டர் திரு. மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

2009 ஆம் ஆண்டு

24. பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

2011 ஆம் ஆண்டு

27. அட்லஸ் திரு. எம்.நாச்சிமுத்து
28. திரு. கே.ஏ.செங்கோட்டுவேல்

2012 ஆம் ஆண்டு

29. கலைமாமணி சிவகுமார்

2013 ஆம் ஆண்டு

30. டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி

2014 ஆம் ஆண்டு

31. இராசி சீட்ஸ் டாக்டர் எம். இராமசாமி

2015 ஆம் ஆண்டு

32. திரு. பி.காசியண்ண கவுண்டர்

2016 ஆம் ஆண்டு

33. திரு.வி.இரத்தினசபாபதி

34. டான் ஸ்ரீ எம்.கேவியஸ்

35. டாக்டர் வீரப்பன் சுப்பிரமணியன்

2017 ஆம் ஆண்டு

33. திரு.எஸ்.அருணாச்சலம்

34. திரு.பி.தேவராஜன்


35. திரு.கே.ஆர்.அப்பாவு

2018 ஆம் ஆண்டு

36. திரு. கே.பி.இராமசாமி

37. திரு. எம்.பொன்னுசாமி

# விழாத் தலைவர்



## கொங்குமாமணி டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

1944 ஆம் ஆண்டு பொள்ளாச்சி சமத்தூரில் பிறந்த திரு.பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் தனது பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பினைக் கோவை ஸ்டேன்ஸ் பள்ளி, சென்னை லயோலா கல்லூரி மற்றும் சட்டக்கல்லூரியில் முடித்தார். கொங்குமாமணி திரு.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் கல்வி, வணிகம், சமூகம், சமயம் என விரிவான தளங்களில் சிறப்பாகப் பணியாற்றும் பெருமைக்குரியவர்.

கோவை அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் Doctor of Laws பட்டம், கோவை ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயாவின் Vivekanandha National Award for Excellence, கோவை ரோட்டரி சங்கத்தின் "Outstanding citizen of Coimbatore", சென்னை Rotary Club of Aarch City ன் வாழ்நாள் சாதனையாளர் விருது ஆகியவை இவரது மேலான சேவைக்குச் சான்றாக விளங்குகின்றன.

கோவை ரோட்டரி சங்கத்தின் பட்டயத் தலைவர், பொள்ளாச்சி இலக்கியக் கழகம், பொள்ளாச்சி தமிழ் இசைச் சங்கம் ஆகியவற்றின் நிறுவனத் தலைவர், கோயம்புத்தூர் கேன்சர் பவுண்டேஷனின் நிறுவனத் தலைவர், திவியோதயா, குரல் போன்ற சமூக அமைப்புகளின் தலைவர் என இவரது சமூகப்பணிகள் விரிவானவை.


இவரது கல்விப்பணி அளவிடற்கரியது. கோவை பாரதிய வித்யா பவன், குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி KCT, Business School, ஈரோடு, Kumaraguru Institute of Agriculture, பொள்ளாச்சி எம்.ஜி.எம்.கல்லூரி, Sakthi Institute of Management Studies ஆகிய மேன்மை பெற்ற நிறுவனங்களின் தலைவராக இருக்கும் இவர், Bhavan's Gandhi Vidyashram, Kodaikanal இன் நிர்வாகத் துணைத்தலைவராகவும் பணியாற்றி இருக்கிறார். பாரதியார் பல்கலைக்கழகத்

திட்டக்குழு உறுப்பினராகவும், சிண்டிகேட் உறுப்பினராகவும் இருந்துள்ளார். கோவை கேந்திரிய வித்யாலயாவின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

வணிகத்துறையில் தனி முத்திரை பதித்த இவர், தற்போது Sree Sakthi Textiles, பொள்ளாச்சி நிறுவனத்தின் தலைவராக உள்ளார். இவர் Southern India Mills Association தலைவராகவும், Indian Cotton Mills Federation தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

போப் இரண்டாம் ஜான்பால் அவர்களின் அழைப்பினை ஏற்று உலக அமைதிக்கான பிரார்த்தனை தினத்தில் 2002 ஆம் ஆண்டு Contribution of religion and because of this எனும் தலைப்பில் இத்தாலி வாட்டிகன் நகரில் உரையாற்றிய பெருமைக்குரியவர், திரு.வாணவராயர் அவர்கள்.

இத்தகைய சிறப்புகள் கொண்டுள்ள கொங்குமாமணி டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் இந்தச் சீரிய விழாவிற்குத் தலைமையேற்றுள்ளது, நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்குப் பெரும் பெருமை.



# DAY OF PRAYER FOR PEACE IN THE WORLD

**VATICAN – ASSISI, 23rd – 24th JAN 2002**

## 'CONTRIBUTION OF RELIGION ON THE CAUSE OF PEACE'

**Speech by Dr. B.K. Krishnaraj Vanavarayar, representing Hinduism from India**

Your Excellencies, Brothers and Sisters,

In the name of Peace, I greet you on behalf of the world's largest democracy.

`Absence of War is not Peace' – said a philosopher statesman of India. Religious intolerance, racial discrimination, economic marginalisation, political conflict, social inequality, cultural degradation and ecological imbalance could also be some of the major threats to Peace.

A determined humanity will have to meet these challenges unitedly and religion can help bring about that unity of purpose provided it is properly understood and practiced.

This Historic Meet called by His Holiness Pope John Paul II is a timely initiative in that direction. We the chosen few representing the various faiths and cultures of the world have come together to understand and appreciate each other's points of view. We should explore common areas and avenues to work together for promoting peace through dialogue setting aside differences if there are any.

The strength of India has always been her spirituality and the concept of oneness, the core of India's Vedic vision has helped her to find unity in the midst of all her diversities. Some religions of Indian origin went out and some from outside came in, but India has treated them all alike and encouraged them to be part of her mainstream. Thus the ancient wisdom of the land has in the process assimilated the best from all of them and enriched her-self. Hinduism believes not only in tolerating other religions of the world but also in accepting them as true.

India's commitment to peace has always been total. There has not been a single instance in her history when she has waged war on others. Her faith and commitment to peace was amply demonstrated in the recent past when Mahatma Gandhi got India her freedom through peaceful means thereby establishing to the world the power of Truth and Non-violence.

Long before science could reduce the world to a global village, the wise men of India had the vision to see the whole of humanity as one single family. Hinduism believes in the divinity of man and when the same finds expression all distrust and divisions disappear.

Hinduism never opposed science. To the contrary it even welcomed it and felt the imperative need to find a synthesis between the two.

By playing a complimentary role, religion and science can help moderate want and create wealth through fair means and ensure equitable distribution of the same without endangering the nature of man within and without, guaranteeing peace and sustainable development.

Perhaps it is this that tempted the British historian Arnold Toynbee to say, "It is already becoming clear that a chapter which had a Western beginning will have to have an Indian ending if it is not end in the self-destruction of the human race. At this supremely dangerous moment in history the only way of salvation for mankind is the Indian way".


In a fast changing world order religion will have to stand the test of reason and relate itself to the changing needs of the time. Terrorism and materialism, the twin aberrations of our times, has deprived man of his inner peace and leisure, making him weak and vulnerable.

Religion should help man realize his true self - and gain the courage and conviction to resist any attempt to undermine his inner personality - which is infinite love and compassion.

Let me close with what the great Indian saint Swami Vivekananda said **"If there be righteousness in the heart, there will be beauty in the character, if there be beauty in the character, there will be harmony in the home, if there be harmony in the home, there will be order in the nation, if there be order in the nation, there will be peace in the World".**

Om Shanti, Shanti, Shanti.

# கொங்கு மாமணி



## அமரர் திரு. கோவை செழியன்

கொங்கு வேளாளர் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் இணைக்கப் பாடுபட்டவர், நம் சமூக முன்னேற்றத்தை உயிர் மூச்சாகக் கொண்டவர், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பிலும் கோலோச்சியவர்... நம் பெரு மதிப்பிற்குரிய கோவை செழியன் ஐயா அவர்கள்!

29-12-1931 அன்று காங்கேயத்திலுள்ள குங்காரு பாளையத்தில் செல்லமுத்துக்கவுண்டர் - பாப்பம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், திரு.கோவை செழியன் அவர்கள். இவருடைய இரு சகோதரர்கள் திரு.சுந்தரேசன் மற்றும் திரு. கதிரேசன் ஆகியோர்.

பள்ளிப் பருவம் முதலே பெரியார் மற்றும் அண்ணாவின் பேச்சால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். முன்னாள் முதலமைச்சர்கள் கலைஞர் மற்றும் எம்.ஜி.ஆர். ஆகியோரோடு நெருங்கிய நட்புப் கொண்டிருந்தார். இவரைச் சென்னைக்கு அழைத்து வந்து திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட வைத்தவர், இவரது மற்றுமொரு நெருங்கிய நண்பரான கவியரசு கண்ணதாசன் அவர்கள்! இருவரும் இணைந்து பல திரைப்படங்களைத் தயாரித்தனர். “சுமைதாங்கி” படத்திலிருந்து தனியாகத் தயாரிப்பாளரான திரு.செழியன் அவர்கள், மூன்று முதல்வர்களான எம்.ஜி.ஆர்., என்டி.ராமராவ், செல்வி ஜெயலலிதா ஆகியோரும், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், ராஜேஷ் கண்ணா, மம்முட்டி, விஜயகாந்த் போன்ற முன்னணி நட்சத்திரங்களும் நடித்த பல வெற்றிப்படங்களைத் தயாரித்தவர். தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சம்மேளனத்தின் செயலாளராகவும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் முதல் தலைவராகவும் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

திரைப்படத் தயாரிப்பில் அழியாத் தடம்பதித்த பின், கொங்குச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான சேவையில் முனைப்புடன் ஈடுபட ஆரம்பித்தார். ஒருமுறை நம் கவுண்டர் சமூகத்தைச் சார்ந்த ஒருவர் வேலை நிமித்தமாகச் சென்னை வந்து தன் குழந்தையைத் தொலைத்துவிட்டு உதவிக்கு யாருமற்ற நிலையில் பரிதவிப்பதைக் கேள்விப்பட்டதும் தனது நண்பர்கள் பேராசிரியர் பழனிசாமி, திரு.ராமசாமி மற்றும் A.M.ராஜா ஆகியோருடன் விரைந்து சென்று அவருக்குத் தக்க உதவியை நல்கினார். அத்தருணத்தில் நம் கொங்கு சொந்தங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் பெற்று உதவிபுரியும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதுதான், நம் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமாகும். அதே போல் கொங்கு வேளாளர் சமூகத்தினரைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்கப் பல கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தியதோடு சட்ட மன்றத்திலும் வாதாடியவர், கோவை செழியன் அவர்கள்!

வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்த விவசாயிகளின் நிலைகண்டு வருந்தி, நமது கோரிக்கைகளுக்கும், உரிமைக்கும் ஓரணியில் திரண்டு செயல்படுவதன் அவசியத்தை உணர்ந்தார். பல்வேறு பகுதிகளில் சிதறிக்கிடந்த நம்மவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாகக் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையைத் துவக்கினார். அரூர் திரு.முத்துக்கவுண்டர் இப்பேரவை தொடங்கவும், சிறப்பாகச் செயல்படவும் பெரும் ஒத்துழைப்பை நல்கினார். இவருக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தவர்கள் சேலம் ஆடிட்டர் பாலசுப்பிரமணியன், திருச்சி ஆர். தேவராஜன், A.M.ராஜா மற்றும் பலர். கொள்கைகளைப் பரப்பும் விதமாகக் “கொங்கு” இதழையும் ஆரம்பித்தார்! அத்தருணத்தில் நம் சமூகத்தின் ஒற்றுமையையும் வலிமையையும் பறைசாற்றும் முக்கிய அமைப்பாகப் பேரவை செயல்பட்டது.


கொங்கு வேளாளர் சங்கங்கள் ஆங்காங்கே தமிழகத்தில் பரவலாகத் தோன்றிடவும், கொங்கு வேளாளக்கவுண்டர்கள் பேரவை எனும் அமைப்பு உருவாவதற்கும் முக்கியக் காரணமாக விளங்கியதோடு, அந்த அமைப்புகளின் சிறப்பான செயல்பாடுகளுக்கும் பெரும் பங்காற்றியவர் கோவை செழியன்.

திராவிட இயக்க முன்னோடி, நேர்மையான அரசியல்வாதி, தமிழகச் சட்டமன்ற உறுப்பினர், திரைப்படத் தயாரிப்பாளர், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவர், திட்டக்குழுத் துணைத்தலைவர் முதலான பன்முகங்களும் பொறுப்புகளும் கொண்டிருந்தவர், கோவை செழியன்.

செம்பியன் சிவக்குமார், கபிலன், மாதவி வெங்கடேஷ், வாசுகி வசீகரம் ஆகிய நன்மக்களைப் பெற்ற இவர், திரைப்படத் தயாரிப்பாளராக விளங்கி, புகழ் பெற்ற பல திரைப்படங்களை எடுத்து வெளியிட்ட சிறப்புக்குரியவராய் விளங்கினார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்.முதலான தலைவர்களுடன் நெருங்கிப் பழகியதோடு, அவர்களுடைய பேரன்பைப் பெற்றவராகவும் விளங்கினார்.

தம்முடைய இறுதி நாட்களில், கொங்குச் சமூகத்தினரின் நலனிற்காக ஓர் அரசியல் இயக்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று முனைப்பெடுத்தார். ஆனால் துரதிஷ்டவசமாகத் தன்னுடைய **69**ஆவது வயதில் 14-03-2000 அன்று மாரடைப்பினால் காலமானார்! ஆனால் இன்றளவும் தம் அழியாப் பணிகளால் கொங்குச் சமூகத்தினருக்கு ஒரு வழிகாட்டியாகவும், கொங்கு நாட்டுத் தங்கமாகவும், தன்னுடைய ஒப்பற்ற சமுதாயச் சேவையால் பெரும் புகழ் கொண்டவருமான திரு.கோவை செழியன் அவர்கள், நம் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

# கொங்கு மாமணி



## அரூர் ஆர்.முத்துக்கவுண்டர்

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் கல்குறிச்சி வெள்ளாளப்பட்டி எனும் சிற்றூரில் கொங்குநாட்டு வேளாளக்கவுண்டர் – இராசிபுரம் விழியன் குலப்பிரிவைச் சார்ந்த திரு.இராமசாமி கவுண்டர் – திருமதி வள்ளியம்மாள் தம்பதியருக்கு 22–09–1918 அன்று மகனாகப் பிறந்தார். பள்ளிக்கல்வியை வெள்ளாளப்பட்டி, முத்துக்காளிப்பட்டி ஆரம்பப் பள்ளிகளிலும், இராசிபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியிலும் முடித்தவுடன் சேலம் முனிசிபல் கலைக்கல்லூரியில் இண்டர்மீடியேட் படிப்பை முடித்தார்.

1942 ஆம் ஆண்டு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார். பின்னர் வருவாய் ஆய்வாளர் உணவு வழங்கல் அலுவலர் ஆகிய பொறுப்புகள் ஏற்றுப் பணியாற்றினார் 1950 ஆம் ஆண்டு அரூருக்குக் குடிபெயர்ந்தார். 1951 ஆம் ஆண்டு அரசுப்பணியிலிருந்து விலகினார். அரசுப்பணியிலிருந்து விலகிய பின்னர், முத்துக்கவுண்டர் விவசாயத்திலும் பொதுவாழ்விலும் தீவிரமாக ஈடுபட்டார்.

விவசாயத்தில் நவீன சாகுபடி முறைகளைக் கையாண்டு ஒரு பசுமைப் புரட்சியை நிகழ்த்திக்காட்டினார். நெல், கரும்பு, மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களின் சாகுபடிகளில் பல சாதனைகள் புரிந்து மாநில அளவில் பல பரிசுகளைப் பெற்றார். சோளம், நெல், கேழ்வரகு போன்றவற்றையே பயிரிட்டுவந்த அரூர்ப் பகுதி மக்கள் கரும்பு, கிழங்கு, கனிமரங்கள், பருத்தி ஆகியவற்றைப் பயிரிட்டு, நல்ல வருமானம் பெறுவதற்கு வழிவகுத்தார். 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றிவாகை சூடினார். முத்துக்கவுண்டர் தி.மு.க. நாடாளுமன்றக் குழுவின் கொறடா மற்றும் நாடாளுமன்றம் பொதுக்கணக்குக் குழு உறுப்பினராகவும் சிறப்பாகச் செயல்பட்டார்.

1967 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். நாடாளுமன்றத்தில் விவசாயிகளின் முன்னேற்றம், மற்றும் அரசுகள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பலமுறை உரையாற்றியுள்ளார். தருமபுரி மாவட்டம் பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை முத்துக்கவுண்டர் அவர்களின் முயற்சியால் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. 1973 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டுவரை இந்தச் சர்க்கரை ஆலையின் தலைவராய்ப் பணியாற்றினார்.

கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பாடுபட்டவர்களுள் முக்கியமானவராக விளங்கியவர். கோவை செழியன் அவருடன் இணைந்தும் அவருக்கு உற்ற துணையாயிருந்தும் கொங்குச் சமுதாய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர் முத்துக்கவுண்டர். கொங்கு வேளாளர் சமூகத்தினரிடையே ஒற்றுமையையும், விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தவேண்டும் என்று முடிவு செய்த கோவை செழியன் அதற்கான பணிகளில் ஈடுபட்டபோது அதற்கான முழு ஒத்துழைப்பையும் கொடுத்து உறுதுணையாக இருந்தவர் முத்துக்கவுண்டர். இதன் விளைவாக 1971 ஆம் ஆண்டிற்குப் பின்னர், மாநிலத்திலுள்ள பல இடங்களிலும், கொங்கு நண்பர்கள் சங்கம், கொங்கு வேளாளர் சங்கம், கொங்கு இளைஞர் மன்றம் என ஏராளமான கொங்கு அமைப்புகள் தொடங்கப்பட்டன.

முத்துக்கவுண்டர் கொங்குச் சமுதாயச் சட்டமன்ற உறுப்பினர்களிடமும், தமிழகமெங்குமுள்ள கொங்குச் சமுதாய அமைப்புகளின் நிர்வாகிகளிடமும் தொடர்புகொண்டு, இந்தச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரிக்கை வைக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துவந்தார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கமும், தமிழகமெங்கும் செயல்பட்டுக்கொண்டிருந்த பல்வேறு கொங்கு அமைப்புகளும் கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வலியுறுத்தித் தமிழக முதல்வர் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதின. 21 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களுக்குக் கோரிக்கை வைத்தனர். முத்துக்கவுண்டர் மற்றும் சில கொங்குச் சான்றோர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்தும் இக்கோரிக்கையை வலியுறுத்தி வந்தனர்.

அப்போதைய முதல்வர் கலைஞர் அவர்களிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்ததன் பயனாக, கொங்குச் சமுதாயம் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இணைக்கப்பட்டது. கலைஞர் அவர்கள் 1975ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்ற

பட்ஜெட் கூட்டத்தில் கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதாக அறிவித்தார். கொங்கினத்திற்கு இந்த அறிவிப்பு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது. கலைஞர் அவர்கள் கொங்குச் சமுதாய மக்களுக்குக் கொடுத்த கொடையாகவே இந்த அறிவிப்பும், அதனையொட்டி அரசாணையும் இருந்தன. அன்றைய முதல்வர் கலைஞரின் அறிவிப்பு வந்தவுடன் தமிழக அரசுக்கும், அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கட்கும் நன்றி தெரிவிக்க அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்களின் ஆலோசனை மற்றும் உதவியுடன் கோவை நகரில் **03–05–1975** அன்று ஒரு நன்றி அறிவிப்புக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

திரளான கொங்குச் சமுதாய மக்கள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்தில் முத்துக்கவுண்டர் அவர்களும் பங்கேற்றுக் கலைஞர் அவர்களுக்குக் கொங்குச் சமுதாய மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து உரையாற்றினார். கலைஞர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்துப் பொன்னாடை அணிவித்து முத்துக்கவுண்டர் நன்றி கூறினார்.

**1987** இல் அப்போதைய தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் மரணத்திற்குப்பின் **1988** இல் தமிழகத்தில் பி.சி.அலெக்சாண்டர் அவர்களின் ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. அவ்வேளையில் வேறு சில சமுதாயத்தின் பிரதிநிதிகள் ஆளுநர் அவர்களைச் சந்தித்து, கொங்கு வேளாளர் சமுதாயத்தைப் பின்தங்கிய பட்டியலில் சேர்த்தது தவறு என்றும், அதனால் அவர்கள் இனம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது என்பதையும் விளக்கி மனு அளித்து இருந்தனர். மனுவைப் பரிசீலனை செய்த ஆளுநர் அலெக்சாண்டர் அவர்கள், அம்மனுவைப்பற்றி அரசுக்குப் பரிந்துரை செய்யத் தயாராகியிருந்தார். இச்செய்தி முத்துக்கவுண்டர் அவர்களுக்கு நம்பத்தகுந்த வட்டத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது.

இச்செய்தியறிந்த முத்துக்கவுண்டர் அதிர்ச்சியடைந்தார். ஆளுநரிடமிருந்து அரசுக்குப் பரிந்துரைசென்றால், கொங்கு வேளாளர் இனம் B.C. பட்டியலிலிருந்து நீக்கப்படும் பேராபத்து இருப்பதை உணர்ந்த முத்துக்கவுண்டர் மிகவும் வேகமாகச் செயல்பட்டுத் தமிழகமெங்கும் உள்ள கொங்கின முக்கியத் தலைவர்களுக்குத் தந்தி கொடுத்துச் சென்னையில் ஓர் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

முத்துக்கவுண்டர் அவர்களின் அழைப்பை ஏற்று **13–09–1988** அன்று கோவை செழியன், பெஸ்ட் இராமசாமி, ரங்கராஜன் குமாரமங்கலம், திருச்சி தேவராசன், மோகன் கந்தசாமி, சி.கே.குப்புசாமி, கே.என்.பழனிசாமி கவுண்டர், சி.சாமிநாதன், நீதியரசர் செங்கோட்டுவேல் உட்பட 75 பேர் சென்னை அசோகா

ஹோட்டலில் கூடினர். அக்கூட்டத்தில் முத்துக்கவுண்டர், கொங்கு இனத்திற்கு ஏற்படப் போகும் பேரிடரைத் தெளிவாக விளக்கினார். அன்றைய கூட்டத்திலேயே கோவை செழியன் அவர்களைத் தலைவராகவும், பெஸ்ட் இராமசாமி அவர்களைச் செயலாளராகவும் கொண்ட "கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவை" எனும் அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது.

முத்துக்கவுண்டரின் ஆலோசனையின்படி உடனடியாக ஆளுநர் அவர்களிடம் நேரில் அளிப்பதற்காக ஒரு விரிவான மனு தயாரிக்கப்பட்டது. அந்த மனுவில், கொங்குச் சமுதாயத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் எனும் வேண்டுகோள் தக்க ஆதாரங்களுடன் வைக்கப்பட்டிருந்தது. ஆளுநர் அவர்களைச் சந்தித்து மனுவைக் கொடுத்தனர். ஆளுநர் கோவை செழியன், முத்துக்கவுண்டர் முதலானோரைப் பார்த்து, "உங்களுக்குக் குறையொன்றும் இல்லை போலும்; அதனால்தான் இத்தனை காலம் என்னைப் பார்க்க வரவில்லை" என்று கூறிவிட்டு, "வேறு சமூகத்தினர் உங்கள் இனத்தைப் பின் தங்கிய பட்டியலிலிருந்து நீக்கவேண்டும் என்று மனு கொடுத்துள்ளார்கள். அதை நான் மத்திய அரசுக்கு அனுப்பப் போகிறேன்" என்றார். ஆளுநர் சில திருமணப் பத்திரிகைகளைக் காண்பித்து, கொங்குச் சமுதாய மக்கள் முன்னேறியவர்கள் என்பதற்கு இப்பத்திரிகைகளே சான்று என்று கூறினார். கோவை செழியன் உடனே குறுக்கிட்டு, "இத்திருமணப் பத்திரிகைகள் தேடித் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டவை. இந்தப் பத்திரிகைகள் படி வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் வெறும் 10% தான். 90% மக்கள் பாமர மக்களாகவும், ஏழ்மையில் உழன்று கொண்டும் இருப்பவர்கள்தான். மேலும் பசியும் பட்டினியுமாக ஓர் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டுள்ளனர், கொங்கு இன மக்கள்". சமுதாயத்தின் பெரும்பான்மை மக்களின் ஏழ்மை நிலை பற்றி இவ்வாறு விளக்கிக் கூறி, "எனவே நீங்கள் B.C. ஐ ரத்துச் செய்ய வேண்டாம். தாங்களும் எங்கள் வாழ்க்கைத் தரத்தை மத்திய அரசுக்குத் தெரியப்படுத்துங்கள்" எனக் கேட்டுக்கொண்டார். ஆளுநர் "நான் இரண்டு கோப்புகளையும் மனுக்களையும் டெல்லிக்கு அனுப்புகிறேன்" என்று வாக்களித்தார்.

' ராஜீவ் காந்தி இரு தரப்பு மனுக்களையும் கவனமாகப் பரிசீலித்து அப்போதைய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த நரசிம்மராவ் அவர்களைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். அவரிடம் முத்துக்கவுண்டர் கொங்கு வேளாளர் இனத்தின் குறைகளை எடுத்துக்கூறினார்.

முத்துக்கவுண்டரின் மனைவி திருமதி பிரேமா. இத்தம்பதியருக்கு இளங்கனி, மாசி, இராமசாமி என ஒரு மகளும் இரண்டு மகன்களும் பிறந்தனர். திருமதி


இளங்கனியின் கணவர் திரு. வி.சி.பெருமாள் IPS (Retd) தமிழ்நாடு காவல் துறை முன்னாள் கூடுதல் இயக்குநர். சிறந்த பணிக்கான குடியரசுத் தலைவரின் விருதை இருமுறை பெற்றவர். மகன் மாசி பொது வாழ்வு, அரசியல், தொழில், கல்வி ஆகிய துறைகளில் கால்பதித்துச் சிறந்து விளங்கியவர். அகால மரணமடைந்துவிட்டார். இவருடைய மனைவி திருமதி உஷாதேவி.

அடுத்த மகன் முத்து இராமசாமி சமுதாயப்பணி, தொழில், விவசாயம் போன்றவற்றில் மிகச்சிறந்து விளங்குபவர். கிரானைட் கற்களால் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் ஏற்றுமதியில் சாதனை படைத்தவர். தந்தையின் புகழைப் போற்றிப் பரப்புவர். இவர் மனைவி திருமதி சாந்தி கணவரின் வெற்றிகளுக்குக் காரணமானவர்.

முத்துக்கவுண்டர் அவர்கள் கொங்குநாட்டு நல் முத்து. கொங்குச் சமுதாயத்திற்கு மாபெரும் தொண்டாற்றியவர். பிற்பட்டோர் பட்டியலில் கொங்குச் சமுதாயம் 1975 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டதற்குப் பாடுபட்ட மாமனிதர்களுள் ஒருவர். கொங்குச் சமுதாயம் மீண்டும் முன்னேறிய சமூகம் என மாற்றுவதற்கு ஆளுநர் ஆட்சியில் 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற நடவடிக்கைகளைச் சரியான நேரத்தில் கண்டறிந்து, அந்தப் பேராபத்திலிருந்து சமுதாயத்தைக் காத்திட்ட கொங்குமாமணி. கொங்கு அமைப்புகளை ஒன்றிணைத்து, கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையை உருவாக்கியதில் பெரும் பங்காற்றிய சமுதாயச் சிற்பி. விவசாயிகளின் முன்னேற்றத்திக்காக ஓய்வின்றி உழைத்த உத்தமர். தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பேரன்பைப் பெற்றவர். மனிதநேய மாண்பாளர்,இத்தகைய சிறப்புகள் கொண்ட அரூர் முத்துக்கவுண்டர் 07–10–1994 அன்று கோவை மருத்துவமனையில் காலமானார்.

வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அரூர் முத்துக்கவுண்டர் புகழ் போற்றுவோம்.

# கொங்கு மாமணி



## கொங்குமாமணி திரு. டி.எம்.காளியண்ண கவுண்டர்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகில் உள்ள அக்கரைப்பட்டி கிராமத்தில் முத்து நல்லியப்ப கவுண்டர் – பாப்பாயம்மாள் தம்பதியருக்கு 10–01–1921 அன்று மகனாகப் பிறந்தார். திருச்செங்கோடு அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்த பின்னர், சென்னை லயோலா கல்லூரியில் சேர்ந்து பி.ஏ. பட்டம் பெற்றார். கல்லூரியில் படிக்கும்போதே, நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார். காங்கிரஸ் கட்சியின் தூண்களுள் ஒருவராய் அன்றைய சேலம் மாவட்டத்தில் விளங்கினார். சிற்றன்னை ஜமீன்தாரிணி நல்லாயம்மாள், சித்தப்பா பரமசிவம் அவர்களால் சங்ககிரி, கஸ்தூரிப்பட்டி ஜமீன்தாராக நியமிக்கப்பட்டார்.

1947 ஆம் ஆண்டு தனது 27 ஆவது வயதில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினராய் நியமிக்கப்பட்டார். பின்னர் 1952, 1957, 1962 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இராசிபுரத்தில் இருமுறையும், திருச்செங்கோட்டில் ஒரு முறையும் வெற்றி பெற்றார். காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பதவிகளை வகித்தவர். 1967 ஆம் ஆண்டு தமிழகச் சட்ட மேலவை உறுப்பினராகப் பொறுப்பேற்றார். மேலவையின் எதிர்க்கட்சித் தலைவராய்ப் பொறுப்பு வகித்தார். அன்றைய ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்தின் (ஜில்லா போர்டு) தலைவராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். அச்சமயத்தில் ஆயிரம் அரசுப்பள்ளிகளைத் திறந்த பெருமை இவருக்குண்டு. தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர், பொருளாளர், இந்தியன் வங்கி இயக்குநர், சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் செனட் உறுப்பினர் முதலான பொறுப்புகள் வகித்துக் கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்தார்.

1947ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களில் தற்போது இவர் ஒருவரே நம்மிடையே வாழ்ந்து வருகின்றார் என்பதோடு, சுதந்திர இந்தியாவில் 37 முறை வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களித்தவர் என்ற சிறப்பையும் பெற்றுள்ளார்.


1953 முதல் தொடர்ச்சியாக 59 ஆண்டுகள் கண்ணகி விழா நடத்தியவர் திரு.டி.எம்.காளியண்ண கவுண்டர். அதே போல் 1952 முதல் திருமணி முத்தாறு திட்டத்திற்காகத் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார். திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில் நெரிசலைக் குறைக்க மற்றுமொரு மலைப்பாதை அமைக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இவர் தனது அவ்வை கல்வி நிலையம் என்னும் பெண்கள் பள்ளியின் மூலம் கடந்த 58 வருடங்களாக எட்டாம் வகுப்பு வரை பொருளாதாரத்தில் பின்தங்கிய பெண்குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளித்து வருகிறார். திருச்செங்கோடு காந்தி ஆசிரமப் பணிகளில் பெரும் ஈடுபாடு கொண்டவர் காந்தியக் கொள்கைகளைப் பின்பற்றி இன்று வரை ஒரு தூய்மையான வாழ்க்கை வாழ்ந்து வரும் இவர் நமது சமூகத்திற்குக் கிடைத்த பெரும்பேறு!

காளியண்ண கவுண்டர் கிராமப்புற ஏழை மாணவர்கள் கல்வி கற்றிடப் பேருதவிகள் புரிந்துவருகிறார். கல்விக்கட்டடங்கள் கட்டிடவும், ஆன்மிகப் பணிகளுக்காகவும் தனது சொந்த நிலத்தைத் தாராளமாகத் தானம் அளித்த வள்ளல் இவர். தொடர்ச்சியாக, கண்ணகி விழா எடுத்த பெருமை இவருக்குண்டு. கண்ணகிக்குக் கோட்டம் அமைக்க வேண்டும் என்பது இவரது நீண்ட நாளைய விருப்பம்.

கிராமப்புற ஏழை மக்களின் முன்னேற்றம், விவசாயிகளின் மேம்பாடு, கல்வியின் அவசியம் குறித்து விழிப்புணர்வூட்டல், கொங்குச் சமுதாய நலன்கள் போன்றவற்றில் ஆழ்ந்த கருத்தும் அக்கறையும் கொண்டு பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 99வயது நிரம்பியுள்ள பெரியவர் டி.எம்.காளியண்ண கவுண்டர் நம்மிடையே தற்போது நலமுடன் வாழ்ந்துவருகின்றார் என்பது நமக்கெல்லாம் பெருமை. இவரது மனைவி திருமதி பார்வதி அவர்கள். இவரது இரு மகன்கள் அமரர் திரு.கிரிராஜ் குமார் சூரிய காங்கேயன் மற்றும் வழக்கறிஞர் திரு.டி.கே.ராஜேஸ்வரன். இவரது மகள்கள் திருமதி சாந்தகுமாரி சேனாபதி, திருமதி வசந்தகுமாரி ராமலிங்கம் மற்றும் திருமதி விஜயகுமாரி முத்துராம கிருஷ்ணன் ஆகியோர்.

கொங்கு நாட்டுக்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் தன்னுடைய நாட்டுப்பற்று, தியாகம், போற்றத்தக்க அரசியல் வாழ்வு, அயரா உழைப்பு, விவசாயிகளின் முன்னேற்றம், கல்விப்பணி, தமிழ்த்தொண்டு போன்றவற்றின் மூலம் பெரும் புகழோடு வாழ்ந்து வருகின்ற பெரியவர் கொங்குமாமணி திரு.டி.எம்.காளியண்ண கவுண்டர் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்திட இறைவனை வணங்குகிறோம்.

# கொங்கு சாதனையாளர்




## டாக்டர் கே.எஸ்.சுந்தரராமன்

ஜவுளித் தொழில் நுட்பம் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் சிறப்புற விளங்கும் திரு.சுந்தரராமன் அவர்கள் **15–04–1973** அன்று பிறந்தவர். இளங்கலை மருத்துவப்படிப்பை முடித்த பின் தன் முதுகலை வணிக மேலாண்மை பட்டத்தை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பெற்றார். இருபது வருடங்களுக்கும் மேலாக முன்னணி நிறுவனங்களில் உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பக்கல்வி ஆகிய பிரிவுகளில் பல்வேறு பதவிகளை வகித்திருக்கிறார். ஜவுளித் தொழில் நுட்பத்தில் பல புதுமைகளைக் கண்டறிந்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவற்றை வணிக அளவிலும் சாத்தியப்படுத்தி இருக்கிறார்.

இவர் Shiva Texyarn Limited ன் நிர்வாக இயக்குநர் மற்றும் Firebird Institute of Research in Management என்னும் கோவையில் உள்ள பன்னாட்டு வணிகப் பள்ளியின் நிர்வாக அறங்காவலர். Shiva Texyarn Limited அன்றாடத் தேவைக்கும், பாதுகாப்புப் போன்ற சிறப்பு வாய்ந்த துறைகளுக்கும் தேவையான ஜவுளி உயர் தொழில்நுட்பப் பொருட்களைத் தயாரிக்கிறது. தற்போது Indian Technical Textile Association ன் தலைவராக இருக்கும் திரு.சுந்தரராமன் இந்தியத் தொழில் கூட்டமைப்பு, கோவை பிரிவின் தலைவராகவும், தமிழ்நாடு பிரிவின் கல்வி நடத்தாளராகவும் திறம்படப் பணியாற்றி இருக்கிறார். தேசிய அளவிலான பல வணிக மன்றங்களிலும், பல பொதுத்துறை நிறுவனங்களின் குழுவிலும் இடம் பெற்ற பெருமைக்குரியவர். தற்போது Global Kongu Foundation அமைப்பின் அறங்காவலராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொழில் நுட்பக் கல்வியில் மிகச்சிறந்து விளங்கும் டாக்டர் சுந்தரராமன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் அகிலன் ராமநாதன், ஐ.ஏ.எஸ்

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி வட்டம் ஜங்காலப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வி.ராமநாதன் – திருமதி சகுந்தலா ஆகியோருக்கு மகனாக 1966ஆம் ஆண்டுப் பிறந்தவர் டாக்டர் அகிலன் ராமநாதன்.

B.Sc., (Physics) படிப்பைச் சேலம் ஸ்ரீ சௌடேஷ்வரி கல்லூரியிலும், M.Sc., (Physics) படிப்பைக் கோவை கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், M.Phil., (Nuclear Physics) படிப்பைச் சென்னைப் பல்கலைக்கழகத்திலும், Ph.D., ஆய்வுப் படிப்பைச் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்திலும் முடித்தார்.

1996 ஆம் ஆண்டு இந்தியக் குடிமைப்பணிகள் தேர்வில் வெற்றி பெற்று மத்திய அரசில் பணியில் சேர்ந்தார். மத்திய அரசின் யூனியன் பிரதேசங்களில் உதவி ஆட்சித் தலைவர், உதவி ஆணையர், ஆட்சித்தலைவர் முதலான பொறுப்புகளை ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். பின்னர், புதுடெல்லிக்கு மாற்றப்பட்டு, மத்திய ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதலான துறைகளின் அமைச்சர்களின் செயலாளராய்ப் பணியாற்றினார். பின்னர் 2005ஆம் ஆண்டு, அரசுப்பணியிலிருந்து விலகி தமிழகத்திற்குத் திரும்பிவந்து கல்விப் பணியிலும் தொழிலிலும் ஈடுபட்டார். சென்னையில் உள்ள பாரத் நிகர் நிலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர், பாண்டிச்சேரி ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் ஆலோசகராகவும் பொறுப்புகளேற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்தார்.

தமிழக அரசு உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி மாநிலக்குழு உறுப்பினர், தமிழக அரசு தொழில் கல்வி மாநிலக் குழு உறுப்பினர், தமிழக அரசு சமச்சீர் கல்விக்கழக இயக்குநர்களுள் ஒருவர் என நியமிக்கப்பட்டுத் தன் பங்கைச் சிறப்பாகச் செய்து வருகின்றார்.

தற்போது, அக்ஷயா பொறியியற் கல்லூரித் தலைவர், காஞ்சிபுரம் அக்ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தலைவர், Hard workers Academy, Chennai (For Competitive Exams) - நிறுவனர் ஆகிய பொறுப்புகள் வகித்து வருகிறார். மேலும் தொழில் துறையிலும் கால் பதித்து British Agro Products India, ARN Food Processing Industries Pvt. Ltd. British Pharmaceuticals and Chemicals Pvt. Limited ஆகிய தொழில் நிறுவனங்களின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராகப் பொறுப்பேற்று, திறம்பட நடத்தி வருகின்றார். மேலும் தற்போது பாரத் பல்கலைக்கழகம் மற்றும் சென்னை Accord Group of Companies ஆகியவற்றின் ஆலோசகராகவும் உள்ளார்.

அறிவாற்றல், சரியான திட்டமிடல், அயரா உழைப்பு, உயர்பதவியில் பெற்ற அனுபவம் முதலான தலைமைப் பண்புகள் இவரைக் கல்வியிலும், தொழிலிலும் பல சாதனைகள் செய்யவைத்துள்ளன. எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளார் இவர். கொங்குச் சமுதாய நூல்கள் வெளியிட உதவிகள் புரிந்து வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி ஆனந்தி அகிலன் M.A., M.Phil., அக்ஷயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயக்குநராகவும், கணவரின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றி வருபவராகவும் உள்ளார். இத்தம்பதியரின் மகள் அக்ஷயா B.Sc., (Physchology) பட்டம் பெற்ற பின்னர், M.A., (H & R) இரண்டாமாண்டு படித்து வருகிறார். தற்போது சுவிட்சர்லாந்து நாட்டில், ஜெனிவா நகரில் உள்ள Human Rights Commission நிறுவனத்தில் Internship பயிற்சி எடுத்து வருகின்றார்.

கல்வித் துறையிலும் தொழில் துறையிலும் சாதனை படைத்துள்ள திரு.அகிலன் ராமநாதன் ஐஏஎஸ் (R) அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணன் பாலசந்திரன்

பேராசிரியர் பாலசந்திரன் 1956ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் நாள் திரு. கிருஷ்ணன் – சின்னம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் திரு.கிருஷ்ணன் அவர்கள் நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்து பணியாற்றிய பெருமைக்குரியவர். பள்ளிக்கல்வியை நாமக்கல் மாவட்டத்தில் உள்ள முத்துகாப்பட்டியிலும், கல்லூரிக் கல்வியைக் கந்தசாமி கண்டர் கல்லூரியிலும், ஆராய்ச்சிப்படிப்பைச் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் முடித்தார். பிறகு 1986 இல் சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், 1988 முதல் பாரதியார் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் இணைப்பேராசிரியராகவும் மற்றும் 1994 முதல் பேராசிரியராகவும், பின்னர் 2008 முதல் 2016 வரை துறைத்தலைவராகவும் பணியாற்றியுள்ளார். கணிதத்துறைத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் UGC சிறப்புநிலைப் பேராசிரியராகப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

பேராசிரியர் பாலசந்திரன் அவர்கள், 50க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு முனைவர் பட்ட வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். அவர் 450க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சிறந்த சர்வதேச ஆராய்ச்சி இதழ்களில் வெளியிட்டு உள்ளார். அமெரிக்கா, ஜப்பான், கொரியா பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். எண்ணற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆராய்ச்சி மாநாடுகளில் கட்டுரைகள் சமர்ப்பித்து, சொற்பொழிவுகளும் ஆற்றியுள்ளார். சிறந்த ஆய்வுப் பணிக்காக அமெரிக்க அரசின் ஃபுல்பிரைட் விருது பெற்றுள்ளார். கணிதவியல் ஆராய்ச்சியில் அவர் ஆற்றிய பணிக்காகச் சிறப்புமிக்க ‘சந்தனா’ விருது, தமிழ்நாடு அறிவியலறிஞர் விருது ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன. ஏராளமான சர்வதேசக் கணித ஆய்வியல் கருத்தரங்குகளில் இந்தியப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டுள்ளார்.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் அறிவியல் துறை முதன்மையராகவும், தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும், அவ்வப்பொழுது பதிவாளராகவும் பணியாற்றியுள்ளார். ஆட்சிமன்றக் குழுவிலும் மற்றும் அறிவியல் குழுவிலும் இடம் பெற்றுக் கல்வி மேம்பாட்டுக்கான சிறந்த ஆலோசனைகள் வழங்கியுள்ளார். பல்வேறு கல்லூரிகளில் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்துள்ளார். தற்பொழுது பெரியார் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராக உள்ளார். அன்னாரின் கணித ஆராய்ச்சிப் பணியால், கொங்குநாட்டில் உள்ள கல்லூரிகளும் அதன் கணித மாணவர்களும் பெரும் பயன் அடைந்துள்ளனர். கணித ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்க பெரும் முயற்சி எடுத்துக்கொண்டதன் விளைவாக, பாரதியார் பல்கலைக்கழகத்திலும், கொங்குநாட்டிலும் ஏராளமான மாணவர்கள் ஆராய்ச்சிப் படிப்பை முடித்து வெளிநாடுகளிலும், மத்திய பல்கலைக்கழகங்களிலும், ஆராய்ச்சி நிறுவனங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றனர். அன்னாரின் இப்பணி அளவிடற்கரியது.

கல்வி மற்றும் கணித ஆராய்ச்சித் துறையில் சாதனைகள் படைத்துள்ள டாக்டர் கிருஷ்ணன் பாலசந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் டாக்டர் என்.இராஜேந்திரன்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மானத்தி எனும் ஒரு சிறிய கிராமத்தில் திரு.நல்லைய கவுண்டர்– திருமதி நல்லம்மாள் ஆகியோருக்கு மகனாக 1966 இல் பிறந்தார். ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்து கல்வியால் உச்சத்தைத் தொட்டவர் இவர்.

பள்ளிக் கல்வியை மானத்தி, வேலகவுண்டம்பட்டியில் உள்ள அரசுப் பள்ளிகளில் முடித்தவர். வேலூர் கந்தசாமி கண்டர் கல்லூரியில் வேதியியல் இளங்கலைப் பட்டமும், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வேதியியல் முதுகலைப் பட்டமும் பெற்றவர். தொடர்ந்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு வேதியியல் துறையில் M.Phil மற்றும் Ph.D ஆராய்ச்சிப் பட்டங்களைப் பெற்றார்.

பின்னர், சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் வேதியியல் துறையில் விரைவுரையாளராக 1998 இல் பணியில் சேர்ந்தார். இதன் பின், ஜப்பான் சென்று National Institute for Materials Science என்ற ஆராய்ச்சி நிறுவனத்தில் மேல்நிலை ஆராய்ச்சியை 2004 இல் முடித்தார். மீண்டும், அண்ணா பல்கலைக்கழகத்தில் பணியினைத் தொடர்ந்து, தற்பொழுது பேராசிரியராக 2009 முதல் பணியாற்றி வருகிறார்.

இவர் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர் என்பதனால் பல பட்டங்களும், விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டன. குறிப்பாக, 2010 இல் Excellence in Corrosion Science & Technology Award ; 2013 இல் Active Researcher Award; 2014 இல் Meritorious Contribution Award ; 2014 இல் National Muscat NIGIS Mumbai; NCCI ; Anna University and ECSI' ஆகிய நிறுவனங்களிலிருந்து பெற்றார். மிகவும் போற்றக்கூடிய தமிழ்நாடு அரசின் சிறந்த ஆராய்ச்சியாளர் விருதை 2014 ஆம் ஆண்டு பெற்றார். இது மட்டுமல்லாமல், இந்திய அரசின் UGC-Mid-Career

Award ஐ 2017 இல் பெற்றார். இத்துடன், Meritorious Contribution Award, NIGIS Mumbai 2017 இல் பெற்றார். நம் நாட்டைக் கடந்து, வெளிநாடுகளில் பல விருதுகளையும் பெற்றுள்ளார். முத்தாய்ப்பாக, Fellow of Royal Society of Chemistry (FRSC) UK, மேலும், Fellow of NACE (FNACE), USA ஆகியவற்றை 2018 ஆம் ஆண்டு பெற்றார். அண்ணா பல்கலைக்கழகத்தின் போற்றுதலுக்குரிய விருதான Research Excellence Award 2019 இவருக்கு வழங்கப்பட்டது.

இவற்றோடு, அண்ணா பல்கலைக்கழக நூலகத்தின் இயக்குநராக **3** ஆண்டுகள் பணியாற்றினார். தற்பொழுது, பன்னாட்டுத் தொடர்புகள் மைய இயக்குநராக உள்ளார். இவர் தனது கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கச் செயல்பாடுகளுக்காக அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்சு, ஆஸ்திரேலியா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற **20** நாடுகளுக்கு மேல் பயணம் செய்துள்ளார்.

இவரின் வழிகாட்டுதலில் 27 ஆராய்ச்சி மாணவ, மாணவிகள் Ph.D பட்டம் பெற்றுள்ளனர். இவர் 150 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

இவர் சிறந்த ஆசிரியர், ஆராய்ச்சியாளர், நிர்வாகி என்ற நிலையில் மட்டுமல்லாது, ஒரு கல்வியாளராகவும் திகழ்கிறார். வேலகவுண்டம்பட்டி, நல்லிபாளையம் மற்றும் D.கூடலூரில் இயங்கி வரும் கொங்கு நாடு கல்வி நிறுவனங்களின் கவுரவ இயக்குநராக இருந்து கல்விச் சேவை புரிகிறார்.

இவர் மனைவி டாக்டர் கலையரசி இராஜேந்திரன் உதவிப் பேராசிரியராகத் தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். இவர்களின் புதல்வர்கள் R. சரண்ராஜ், R. சசிதரன் ஆகியோர் பொறியியல் பட்டப்படிப்பினை அண்ணா பல்கலைக்கழகத்தில் பயில்கின்றனர். விவசாயக் குடும்பத்தில் பிறந்த முதல் பட்டதாரியான இவர், பார் போற்றும் ஆராய்ச்சியாளராகத் திகழ்கிறார்.

கல்விச் சேவையை மகத்தான முறையில் தொடர்ந்து வருகின்ற பேராசிரியர் டாக்டர் ந. இராஜேந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கின்றது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் தீபக் பாலசுப்பிரமணியன்

டாக்டர் தீபக் பாலசுப்பிரமணியன் சென்னையில், பெற்றோர் பேராசிரியர் எம்.கே.பாலசுப்பிரமணியன் – உமாமகேஸ்வரி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். பேராசிரியர் எம்.கே.பாலசுப்பிரமணியன். சென்னை மருத்துவக் கல்லூரியில் 38 ஆண்டுகள் முதலில் மாணவராக, பின்னர் 19 ஆண்டுகளாக நியூராலஜி பிரிவில் உயிர்வேதியியல் துறைத்தலைவராகப் பணியாற்றினார். சென்னையில் நன்கு அறியப்பட்ட உமா கிளினிக்கில் லேப் நடத்திவருகிறார். பல வருடங்களுக்கு முன் கொங்கு சாதனையாளர் விருதை பெற்றார்.

டாக்டர் தீபக் பாலசுப்பிரமணியன் அவர்களின் விருப்பத்திற்கிணங்க மருத்துவம் படிக்கச் சொல்லிப் பெற்றோர் இவரை ஊக்குவித்தனர். திரு.கே.கே.இராமலிங்கம் MBBS., FRCS., DLO அவர்களை நெருங்கிய வட்டாரங்களில் பார்ப்பதன்மூலம் இவர் ஊக்கம் அடைந்து, தலை மற்றும் கழுத்துப்புற்று நோய் அறுவைச் சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றுப் பல பெருமைகளையும் பெற்றார். தலை, கழுத்து மறுசீரமைப்புத் துறையில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் இவர் ஒரு சிறப்பு மருத்துவராக திகழ்ந்தார்.

இவரது இளைய சோதரர் பேராசிரியர் நவீன் பாலசுப்பிரமணியன் MBBS, MS (Orth), DNB (Orth), Mch (Orth), MRCS (Glas), MRCS (Edin), FRCS (Glas) PHD (Orth) சவீதா பல்கலைக்கழகத்துடன் இணைந்து, எலும்புமுறிவுச் சிகிச்சைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். டாக்டர் தீபக் பாலசுப்பிரமணியன் தற்போது தலை மற்றும் கழுத்து அறுவைச் சிகிச்சை மற்றும் புற்றுநோய் துறையில் மருத்துவ இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ்.முடித்தார், பின்னர், புதுச்சேரி ஜிப்மர் ஓட்டோலரிங்காலஜி தலை மற்றும் கழுத்து அறுவைச் சிகிச்சைத் துறையில் பயிற்சி பெற்றார். அவர் தலை மற்றும் கழுத்துப் புற்றுநோய்க்கான மூன்று ஆண்டு துணைச் சிறப்புப் பயிற்சியை அங்கு மேற்கொண்டார்.

இதுவும் எம்.சி.பட்டம் பெற்றிட வழிவகுத்தது. பேராசிரியர் ஜெனார்த்தன் கிளார்க்கின் கீழ் ஆஸ்திரேலியாவின் சிட்னி ஹெட் மற்றும் நெக் கேன்சர் இன்ஸ்டிடியூட்டில் தலை, கழுத்து மற்றும் புனரமைப்பு மைக்ரோ சர்ஜரியில் ஓர் ஆண்டு மேம்பட்ட பயிற்சி முடித்தார். பின்னர் இந்தியா திரும்பிய அவர், அமிர்தாவில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

டாக்டர் பாலசுப்பிரமணியன் தலை, கழுத்து மற்றும் புனரமைப்பு அறுவைச் சிகிச்சையின் முழு நீளத்திலும் அகலத்திலும் பங்கேற்கிறார். புற்றுநோய் மற்றும் புனரமைப்பு அறுவைச் சிகிச்சை ஆகிய இரண்டிற்கும் ஒரே மாதிரியான ஆர்வத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார். தலை, கழுத்து மற்றும் மறுசீரமைப்பு அறுவைச் சிகிச்சை சம்பந்தப்பட்ட பல தேசிய மற்றும் சர்வதேசக் கூட்டங்களுக்கு அவர் ஓர் ஆசிரியராக உள்ளார். அமிர்தாவில் தலை, கழுத்து மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை இளம் மருத்துவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அனைத்து அமிர்தா பயிற்சி திட்டங்களுக்கும் அவர் ஒரு முக்கிய ஆசிரியராக உள்ளார். தேசிய மற்றும் சர்வதேச பத்திரிகைகளில் பல கட்டுரைகளை அவர் வெளியிட்டுள்ளார். மேலும் புகழ்வாய்ந்த சர்வதேசப் பத்திரிகைகளுக்கான விமர்சகராகவும் பணியாற்றுகிறார். தலை, கழுத்து மற்றும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை தொடர்பான புத்தகங்களை எழுதியுள்ளார்.

**பயிற்சி :**

- எம்பிபிஎஸ் (2004) மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் அரசுப் பொது மருத்துவ மனை, சென்னை
- எம்.எஸ். (2009) ஓட்டோலரிங்காலஜி, ஜிப்மர், புதுச்சேரி
- டி.என்.பி. (2010) ஓட்டோலரிங்காலஜி, தேசிய தேர்வுகள் வாரியம், புதுதில்லி
- MCh (2013) - தலை மற்றும் கழுத்து அறுவைச் சிகிச்சை, புற்றுநோயியல், அமிர்தா மருத்துவ அறிவியல் நிறுவனம், கொச்சி
- மேம்பட்ட கூட்டுறவுத் தலைவர். கழுத்து மற்றும் புனரமைப்பு மைக்ரோ சர்ஜரி (2014) சிட்னி. தலை மற்றும் கழுத்துப் புற்றுநோய் நிறுவனம், சிட்னி ஆஸ்திரேலியா

**சிறப்பு ஆர்வங்கள் :**

- தலை மற்றும் கழுத்துப் புற்றுநோய் அறுவை சிகிச்சை
- தலை மற்றும் கழுத்து மறு சீரமைப்பு மைக்ரோ சர்ஜரி

- முக நரம்பு அறுவைச் சிகிச்சை மற்றும் முக நரம்பு புனரமைப்பு
- உமிழ் நீர் மற்றும் தைராய்டு அறுவைச் சிகிச்சை
- தலை மற்றும் கழுத்தின் இரண்டாம் புனரமைப்பு
- டிரான்ஸ் வாய் வழிலே மைக்ரோ சர்ஜரி

**பதக்கங்கள் :**

- சிறந்த ஆராய்ச்சிக்கான டாக்டர் மா.கோபாலகிருஷ்ணன் கோல்ட் மெடல் – மொத்த குரல் வளை வளர்ச்சியில் ஃபரிஞ்சீயல் புனரமைப்பைத் தொடர்ந்து கிடைக்கும் முடிவுகள். ஒட்டோலரிஞ்ஜாலஜிஸ்டுகளின் சங்கம் – இந்தியாவின் தலை மற்றும் கழுத்து அறுவைச்சிகிச்சை நிபுணர்கள், தெற்கு மண்டல மாநாடு – அக்டோபர் 14,16,2011
- சிறந்த முதுகலைப் பட்டப்படிப்புக்கான பத்மஸ்ரீ பேராசிரியர் காமேஸ்வரன் கோல்டுமெடல் – செல்லர் – சுப்ரா செல்லார் கிரானியோஃபார்ஞ்சியோமாஸின் மேலாண்மை : ஒரு எண்டோஸ்கோபிக் டிரான்ஸ் நாசல் டிரான்ஸ் ஸ்பெனாய்டல் அணுகுமுறை. ஒட்டோலாரிஞ்ஜாலஜிஸ்டுகளின் சங்கம் – இந்தியாவின் தலை மற்றும் கழுத்து அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், தமிழ்நாடு மாநில மாநாடு – செப்டம்பர் 2008

தலை, கழுத்து மறு சீரமைப்புத்துறையின் தலைசிறந்த மருத்துவ நிபுனரான டாக்டர் தீபக் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. பிரபு பாலசுப்பிரமணியம்

இன்று நமது கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாகக் கனரகப் பொறியியல் துறையில் சாதனையாளர் விருதினைப் பெறும், சென்னையைச் சார்ந்த திரு.பா.பிரபு நமக்குப் புதியவரல்ல! நமது கொங்கு நண்பர்கள் சங்கத்தின் பால் தீராத பாசம் கொண்ட நமது முன்னாள் தலைவர் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் மூத்த மகன் ஆவார். இவரின் அப்பா பாலசுப்பிரமணியம் திருப்பூர் மாவட்டம் பல்லடத்தினைப் பூர்வீகமாகக் கொண்டவர். 1974 ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து ஒரு லேத்துடன் தனது தொழிலை ஆரம்பித்தார். தனது அயராத உழைப்பின் காரணமாக பிரிசிசன் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார்.

திரு.பா.பிரபுவின் அம்மா திருமதி பத்மாவதி, திருப்பூர் நகராட்சியின் முன்னாள் துணைத்தலைவர் திரு. சுப்பராயக் கவுண்டரின் பேத்தியாவார். திரு.பா.பிரபுவிற்கு ஒரு சகோதரர். அவர் பெயர் பா.கார்த்தி. இவரும் கனரகப் பொறியியல் தொழிலில் அண்ணனுடன் இணைந்து தொழில் செய்து வருகிறார்.

திரு.பா.பிரபு அவர்களின் வேர் கொங்கு மண்டலமாக இருந்தாலும் கிளைகள் பரப்பி விரிந்து நிற்பது நம் சிங்காரச் சென்னைதான் என்றால் அது மிகையல்ல. பள்ளிக்கல்வியை சென்னையில் உள்ள டிஏவி மேல்நிலைப்பள்ளியிலும், தனது இள நிலைப் பொறியியல் கல்வியினை, 2000ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்லூரியிலும் முடித்தார்.

அமெரிக்காவில் உள்ள நியூயார்க் அருகில் உள்ள Rochester Institute of Technology பல்கலைக்கழகத்தில் தனது முது நிலை (M.S.Heat Transfer) படிப்பை முடித்துவிட்டு அமெரிக்காவிலேயே சிறிது காலம் MTI (Micro Fuel Cell) என்கிற கம்பெனியில் பணி செய்தார். இங்குப் பணி செய்யும் போது மிகத் தீவிரமாக ஹைட்ரஜன் ப்யூஸ் செல்ஸ் மற்றும் பேட்டரி தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில்

பங்கெடுத்துக்கொண்டார். இங்கு இருக்கும் போது இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை அமெரிக்கன் சொசைட்டி மெக்கானிக்கல் என்ஜினியரிங் என்ற மாநாட்டில் சமர்ப்பித்தார். இது போலவே அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா கண்டங்களில் நடைபெற்ற மாநாடுகளில் தனது ஆய்வறிக்கைகளை வெளியிட்டு உரையாற்றியுள்ளார்.

2005ஆம் ஆண்டு அமெரிக்காவில் இருந்து சென்னை வந்தவர், தனது குடும்பத்தின் அங்கமான பிரிசிசன் குழுமத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். 2005ஆம் ஆண்டு இவர் கோவையைச் சார்ந்த ஜெயலட்சுமியை கரம் பிடித்தார். இவர்களுக்கு அனன்யா என்ற மகள் இருக்கிறார். தங்களது குடும்ப நிறுவனமான பிரிசிசன் எக்யூப்மென்ட் நிறுவனத்தினை மேம்படுத்த ஒரு முக்கியக் கருவியாக இருந்து செயல்பட்டார். தனது பொறியியல் அறிவின் காரணமாக இயந்திர பொருள் ஏற்றுமதியில் இறங்கி, தன்னை அதில் ஒரு தேர்ந்த ஏற்றுமதியாளராக நிலை நிறுத்திக்கொண்டுள்ளார். தந்தை எட்டு அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்ற பழமொழிக்கு ஏற்ப இன்று ஆயில் மற்றும் கேஸ் தயாரிக்கும் தொழிலில் உபயோகப்படும் பிராசஸ் எக்யூப்மெண்ட்ஸ் தயாரிப்பில் உலகளவில் சிறந்த கம்பெனிகளில் ஒன்றாகத் தனது பிரிசிசன் எக்யூப்மெண்டை உருவாக்கியுள்ளார்.

சமீபத்தில் ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். அது என்னவென்றால் அமெரிக்காவில் உள்ள உலகிலேயே மிகப் பிரம்மாண்டமான எக்ஸ்சான் மொபில் என்ற ஆயில் கம்பெனிக்கு, 400 மெட்ரிக் டன் எடை (4,00,000 கிலோ) கொண்ட ஹீட் எக்ஸ்சேஞ்சரை ஏற்றுமதி செய்துள்ளார் என்பது தான். இந்தப் பிரம்மாண்டமான ஹீட் எக்சேஞ்ச்சரை இருங்காட்டுக்கோட்டை தொழிலகத்தில் இருந்து சென்னைத் துறைமுகத்திற்கு நாமக்கல் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேசன் மூலம் ஏற்றுமதி செய்யும் நிகழ்வைக் கொடியசைத்துத் துவக்கிவைத்தவர் பிரிசிசன் சைண்டிபிக் உரிமையாளர் அமரர் கொங்கு மாமணி திரு.க.பழனியப்பன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

என்னதான் தொழில் துறையில் சாதனை படைத்தாலும், இந்தச் சமூகத்தின் மேம்பாட்டிற்குத் தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவாவைத் தனது லட்சியமாகக் கொண்டிருந்த பிரபு, இதனை நிறைவேற்றும் பொருட்டு நந்தம்பாக்கத்தில் உள்ள உலகளவில் செயல்படும் அரிமா சங்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளார். மேலும் தொழில் முனைவோர்களின் கூட்டமைப்பின் பொருளாளராகவும் உள்ளார்.

இளம் சாதனையாளர் பா.பிரபுவின் அப்பா திரு.க.பாலசுப்பிரமணியம் தன் இளம் வயதில், திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகில் உள்ள பனப்பாளையம் என்ற குக்கிராமத்தில் இருந்து **55** வருடங்களுக்கு முன் சென்னைக்குத் தனி ஒருவராக வந்து இன்று ஆலமரம் போலப் பரந்து விரிந்துள்ளமைக்கு முக்கியக் காரணமானவர் இவரின் தாத்தா திரு.பி.பி.கந்தசாமிக் கவுண்டர் ஆவார். சமீபத்தில் நூறாவது பிறந்த நாளை வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ள இவரின் பெயரால் பி.பி.கே. அறக்கட்டளையை பிரபு, இவரின் தம்பி கார்த்தி, இவருடைய சித்தப்பாக்களின் மகன் சரவணன், மகள்கள் சந்தனா, சுதா ஆகியவர்களுடன் இணைந்து உருவாக்கி அதன் முதன்மை நிர்வாகியாகவும் உள்ளார். இந்த அறக்கட்டளை மூலம் பல்லடம் பகுதியில் ஏழை எளிய குழந்தைகளின் கல்விக்கும், அரசுப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கும் உதவி வருகிறார்கள்.

இந்த உலகில் வாழ்வது ஒரு முறைதான்! அந்த வாழ்வைத் தன் சொந்த நலனுக்கு மட்டுமே பயன்படுத்தாமல், இந்தச் சமூகத்திற்கும் இந்த மக்களுக்கும் பயன்படும் முறையில் இன்று வாழ்ந்து வழிகாட்டிக்கொண்டிருக்கும் திரு.பா.பிரபுவிற்கு, கொங்கு சாதனையாளர் விருதினை வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

(குறிப்பு: திரு. பிரபு அவர்களுக்குத் தொழில் கற்றுக்கொடுத்து, அவருக்குக் குருவாகத் திகழும் அவரின் அன்புள்ள சித்தப்பா திரு.பி.கே.ஈஸ்வரமூர்த்தி அவர்களுக்கு இந்த விருதினைச் சமர்ப்பிக்கிறார்)

# கொங்கு சாதனையாளர்



## திரு. எஸ்.விமல் குமார்

1950 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மரவள்ளிக்கிழங்கை ஜவ்வரிசியாக மாற்றும் உற்பத்திக் காலமானது 5 நாட்களாக (120 மணி நேரம்) உள்ளது. ஸ்ரீவரலக்ஷ்மி கம்பெனியில் எஸ்.விமல்குமார் பணியாற்ற ஆரம்பித்து, படிப்படியாக முழுவதும் நவீனமயமான தானியங்கி உற்பத்தி முறைகளைக்கொண்டு கைப்படாமல், சுகாதாரமான முறையில், எவ்வித இரசாயன கலப்புமின்றி 5 மணி நேரத்தில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து International Standard க்கு இணையாக, தரமான ஜவ்வரிசி உற்பத்தியை நாளொன்றுக்கு 120 டன் என்று சாதனை படைத்துள்ளார்.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஜவ்வரிசி உற்பத்தி என்பது 1950ம் ஆண்டிலிருந்து ஒரு குடிசைத்தொழிலாகவே இருந்து வந்தது. ஸ்ரீவரலக்ஷ்மி கம்பெனியானது ஆர்.வரதராஜன் அவர்களால் மரவள்ளிக்கிழங்கிலிருந்து நாளொன்றுக்கு 2 டன் ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் சிறிய தொழிலாக 1971 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டில் அவரது மறைவுக்குப் பின் அவருடைய புதல்வர்கள் வி.அன்பழகன், வி.சுந்தரேசன் ஆகியோரால் நிர்வகிக்கப்பட்டு நாளொன்றுக்கு 20 டன் ஜவ்வரிசி உற்பத்தி என்ற அளவிற்கு வளர்ச்சி பெற்றது. ஸ்ரீவரக்ஷ்மி கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பினை வி.சுந்தரேசன் அவர்கள் முழுவதுமாக ஏற்றுக் கொண்ட பின் அதுவரை Manual முறையில் இருந்த ஜவ்வரிசி உற்பத்தியானது Semi Automatic முறைக்கு மாறி நாளொன்றுக்கு 40 டன் ஜவ்வரிசி உற்பத்தி என்று உயர்ந்தது. வி.சுந்தரேசன் அவர்களின் புதல்வர் எஸ்.விமல்குமார் அவர்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து தனது தந்தையாருடன் இணைந்து பணியாற்ற ஆரம்பித்தார்.

இவர் பணியாற்ற ஆரம்பித்தபோது Semi Automatic உற்பத்தி முறையில் மரவள்ளிக்கிழங்கை ஜவ்வரிசியாக மாற்ற 5 நாட்கள் தேவைப்பட்டது. இந்நிலையில்,

எஸ்.விமல்குமார், முழுவதும் தானியங்கி உற்பத்தி முறையில் தொழிற்சாலை செயல்பட, உற்பத்தி செயல் முறைகளில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தார். இவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோதே சென்ட்ரிபியூகல் பற்றிய ப்ராஜக்ட்(Starch Milk ல் இருந்து West Starch ஐ பிரித்தெடுப்பது) செய்ததால் உற்பத்தி செயல் முறைகளில் இந்த மாற்றத்தினை எளிதில் கொண்டு வர முடிந்தது. ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ் போன்ற வெளிநாடுகளில் உள்ள, உருளைக்கிழங்கில் இருந்து ஸ்டார்ச் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு நேரில் சென்று பார்த்து அங்குள்ள தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்துரையாடித் தன் திறனை மேம்படுத்திக்கொண்டார். இந்த அடிப்படையில் பல்வேறு இயந்திர உற்பத்தியாளர்களுடன் ஆலோசித்து ஜெர்மனி, நெதர்லேண்ட்ஸ் போன்ற வெளிநாடுகளிலிருந்து மரவள்ளிக்கிழங்கிற்கு ஏற்ற Customised Machineries ஐ தருவித்து அவற்றைப் படிப்படியாக நிறுவி, 2015ஆம் ஆண்டு முதல் கைப்படாமல், சுகாதாரமான முறையில், எவ்வித இரசாயனக் கலப்புமின்றி முழுவதும் நவீனமயமான தானியங்கி உற்பத்தி முறைகளைக் கொண்டு 5 மணி நேரத்தில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து International Standard க்கு இணையாக தரமான ஜவ்வரிசியை உற்பத்தி செய்து சாதனை படைத்தார். இந்த உற்பத்தித் தொழில் நுட்பமானது எந்தவொரு ஜவ்வரிசி தொழிற்சாலையிலும் இல்லாதது மட்டுமின்றி மரவள்ளிக்கிழங்கை ஜவ்வரிசியாக மாற்றும் உற்பத்தி காலமும் இன்று வரை 5 நாட்கள்தான்.

தற்போது ஸ்ரீ வரலக்ஷ்மி கம்பெனியானது நாளொன்றுக்கு 120 டன் ஜவ்வரிசி உற்பத்தியை எட்டியுள்ளது. ஸ்ரீ வரலக்ஷ்மி கம்பெனியின் ஜவ்வரிசியானது வால்மார்ட், டிமார்ட், ரிலையன்ஸ், மெட்ரோ, பிக் பஜார் ஃப்பூச்சர் குழுமம், ஸ்பார் போன்ற பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

காலம் காலமாக மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஜவ்வரிசி மற்றும் ஸ்டார்ச் மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்த நிலையிலிருந்து ஸ்ரீ வரக்ஷ்மி கம்பெனியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எஸ்.விமல்குமாரின் தீவிரச் சிந்தனையால் 2015ஆம் ஆண்டு முதல் மரவள்ளிக்கிழங்கு மாவிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான ஜவ்வரிசி அப்பளம் மற்றும் ஜவ்வரிசி வடகம் ஆகியவற்றை 12 வகையான சுவைகளில் செயற்கை நிறங்களோ, தீங்கு விளைவிக்கும் இரசாயனங்களோ இல்லாமல் நிறம் மற்றும் கூடுதல் சுவைக்காக Natural Vegetable Juice சேர்த்துப் படிப்படியாக உற்பத்தி செய்து இந்தியா முழுவதும் மார்க்கெட் செய்துள்ளார். இதனால், தற்போது இந்தியாவிலேயே மரவள்ளிக்கிழங்கு மாவிலிருந்து நாளொன்றுக்கு 30 டன் ஜவ்வரிசி அப்பள

வகைகளை உற்பத்தி செய்து வரும் ஒரே நிறுவனம் ஸ்ரீ வரலக்ஷ்மி கம்பெனி மட்டும்தான் என்ற சாதனையை எட்டியுள்ளார். இது தவிர, எப்போதும் அவசர கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலகத்தில் மக்களுக்கு நிதானமாக சமைத்து சாப்பிடக்கூட நேரமில்லாத காரணத்தால் ஜவ்வரிசியிலிருந்து தயாரிக்கப்படும் Ready to Eat ஜவ்வரிசி கிச்சடி, Ready to Eat ஜவ்வரிசி வடை ஆகியவற்றை எஸ்.விமல்குமார் அவர்கள் விரைவில் மார்க்கெட்டில் அறிமுகப்படுத்தவுள்ளார்.

ஒரு காலத்தில் மரவள்ளிக்கிழங்கு என்பது வேகவைத்துச் சாப்பிடவும், ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி தயாரிப்பதற்கு மட்டும்தான் என்றிருந்த நிலையை மாற்றி, மரவள்ளிக்கிழங்கிலிருந்து ஏராளமான மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களையும் வெற்றிகரமாகத் தயாரிக்க முடியும் என்பதைத் தனது இடைவிடாத முற்போக்குச் சிந்தனை, தளராத முயற்சி மற்றும் கடின உழைப்பின் மூலம் நிரூபித்துக்காட்டியுள்ளார், எஸ்.விமல்குமார் என்ற தனிமனித இளம் சாதனையாளர். தவிர கைப்படாமல், சுகாதாரமான முறையில், எவ்வித இரசாயனக் கலப்புமின்றி முழுவதும் நவீனமயமான தானியங்கி உற்பத்தி முறைகளைக் கொண்டு 5 மணி நேரத்தில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து International Standard க்கு இணையாகத் தரமான ஜவ்வரிசியை உற்பத்தி செய்ய முடியும் என்பதை நிரூபித்துச் சாதனை படைத்துள்ளார் இந்தச் சாதனையாளர்.

இவருடைய இந்த வித்தியாசமான உற்பத்தி அணுகுமுறையால் மரவள்ளிக்கிழங்கிற்கு நல்ல எதிர்காலம் இருப்பதோடு மரவள்ளி பயிரிடும் இலட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமும் மேம்படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

இந்தச் சாதனைக்காக, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் திரு.எஸ்.விமல்குமார் அவர்களுக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



**திருமதி வ.சு.சரண்யா ஐ.எஃப்.எஸ்.**

இந்திய வெளியுறவு அமைச்சகத்தில் பயிற்சி அதிகாரியாக இருக்கும் திருமதி வ.சு.சரண்யா, திரு.பெ.சுப்பிரமணியன் – திருமதி பொ.வளர்மதி தம்பதியருக்கு மகளாக தேவேந்திர குலத்தில் பிறந்தவர்.

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மேல்நிலைப்பள்ளியிலும், குறிஞ்சி மேல்நிலைப்பள்ளியிலும் பள்ளிப்படிப்பை முடித்தார். பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக்கல்லூரியில் இளங்கலை பொறியியல் படிப்பையும், கிண்டி பொறியியல் கல்லூரியில் முதுகலை பொறியியல் படிப்பையும் நிறைவு செய்தார். 2011 முதல் 2013 வரை டாடா சேவை நிறுவனத்தில் பணியாற்றிய பின், 2017இல் இந்தியக் குடிமைப் பணித்தேர்வில் வெற்றி பெற்று இந்திய வெளியுறவுப் பணியில் இணைந்தார். திருமணத்திற்குப் பிறகு இவர் ஐ.எஃப்.எஸ். தேர்வு எழுத மிகவும் ஊக்கமளித்து உதவிய இவரது கணவர் திரு.இரா.சரண்யன் அவர்களது பண்பு போற்றி பாராட்டத்தக்கது. இவர்களுக்கு நித்தாரா சரண்யன் என்கிற மகள் இருக்கிறார்.

இவரது தந்தையார் திரு.பெ.சுப்பிரமணியன் அவர்கள் கூட்டுறவுத் துறையில் துணை இயக்குநராகப் பணி நிறைவு பெற்றவர். இவரது மாமனார் திரு.ந.இராமசாமி அவர்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் சட்டப் பிரிவு மேலாளராகப் பணி நிறைவு பெற்றவர்.

வெளியுறவுத்துறைப் பணியில் திருமதி சரண்யா ஐ.எஃப்.எஸ். மென்மேலும் சாதனை படைக்க வாழ்த்துகள் தெரிவித்து, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் இவருக்கு ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி மகிழ்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. ஆர்.வேலுசாமி

ஈரோடு மாவட்டம், வீரப்பன்சத்திரம் சாந்தாங்காட்டுத் தோட்டம் திரு.எம்.ராமசாமிக்கவுண்டர் – ருக்மணியம்மாள் தம்பதியருக்கு மகனாக 1954ஆம் ஆண்டு ஆர்.வேலுசாமி அவர்கள் பிறந்தார். குலம் கூறை குலம். விவசாயக் குடும்பம் என்பதால் சிறு வயதிலேயே ஏர் ஓட்டுதல், ஏற்றம் இறைத்தல், பாத்திக்கட்டுதல், ராகி, கம்பு தாம்பு அடித்தல் என அனைத்து விவசாய வேலைகளிலும் ஈடுபாடுகொண்டிருந்தார். தற்போது நிதி நிறுவனங்கள் நடத்தி வருகிறார்.

ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு (பி.ஏ.) பயிலும்போது, தமிழ்ப் பேரவையின் மூலமாக, கலைஞர் கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், எழுத்தாளர் ஜெயகாந்தன் மற்றும் சான்றோர்களைக் கல்லூரிக்கு அழைத்து வந்து சிறப்புரையாற்றச் செய்து பாராட்டுப் பெற்றார்.

கொங்கு வேளாளர் சமுதாய மக்கள் தங்களது இல்லத் திருமணம், சீர், குலக் கூட்டங்களை நடத்திடச் சமுதாயக்கூடம் கட்டவேண்டும் என்ற நோக்கத்தில் 1975ல் கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம் உதயமானது. ஈரோடு சம்பத் நகரில் 1988 ஆம் ஆண்டு கொங்கு கலையரங்கம், 1994ஆம் ஆண்டு கொங்கு மஹால், 2000ஆம் ஆண்டு சங்க வெள்ளிவிழா ஆண்டுக் கட்டிடம் ஆகியவை உருவாகிட அரும்பாடுப்பட்டவர்களுள் இவரும் ஒருவர். கொங்கு வேளாளர் இளைஞர் சங்கத்தின் செயலாளராக 1991 முதல் 1997 வரை பணியாற்றிய போது, கொங்குச் சமுதாய மக்களுக்காக மணமக்கள் தேர்வு விழா, சுயம்வரம் நிகழ்ச்சி நடத்தப்பட்டு, கொங்குத் திருமணத் தகவல் மையம் ஆரம்பிக்கப்பட்டது.

2004 முதல் 2007 வரை சங்கத் தலைவராகப் பணியாற்றிய போது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், பெங்களூர் கர்நாடகக் கவுண்டர் சேவா சங்கம் மற்றும் கொங்கு வேளாளர் சங்கங்களுடன் இணைந்து 10–10–2004 இல் கொங்குக் கலையரங்கில் கொங்கு மணமக்கள் தேர்வு விழா கவுன்சிலிங் இரண்டாவது முறையாக நடத்தப்பட்டது.

வருடந்தோறும் வசதி குறைவான மாணவச் செல்வங்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கல்வி நிதியுதவி வழங்கி வருகின்றார். கொங்கு சித்த மருத்துவ மையத்தின் மூலம் பக்கவிளைவுகள் இல்லா இயற்கை மருத்துவமுறை பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், மருந்துகளும் இலவசமாக வழங்கியது, சர்க்கரை நோயாளிகளுக்கான இலவச கண்விழித்திரை பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் கண்டறிதல் முகாம் நடத்தியது, பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்தியது, கோடைக்காலத்தில் பொதுமக்களுக்கு இலவசமாக நீர் மோர் மற்றும் கம்பங்கூழ் வழங்கியது, 17 ஆண்டுகளாக பத்தாவது மற்றும் பணிரெண்டாவது தேர்வில் முதலிடம் பெற்ற மாணவச் செல்வங்களை ஊக்கப்படுத்தும் வகையில் முதல்வன் விருது, நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்குப் பாராட்டு, வயதானவர்களுக்கு மூட்டுமாற்று அறுவை சிகிச்சை முகாம் நடத்தியது, புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, நாகைப் பகுதி பொதுமக்களுக்கு பொருளுதவி வழங்கியது என அனைத்துச் சேவை திட்டங்களிலும் இவரது நிறைவான பங்களிப்பு உண்டு.

கொங்கு நாட்டுத் தங்கம் நடிகர் சிவகுமார் அவர்கள் தலைமையில் 09–10–2005 ஆம் தேதி நடைபெற்ற பதினொரு ஜோடிகள் இலவசத் திருமண விழாவில் மணமக்களுக்கு பட்டு வேஷ்டி, புடவை, தங்கத் தாலி மற்றும் சீர்வரிசைப் பொருட்களை ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் வழங்கியதும் மற்றும் ஈரோடு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் உயர்திரு. ஆர்.சிவக்குமார் ஐபிஎஸ் தலைமையில் 24–12–2017 அன்று நடைபெற்ற புதியதாகத் திருமணமான 10 ஜோடி மணமக்களுக்கு நான்கு லட்சம் ரூபாய் மதிப்பிலான 51 சீர்வரிசைப் பொருட்களை வழங்கியதும் இவரது வாழ்க்கையில் மனநிறைவான நிகழ்வாகும்.

5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஈரோடு வீரப்பன் சத்திரம், மாணிக்கம்பாளையம், பாசூர் அரசுப் பள்ளிகளில் மாணவ மாணவியர் பயன்பாட்டிற்குக் கழிப்பிட வசதி, குடிநீர்த்தொட்டி, வகுப்பறைகளுக்கு மேஜை, நாற்காலி, கடம்பூர், பர்கூர் மலைவாழ் குழந்தைகளுக்கு வகுப்பறை கட்டிக்கொடுத்தது என இவர் ஈரோடு சுப்ரீம் அரிமா சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய போது செய்திட்ட சேவைத் திட்டங்களில் சில. இவரது இல்லத்தில் சிறு நூலகமும் அமைத்துள்ளார்.

ஈரோடு இரத்ததான சங்கத்தின் அறங்காவலர், உயிர்காக்கும் உன்னத சேவையில் இவர் 65 முறை உதிர தானம் செய்துள்ளார். 25 ஆண்டுகளாக இரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு ஒரு லட்சம் யூனிட் இரத்தம் தானமாகப் பெற்று அதன்மூலம் பல மானிட உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. நண்பர்களுடன்

இணைந்து அரிமா டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்தி அதன் சொந்த இடத்தில் 2012 முதல் செயல்பட்டு வரும் இரத்த வங்கி மூலம் 24 மணி நேரமும், உயிர் காத்திட இரத்தம் வழங்கும் சேவை நடைபெற்று வருகிறது.

இவர் சார்ந்த ஈரோடு சுப்ரீம் அரிமா சங்கத்தின் மூலம் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், ஈரோடு கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம் ஆகியோருடன் இணைந்து நம்பியூர், பங்காளப்புதூர், அத்தாணி, கோபி, அரச்சலூர், மொடக்குறிச்சி, காங்கேயம் ஆகிய கிராமப்புறப் பகுதிகளில் இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்தி 35,000 நபர்களுக்கு இலவசமாகக் கண்புரை அறுவைசிகிச்சை செய்யப்பட்டு, IOL லென்ஸ் பொருத்தப்பட்டது.


கண்களுக்கு மரணமில்லை; ஆண், பெண், பெரியவர், சிறியவர் என்ற பேதமில்லை. வயது வரம்பின்றி அனைவரும் கண்தானம் செய்யலாம் என்னும் தீவிர விழிப்புணர்வுப் பிரச்சாரம் மூலம் இறந்த பின் மண்ணில் புதைக்கப்பட்டு அல்லது எரியூட்டப்பட்ட இருந்தவர்களின் 1000 ஜோடி கண்களைத் தானமாகப் பெற்று, 2000 நபர்களுக்கு பொருத்திக் கண்பார்வை கிடைத்திடச் செய்து மானிடத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

ஈரோடு பைனான்சியர்ஸ் அசோசியேசன், ஈரோடு பைனான்சியர்ஸ் வெல்ஃபேர் டிரஸ்ட் ஆகியவற்றின் துணைத்தலைவர், ஈரோடு டென்னிஸ் கிளப்பின் செயலாளர், ஈரோடு ஸ்போர்ட்ஸ் டிரஸ்ட்டின் அறங்காவலர் மற்றும் முன்னாள் தலைவர் முதலான பொறுப்புகள் ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறார்.

மனைவி வி.நாகரத்தினம், மகன்கள் வி.ஜெயந்த், வி.ராகவேந்திரன், மருமகள்கள் ஜெ.சகானா, ஆர்.சஞ்சனா, பேரன் ஜெ.எஸ்.அத்விக், பேத்தி ஆர்.தியா, சம்பந்தி டி.ஆர்.நடராஜன் (விஎம்டி மஹால்) சகோதரிகள், மைத்துனர்கள், பவிஷ்பார்க் சாரதாம்பாள் பழனிசாமி, சகுந்தலா முத்துசாமி (கொங்கு நண்பர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினர்)

பேருதவிகள் பல புரிந்து, மக்கள் பணியாற்றிச் சேவைகள் செய்துவரும் திரு. வேலுசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. சூர்யகாந்தன்

17–07–1955 அன்று மாரப்ப கவுண்டர் – சின்னம்மாள் தம்பதியருக்கு மகனாக விவசாயக் குடும்பத்தில் தோன்றியவர் திரு. சூரியகாந்தன் அவர்கள். செம்பூதன் குலத்தைச் சேர்ந்த இவரது இயற்பெயர் திரு.மா.மருதாசலம். தமிழ்த்துறைப் பேராசிரியராக கோவை எஸ்.என்.ஆர்.கல்லூரி, அரசுக் கலைக்கல்லூரி, பி.எஸ்.ஜி. கலைக்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 28 ஆண்டுகள் பணியாற்றி 2018 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றவர். இளம் வயதிலேயே பாரதியார் மற்றும் பாரதிதாசன் கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். தீபம், தாமரை, வானம்பாடி இதழ்கள் இவரது படைப்பாற்றலுக்குத் தூண்டுதலாக அமைந்தன.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்கள் என அனைத்து வடிவங்களிலும் இவரது படைப்பாற்றல் மிளிர்ந்தது என்றே கூறலாம். மேலான இவரது படைப்புகள் மனிதன், செம்மலர், தீபம், நீலக்குயில், வானம்பாடி, புதிய பார்வை சுபமங்களா, அமுதசுரபி, கணையாழி, ஓம் சக்தி, தாய், குங்குமம், ஆனந்த விகடன், கல்கி போன்ற பல இதழ்களில் வெளிவந்துள்ளன. இதுவரை சிவப்புநிலா, இவர்கள் காத்திருக்கிறார்கள், வீர வம்சம் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள், 12 சிறுகதைத்தொகுப்புகள், ஏழு கட்டுரை நூல்கள், 13 சமூக நாவல்கள் எழுதியுள்ளார். இவரது மானாவாரி மனிதர்கள், பூர்விக பூமி ஆகியவை புகழ்பெற்ற சமூக நாவல்கள் ஆகும். இவை கொங்கு மண்ணின் இரட்டைக் காப்பியங்கள் எனப் புகழ் பெற்றவை.

இவரது 17 நூல்கள் மலையாளம், இந்தி, ஆங்கிலம்,தெலுங்கு, கன்னடம், மாரட்டியம் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் தமிழகத்தின் பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளுக்குப் பாட நூல்களாக அமைந்துள்ளன. இதுவரை இவரது படைப்புகளை மையப்பொருளாக்கி ஆய்வுகள்


செய்து 25 பேர் முனைவர் பட்டமும், 85 பேர் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றுள்ளனர். தற்போது 12 பேர் ஆய்வுப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர் தமிழக முன்னாள் முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்களின் 'தாய்' வார இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமரர் அகிலன் நினைவு விருது இலக்கியச் சிந்தனை விருது, இலக்கிய வீதி விருது தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற விருது, பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்ச்சான்றோர் விருது, உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். அகில இந்திய வானொலியின் கோவை வானொலி நிலையத்தில் பகுதிநேர அறிவிப்பாளராக 30 ஆண்டுகள் பணியாற்றியவர். நூற்றுக்கும் மேற்பட்ட இசைப் பாடல்கள் இயற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. இவர் கோவை கோனியம்மன் குறித்து எழுதிய பாடல்கள் பாடகி பி சுசீலா அவர்களால் தயாரிக்கப்பட்டு HMV நிறுவனத்தின் இசை ஆல்பமாக வெளிவந்து மிகவும் பிரபலமடைந்தது.

1974 இல் தாமரை இதழில் வெளியான "தண்டிக்கப்படாத குற்றவாளிகள்" இவரது முதல் சிறுகதையாகும். இவரது முதல் கவிதை 1983 இல் 'மனிதன்' இதழில் கோவை பெருமாநல்லூரில் விவசாயிகள் மீதான துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்கள் குறித்து எழுதப்பட்டதாகும். அதன் பின் தொடர்ச்சியாகக் கொங்கு மண்ணின் விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்க்கையைக் கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து பதிவு செய்து வருகிறார். நியூ செஞ்சுரி நிறுவனம் சூரியகாந்தன் அவர்களின் படைப்பிலக்கியம் குறித்த திறனாய்வுக் கட்டுரைகளை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது.

தமிழ் இலக்கிய உலகில் விவசாயம் சார்ந்த படைப்புகளை வைத்துச் செம்மண் இலக்கியம் என்ற வகைமையை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்.

எழுத்தாளர், கவிஞர், இதழாசிரியர், இசைப்பாடலாசிரியர் எனத் தமிழுக்குத் தொண்டாற்றி, கொங்கு மண்ணிற்கும் பெருமை சேர்க்கும் பேராசிரியர் திரு. சூரியகாந்தன் அவர்களுக்கு, 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. திரில் வீரா

“வீரா என்னும் விதை”

“சாகசம்” அது இவரது இன்னோர் பெயர். “த்ரில்” அது இவர் இவரது பார்வையாளர்களுக்குக் கொடுக்கும் இன்ப அதிர்ச்சி. “வீரம்” அது இவரது இயற் பெயர். ஆம். திரில் வீரா என்கிற அசாதராண மனிதரின் கதை இது. சென்னை கே.கே.நகரில் வசிக்கும் வீரமணி என்னும் திரில் வீரா ஓர் உலகச் சாதனையாளர், தர்மபுரி மாவட்டம், மொரப்பூரை அடுத்த ஆர்.கோபிநாதம்பட்டி என்ற ஒரு கிராமத்தை சேர்ந்த இளைஞர். இவரது தந்தை ஆதிமூலம் ஒரு விவசாயி; தாயார் சித்ரா ஓர் இல்லத்தரசி. ஒரு சகோதரியும் உள்ளார். தர்மபுரி மாவட்டம் அரூரில் உள்ள ERK Matric. Hr.Sec. பள்ளியில் இவரது பள்ளிப்படிப்பை முடித்தார். பாலகோட்டில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் டிப்ளமோ படித்தார்.

இவர் தனது பள்ளிப்பருவத்தில் இருந்தே மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றார். விளையாடும்போதே மற்ற மாணவர்களை விடத் திறமையாகச் செயல்பட்டுப் பல பதக்கங்களையும், பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். தனது பள்ளிப்பருவத்திலிருந்தே கின்னஸ் உலக சாதனைகளைப் பற்றித் தெரிந்துகொண்ட வீரா, தானும் ஓர் உலக சாதனையாளராக வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். இதற்காகப் பல்வேறு வகையான முயற்சிகளையும் பயிற்சிகளையும் மேற்கொண்டார். தனது நண்பர்களிடம் தனது சாகசங்களைச் செய்து காட்டிய பொழுது, அவர்கள் அதனை அலட்சியப்படுத்தியது மட்டுமல்லாமல் கேலியும் செய்தனர். தன் உயிரைப் பணயம் வைத்து, தான் செய்து காட்டிய சாகசத்தைத் தன் நண்பர்களே கண்டுகொள்வதில்லை என்பதை நினைத்து மனவேதனையில் இருக்கும் பொழுது, மகேந்திரன் என்ற நண்பரைச் சந்தித்தார். மகேந்திரனும் ஒரு சாதனையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. பாம்பின் கால் பாம்பறியும் என்கிற பழமொழிக்கேற்ப வீராவுடைய

சாகசச் செயல்களைப் பார்த்த மகேந்திரன், வீராவைத் தொலைக்காட்சிகளில் தன் சாகசத்தை நிகழ்த்துமாறு அறிவுரை வழங்கினார். மகேந்திரனின் ஆலோசனைப்படி முதன்முதலில் கலைஞர் தொலைக்காட்சியில் இவரது சாகசங்கள் வெளிவந்தன. இவரது திறமையைக் கண்டு அலட்சியப்படுத்திய நண்பர்களும், உறவினர்களும் வியந்தார்கள்.

வீராவின் பெற்றோர்கள் வீரா தன் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்பினார்கள். அச்சமயத்தில் அவரது சகோதரி கவுதமி வீராவின் திறமைகளையும், குறிக்கோளையும் புரிந்துகொண்டு ஊக்கமும், ஆதரவும் அளித்தார். அதன்பின் இவர் தன் விடாமுயற்சியுடன் பல்வேறு வகையான பயிற்சிகளை மேற்கொண்டு, ஒரு முறையான பயிற்சியாளர் கூட இன்றித் தனக்குத்தானே பயிற்சியளித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது சாதனைத் தாகம் இவரைப் பலவிதமான சாசங்களை நிகழ்த்தச் செய்தது. இவரது விடாமுயற்சியின் பலனாகத் தென் ஆப்பிரிக்கச் சாதனையாளரது Fire Blower (3.43 Meter Fire Length) சாதனையை முறியடித்து Fire Blow on 3.85 Meter நீளத்திற்கு நிகழ்த்திச் சாதனை புரிந்தார்.

அதன் பின் சன் தொலைக்காட்சித் தொகுப்பாளர்கள் இவரது சாகசங்களையும், சாதனைகளையும் அறிந்து இவரது கிராமத்திற்கு விரைந்தார்கள். “நிஜம்” என்ற நிகழ்ச்சியில் இவரது சாகசங்கள் உலகம் முழுவதும் காட்டுத் தீ போல் பரவின. இதன்மூலம் பெற்றோர்களும் ஊர்மக்களும் மிகவும் பெருமையடைந்தனர். வீரா தர்மபுரி மாவட்டத்தில் தனக்கெனத் தனி அடையாளத்தைத் தேடிக்கொண்டார் என்று சொன்னால் அது மிகையாகாது. அதன்பின் பல தொலைக்காட்சி நிறுவனங்களிடமிருந்து இவருக்கு அழைப்பு வந்த வண்ணம் இருந்தது. தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, இந்தி, கன்னடம் போன்ற பிற மொழித் தொலைக்காட்சிகளிடமிருந்தும் அழைப்புகள் வந்தன. பின்னர்ப் புகழ் வந்தது.

பல நிகழ்ச்சிகளில் சுலபமாகப் பங்கேற்கும் விதமாகச் சென்னை கே.கே.நகரில் வசித்து வருகிறார். முன்பின் அறிமுகமில்லாத சென்னை மாநகரில், இவரது சொந்த முயற்சியின் மூலமாகப் பல்வேறு கலைகளை, சாகசங்களைக் கற்று தேர்ந்தார். சிலம்பரம், நடனம், ஜிம்னாஸ்டிக், தீ நடனம், ஆஸ்ட்ரிச் நடனம், சக்கர நடனம், ஜக்லிங் இவையெல்லாம் இவரது சில திறமைகளாகும். சென்னையில் அறிமுகமான நண்பர் ரேபோ கணேஷ் உதவியுடன் பல்வேறு வகையான சின்னத்திரை நட்சத்திரங்களுடன் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். பின்பு அறிமுகமான நண்பர் கோகுல், வீராவின் திறமையை மேலும் ஊக்குவித்துக்

கலைஞர் தொலைக்காட்சியின் ‘மானாட மயிலாட’ என்கிற நடனப் போட்டி நிகழ்ச்சியில் பங்கேற்கச் செய்தார். அதுமட்டுமில்லாமல் வீரா வெளிநாட்டுக் கலையான Juggling கலையை மிகவும் ஆர்வத்துடன் வளர்த்துக்கொண்டார். இதற்குப் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்தையும் வெளிநாட்டிலிருந்து வரவழைத்துத் தன் பயிற்சிகளை மேற்கொண்டார். Unicyle ஐ நியூஸிலாந்திலிருந்து வரவழைத்து, வெளிநாட்டவர்களின் பல வீடியோக்களை மட்டுமே வைத்து, யாருடைய ஆலோசனையும், எவ்வித முறையான பயிற்சியாளரும் இன்றித் தானே தனக்குப் பயிற்சியளித்து கொண்டார். Juggling ஐ தனது Profession ஆக கொண்டு நான்கு Football களை வைத்து Juggling செய்து தென் இந்தியாவின் No.1 Juggler ஆகத் திகழ்கிறார். இதன்மூலம் பல தொலைக்காட்சிகளில் Juggling செய்து வருகிறார்.

| | | |
|---|---|---|
| Bombay Colours TV | - | India Govt. Talent Show |
| Hyderabad-Z-Telugu | - | Atta Show |
| Kalaignar TV | - | மானாட, மயிலாட & சாகசக் கலாவல்லவன் |
| Jaya TV | - | ஜெயிக்கப்போவது யாரு ? |
| Mazhavil Manorama | - | Ukkiramujaal |
| Vijay TV | - | ஜோடி நெம்பர் 1 |
| Kannada Colours | - | Maja Talkies |

இது மட்டுமல்லாமல் பலதரப்பட்ட Award Show, இசை வெளியீட்டு விழா Corporate Company Shows, Event Shows, Birthday Party & Other Party Shows, School & College Functions இல் தனது சாகசங்களை நிகழ்த்தி வருகிறார். தமிழ்நாடு மட்டுமல்லாமல், வேறு மாநிலங்கள், வெளிநாடுகளென்று 15 நாடுகளில் 1500க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் களம் கண்டுகொண்டு இருக்கிறார். தீக்கோழி நடனத்தின் (Ostrich Dance) போது தீக்கோழி போல் தனது உடல் அமைப்பை மாற்றிக்கொண்டு நடனம் புரிவது பெரியோர்கள் மட்டுமல்லாது குழந்தைகளையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது. இவரது பலதரப்பட்ட திறமையின் காரணத்தால் திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்பும் தேடி வந்தது. வித்தியாசமான பல வேடங்களில் திரைப்படங்களிலும் நடித்துக்கொண்டு வருகிறார். இவர் கலைமணி பட்டம், சிறந்த கலைஞர் விருது, சிறந்த இளைஞர் விருது, சிறந்த என்டர்டைனர், சிறந்த வெரைட்டி பெர்பார்மர் போன்ற பல விருதுகளைப்

பெற்றுள்ளார். அடுத்து வீராவின் இலக்கு இன்னும் ஓர் உலகச் சாதனை படைக்கவும் தீவிரமாகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

World Longest Unicycle Knife Juggling எனும் சாதனையை இன்னும் ஒரு மாதத்தில் சென்னையில் நிகழ்த்த இருக்கிறார். வீராவின் குறிக்கோள். World Top Juggler வரிசையில் இடம்பெறுவதே ஆகும். இத்துறைக்கு வரும்பொழுது இவரைக் கேலிசெய்த அனைவரும் இன்று இவரின் திறமையை எண்ணி வியக்கிறார்கள். வீராவின் சாதனைகளையும், கலைத்துறையில் இவரின் வளர்ச்சியையும் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள்.

இப்போது இவரை அனைவரும் “திரில் வீரா” என்றே அழைக்கின்றார்கள். இப்பெயருக்குப் பொருத்தமானவர் என்றே இவரைக் கூறலாம் இவரின் அடுத்த இலக்கு World Longest Unicycle Knife Juggling உலக சாதனையாளராக வேண்டுமென்பது. திறமைகளை வைத்துக்கொண்டு நம்மால் முடியுமா ? என்று நினைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த த்ரில் வீரா ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

Thrillveera Talent Academy யில் தான் கற்ற கலையைக் கற்பிக்க ஆரம்பித்து, இப்போது மேலும் ஒரு பரிமாணம் எடுத்திருக்கிறது இவரது நிறுவனம். ஆம், திரில் வீரா என்டேர்டைன்மென்ட். இது மக்களை முழுக்க முழுக்க மகிழ்விக்கத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சென்னை, பெங்களூரு எனத் தொடங்கிக் கடல் கடந்து கத்தார் நாடு வரை தன் அலுவலகங்களை நிறுவியிருக்கிறது இந்நிறுவனம்.

“உயர்ந்து நிற்கும் மரங்களெல்லாம்... என்றோ ஒருநாள் விதைகளாக... மண்ணில் விழுந்தவையே”....

சாகசங்கள் புரிவதில் வியக்க வைக்கும் சாதனை புரிந்துள்ள சாகசக் கலைஞர், திறன் கலை வீரர் திரில் வீரா அவர்களைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி மகிழ்கிறது.

# கொங்கு சாதனை விருது

## நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வரிகளுக்கென்றே உருவானது நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை. நாம் மனிதராகப் பிறப்பதற்கும், வளர்வதற்கும், பின் இறந்து மண்ணோடு மண்ணாவதற்கும் இயற்கையின் உதவியின்றி அணுவளவும் நடக்காது. அவ்வாறான இயற்கைக்கு ஒவ்வாத வாழ்க்கையை இன்று நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். பஞ்ச பூதங்களையும் அடக்கி ஆள நினைத்து ஆக்குதலில் இருந்து அழிவை நோக்கிப் பயணிக்கிறோம். இன்று நாம் வாழும் இந்த ஓரளவு நல்ல வாழ்க்கையை நம் சந்ததி வாழுமா என்பது கேள்விக்குறி, நல்ல காற்று, சுத்தமான நீர், மன அமைதி கிடைக்க மலைப்பிரதேசங்கள் மற்றும் அடர் காடுகளை மனிதன் இன்று தேடி, தேடி அலைகின்றான்.

அவ்வாறு இருக்க நாம் நமது இருப்பிடத்தைச் சுற்றி நல்ல மரங்களை வளர்த்து நீர்நிலைகளைப் பாதுகாத்து மேலும் புதிதாக உருவாக்கி கொண்டு வந்தாலே, அவை நமது சந்ததிக்கு நாம் சேர்த்து வைக்கும் பெரிய புண்ணியம் மற்றும் சொத்து ஆகும். இதன் மூலம் ஓரறிவு முதல் ஐந்தறிவு ஜீவன்கள் வரை நம்மைச் சுற்றி வளரும். இதற்கான தொலைநோக்குப் பார்வைகளை மையமாகக் கொண்டு உருவாக்கப் பட்டது தான் நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை.

நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளையானது திருச்செங்கோட்டில் 19-03-2017 அன்று துவங்கப்பட்டது. துவங்கிய நாள் முதல் இன்று வரை 5000க்கும் மேலான மரக்கன்றுகளை நட்டுப் பராமரித்து வருவதோடு, 15000 மரக்கன்றுகளுக்கும் மேல் தன்னார்வலர்களுக்கும், பொதுமக்களுக்கும் இலவசமாக நடுவதற்கு வழங்கி வருகிறது. மேலும் திருச்செங்கோடு நகரின் முக்கியமான நீர் ஆதாரமாக விளங்கும் அம்மன் குளத்தில் மூன்று டன் எடையுள்ள பிளாஸ்டிக் மற்றும் குப்பைக் கழிவுகளை அகற்றிச் சுத்தபடுத்தியுள்ளது நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை. மேலும் திருச்செங்கோடு மலையடிக் குட்டையிலும்,


கஜா புயல் பாதிக்கப்பட்ட நாகப்பட்டிணம் மாவட்டத்தில் ரூ.2,00,000 மதிப்புள்ள நிவாரணப் பொருட்கள் நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்டன. நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளையானது மரக்கன்றுகளை நடுதல், நீர் நிலைகளைப் பராமரித்தல், மற்றும் நெகிழிக் கழிவுகளை மண்ணிலிருந்து அகற்றுதல் போன்ற பணிகளை முக்கியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதுவரை 40க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளையில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

2018இல் புகையில்லாத் தீபாவளி என்ற நோக்கத்தோடு வனத்துக்குள் திருச்செங்கோடு என்ற கருத்தை முன்னிறுத்தி, திருச்செங்கோடு நகரின் முக்கியச் சாலைகளான சங்ககிரி, வேலூர் கோழிக்கால்நத்தம், சேலம் மற்றும் நாமக்கல் போன்ற எல்லாச் சாலைகளிலும் மரக்கன்றுகளை வைத்து அதற்குப் பாதுகாப்பு வலை அமைத்துப் பராமரித்து வருகின்றோம். இன்று மரக்கன்றுகள் அனைத்தும் மரமாகிவிட்டன. நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை இனி வரும் காலங்களில் அரசு பள்ளி மாணவர்களிடம் நம் பாரம்பரிய மரங்களின் நன்மைகள் மற்றும் நம் அன்றாடப் பயன்பாட்டில் இருந்து மறைந்த முக்கியமான மூலிகைகளைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தியும் மேலும் அரசுப் பள்ளிகளில் மூலிகைத் தோட்டங்களை அமைத்தும் அதனோடு பாரம்பரிய மரக்கன்றுகளையும் நட்டு தரவுள்ளோம். இனிவரும் இளைய தலைமுறை மாணவ, மாணவிகள் நமது பாரம்பரியமான மரங்கள் மற்றும் மூலிகைகளை அறிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையும் என்று எண்ணுகிறோம்.

நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளையின் பொருளாதாரத் தேவைகளுக்குத் திருச்செங்கோட்டில் உள்ள பல்வேறு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் உரிமையாளர்கள் உதவிபுரிவதுடன், களப்பணிக்கு உறுதுணையாகவும் செயல்பட்டு வருகின்றனர். இதுவே நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை தொடர்ந்து இயங்க ஓர் உந்து சக்தியாக விளங்குகிறது. இனிவரும் காலங்களில் இயற்கை வளங்களைப் பாதுகாக்கச் சமூகக் காடுகளை உருவாக்குதல், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த ஆழ்துளைக் கிணறுகளை மழைநீர் சேகரிப்பு மையங்களாக மாற்றுதல் போன்ற பல்வேறு திட்டப் பணிகளை நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை மூலமாகச் செய்யவுள்ளோம்.

வருங்காலச் சந்ததிக்காக, இயற்கை வாழ்வை ஊக்குவிக்கவும், சுற்றுப்புறச்சூழலைச் சுகாதாரமாக வைக்கவும் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றும் ‘நம்ம திருச்செங்கோடு அறக்கட்டளை’ க்கு ‘கொங்கு சாதனை’ விருது அளித்து மகிழ்கிறது, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்.

## வெளிநாடு வாழ் கொங்கு சாதனையாளர்



### திரு. முருகையா வேலப்பன்

திரு.முருகையா வேலப்பன் அவர்கள் 10–05–1953 அன்று தஞ்சோங் துவாலாங், பத்து காஜா வில் செல்லம் கூட்டத்தைச் சேர்ந்த திரு வேலப்பன் செல்லப்ப கவுண்டர், திருமதி செல்லம்மாள் மாரப்ப கவுண்டர் தம்பதியருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவருடைய தாய் தந்தை இருவரும் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு தோக்கவாடி கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்தவர்கள். திரு. முருகையா வேலப்பன் அவர்கள் தொடக்கக் கல்வியைப் பத்து காஜாவில் உள்ள செங்காட் ஆரம்பத் தமிழ்ப் பள்ளியில் பயின்றார். இடைநிலைக் கல்வியைக் கம்பாரில் உள்ள ஆங்கிலோ சீனப் பள்ளியில் பயின்றார். பெட்டாலிங் ஜெயாவில் உள்ள Federal Institute of Technology கல்லூரியில் எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங் டிப்ளமோ படிப்பை முடித்தார். 1975 இல் மலேசியாவின் சோனி நிறுவனத்தில் தொழில்நுட்பப் பிரிவில் இணைந்தார். அதன் பின் 1976 இல் மலேசியாவில் உள்ள பேனசோனிக் நிறுவனத்தில் இணைந்து 1999இல் அந்நிறுவனத்தின் பொது மேலாளராக உயர்ந்தார். 2008 இல் பணியிலிருந்து ஓய்வு பெற்றது முதல் இன்று வரை தீவிர சமுதாயப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவரது மனைவி திருமதி கார்த்தியாயினி சாத்தந்தை கூட்டத்தைச் சேர்ந்தவர். இவருக்கு திருமதி சுமதி விஜய் சங்கர் மற்றும் குமுதா என்னும் இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். இவரது இரண்டாவது மகள் குமுதா மலேசியாவில் உள்ள ஒரு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார்.

02–05–1979 அன்று மலேசியா நாமக்கல் கொங்கு நலனபிவிருத்தி சங்கம், கோலாலம்பூர் பகுதியில் உறுப்பினராக இணைந்தார். 1990ல் செயலாளராகவும், 2003 முதல் இன்று வரை கோலாம்பூர்ச் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார். மேலும் 2016 முதல் இன்று வரை மன்றத்தின் தேசியத் தலைவராகவும் விளங்குகிறார். 2016–2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற முதல் மற்றும் இரண்டாம் உலகச்

கொங்கு மாநாடுகளில் பெருந்திரளான மக்களைத் திரட்டி வெகு சிறப்பான பங்கை அளித்தவர். பெட்டாலிங் ஜெயாவில் மன்றத்திற்காக ஐந்து மாடிக்கட்டிடத்தை ஒப்பந்தம் செய்து தற்போது இதற்குத் தேவையான நிதி ஆதாரத்தைப் பெருக்க நிர்வாகக் குழுவினருடன் இணைந்து வெகு சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

கடந்த 33 வருடங்களாக மலேசிய கொங்கு நலன் அபிவிருத்தி மன்றத்தின் நிர்வாகப் பொறுப்பில் இருந்து கொண்டு கொங்குச் சமுதாயத்திற்காக மிகச் சிறப்பான தொண்டாற்றி வரும் திரு. முருகையா வேலப்பன் அவர்களுக்கு 'வெளிநாடு வாழ் சாதனையாளர்' விருது அளிப்பதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமிதம் கொள்கிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## டாக்டர் ஆர்.பரிமளா

கோவை மாவட்டம் அவினாசி தாலுக்கா போடித்திம்மன் பாளையத்தைச் சேர்ந்த திரு.அ.இராமசாமி – திருமதி ருக்மணி தம்பதியருக்கு மகளாக **1960**ஆம் ஆண்டுப் பிறந்தவர், டாக்டர் இரா.பரிமளா. ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் பள்ளிப்படிப்பை முடித்தார். கோவை மருத்துவக் கல்லூரியில் MBBS பட்டமும், வேலூர் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியில் PGDFM Family Medicine முது கலைப் பட்டமும் பெற்றார்.

**இதுவரை செய்த பணிகள் :**

1. நீலகிரி குன்னூர் மாவட்டத்தில் Tan Tea Govt Tea Estate (சிலோன் அகதிகளுக்காக நிறுவப்பட்டது) மருத்துவ அதிகாரியாக 1984 to 1995)
2. இந்தியக் குடும்ப நலச்சங்கம், நீலகிரி கிளையில் 1986 to 1990 Executive Committee உறுப்பினர்
3. St.John's Ambulance Association - Surgeon Examiner 1987 to 1994
4. கோ.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவ மனை – கிராமிய மருத்துவ மையம், எண்.4 வீராபாண்டி, கோவை, மருத்துவ அதிகாரியாக **22–04–1995** லிருந்து இன்று வரை
5. கோவை அவினாசிலிங்கம் பெண்கள் பொறியியல் கல்லூரி மாணவிகளுக்கு மருத்துவராக **2007–2016**

**விருதுகளும் பெருமைகளும் :**

1. Young talent award - by Obstetrician Gynaecological Society, South Zone 2004.
2. Vocational serivce Award by Rotract club of Coimbature Zenith 08-01-2009

3. சிறந்த NGO மருத்துவ அதிகாரி–தேசியக் காச நோய்ச் சங்கத்தினரால் **24–03–2009** அன்று வழங்கப்பட்டது.

4. **25–06–2001** அன்று கோ.குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவ மனையின் நிறுவனர் தின விழாவன்று சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது.

5. “Meritorious Service Award by Rotary Club of Coimbature Central on 25-01-2014

6. இந்திய மருத்துவச் சங்கம், கோவை கிளையினரால் சிறந்த சமுதாயச் சேவைக்கான விருது. **02–07–2016** அன்று வழங்கப்பட்டது.

7. மகிளரத்னா விருது – பாரதி பார்க் பெண்கள் சங்கத்தினரால் **19–08–2017** அன்று வழங்கப்பட்டது.

“தாய்லாந்து, தைவான், சிங்கப்பூர், ஜபல்பூர், கட்டாக், வேலூர் போன்ற இடங்களில் தேசிய மற்றும் உலககளவில் நடைபெற்ற மருத்துவ மாநாடுகளில் கிராமப்புறச் சேவை சம்பந்தப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

நகர்ப்புறத்திலிருந்து வெகுதூரத்தில் சாலை வசதி கூட இல்லாத கிராமப்பகுதியில் **25** வருடங்களுக்கு முன் தனது பணியைத் தேர்ந்தெடுத்து இன்றளவில் தனியாக அந்த மருத்துவ மனையை வளரச் செய்து சுற்றுப்புறக் கிராம மக்களுக்குத் தினந்தோறும் மருத்துவச் சிகிச்சை அளித்து வருவதோடு, கிராமங்களுக்கே சென்று மக்களிடையே உடல் நலம், காச நோய், புற்றுநோய், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், புகையிலைத் தடுப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறார். வியாதிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடித்து வியாதிகளைத் தடுக்கப் பல Screening முகாம்களைச் சுற்றுப்புறக் கிராமங்களில் நடத்தி “வருமுன் காப்போம்” என்ற மனோபாவத்தை மக்களிடையே வளர்த்து வருகிறார்.

கிராமப்புற மருத்துவ சேவையில் சாதனைகள் பல புரிந்துள்ள டாக்டர் இரா.பரிமளா அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு பெண் சாதனையாளர்



## டாக்டர் சரண்யா சச்சி பாலசுப்ரமணியம்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர் முனைவர் ஏ.என்.சச்சிதானந்தம் – திருமதி சிவகாமி தம்பதியருக்கு மகளாகப் பிறந்தவர் டாக்டர் சரண்யா.

அண்ணா பல்கலைக்கழகத்தில் பொறியியல் படிக்க இடம் கிடைத்தும், மருத்துவத்துறையில் சாதிக்கவேண்டும் என்ற நோக்கோடு கண் சிகிச்சை சார்ந்த ஆராய்ச்சித் துறையில் தனது இளநிலைப் பட்டப்படிப்பை B.Opt சங்கரா நேத்ராலயாவின் எலைட்டு ஸ்கூல் ஆப் ஒப்டோமெட்ரியில் (1991/1995) செய்தார். தனது இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் மதிப்பெண் எடுத்துத் தங்கப் பதக்கம் பெற்றார். அந்தப் படிப்பின் கடைசி ஆண்டிற்கான அனைத்துப் பாடங்களிலும் அவரே முதல் மதிப்பெண் பெற்றார்.

சரண்யாவின் செயற்கரிய அறிவுத்திறனைப் பாராட்டி டாக்டர் பத்ரிநாத் அவர்கள் தங்களது சங்கரா நேத்ராலயா மருத்துவ அமைப்பிலேயே வேலை செய்வதற்கான ஆணையைக் கொடுத்துக் கௌரவித்தார். Clinical Optometrist, தொழிலைத் திறம்படச் செய்தார். பல மாநிலங்களில் இருந்து சிகிச்சைக்காக வரும் எளிய மக்களின் பார்வைக் கோளாறுகளின் தீவிர நிலைகளைத் துல்லியமாகக் கணித்துக் குணப்படுத்தியதால் 3 வருடத்திலேயே Optometry & Orth Optics துறைகளின் தலைமை ஆய்வாளராகப் பொறுப்பேற்றார்.

டாக்டர் பாலசுப்பிரமணியம் (M.S. - Opthal, முதல் மதிப்பெண் மாணவர், மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி, சென்னை–1998) அவர்களுடன் திருமணம் நடந்தது. தம்பதியர் இருவரும் மேல் படிப்பிற்காக இங்கிலாந்து சென்று லண்டன், எடின்பர்க்,

கிலாஸ்கோவ், பிரிஸ்டல் மற்றும் செண்ட்டேன் ஹால் நகரங்களில் உள்ள பிரசித்திபெற்ற கண் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மருத்துவக் கல்லூரிகளில் வேலை செய்து கொண்டே தமது மேல்நிலைப் பட்டப்படிப்பைப் பயின்றனர்.

D.Opthal (2006 இல்) மற்றும் MC.Optom (2001இல்) ஆகிய இரண்டு படிப்புகளையும் இங்கிலாந்தில் வெற்றி கண்ட முதல் இந்தியப் பெண்மணி என்ற சாதனையைச் செய்தார். மேலும் ஆஸ்திரேலியாவில், IACLE தேர்விலும் வெற்றி கண்டார். இங்கிலாந்தில் மாற்றுக் கண் சிகிச்சை மற்றும் கண் விழியொட்டி பொருத்துதல் ஆகியவற்றில் திறமையை வளர்த்துக்கொண்டார்.

2004 இல் Specasavers optician விருதை செல்டன் ஹமில் பெற்றார். அவருடைய கணவரும் FRCS எடின்பேர்க், முடித்துவிட்டு ஒரு பிரசித்தி பெற்ற மருத்துவமனையில் வேலை பார்த்து வந்தனர். வசதியான வேலை மற்றும் நவீன மருத்துவச் சாதனங்கள் இருந்தும், உள்மனதில் உள்ள தூண்டுதலால் 2006இல் சொந்த நாட்டில் உள்ளவர்களுக்குச் சேவை செய்ய அவரும் அவரது கணவரும் தாய்நாட்டிற்கே திரும்பி வந்தனர். சொந்த ஊரான ஈரோட்டில் தங்களது வாழ்க்கையை மாற்றிகொள்ளக் கடினமாகத் தெரியவில்லை. காரணம் அவர்கள் தங்களைச் சார்ந்த தொழில், அதை மேம்படுத்துதல், அதைப் பற்றிச் சான்றோர்களுடன் பகிர்தல், கண் சேவை முகாம் பல நடத்துதல், அநாதை ஆசிரமம், முதியோர் இல்லம் சென்று இலவசமாகச் சேவை செய்தல் ஆகியவற்றில் இணைத்துக்கொண்டும் மும்முரமாக இருக்கின்றனர்.

**பின்வரும் பல உதவிகளை இவர் செய்துள்ளார்.**

- டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகத்தில் Diploma in Opthalmic Assistance பயிலும் 30 பெண்களுக்கு இலவசக் கல்விக்கு உதவி.
- கடந்த 10 ஆண்டுகளில் ஈரோடு மாவட்டத்தில் 2,05,000 பள்ளி மாணவர்களுக்கு இலவசமாகப் பார்வைக் குறை கலைப்பு உதவி.
- முதியோர்கள் மற்றும் அநாதைக் குழந்தைகக்குப் பார்வை குறை சரி செய்யும் உதவி.

இந்தியா வந்த பிறகும் அவ்வப்போது இங்கிலாந்து, அமெரிக்கா, நெதர்லாண்ட்ஸ், இத்தாலி ஆகிய மேலை நாடுகளுக்குச் சென்று தங்கள் திறனை மேம்படுத்திக்கொண்டு, இந்தியாவில் பல முக்கிய நகரங்களில் நடக்கும்

மாநாடுகளில் கலந்து கொண்டு தங்களது அனுபவத்தைப் பகிர்த்து கொள்கிறார்கள். டாக்டர் சரண்யா அவர்களின் சேவை பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் சேவை மையங்களிலும் அங்கீகரிக்கப்பட்டு 25க்கும் மேலான பாராட்டுகள் பெற்றுள்ளார்.

இவருடைய தொழில் நுட்பக் கட்டுரைகள் 20க்கும் மேல் முக்கியப் பதிப்புரைகளில் பதிவாகியுள்ளன. இதைப் பல நிபுணர்கள் ஒரு மாபெரும் சாதனையாகக் கருதுகின்றனர். கண் மருத்துவம் மற்றும் அதைச் சார்ந்த படிப்புகளைக் கற்றுக் கொடுக்க அச்சுதா இன்ஸ்டியுட் ஆப் ஒப் தொமேட்ரி என்ற ஒரு நிறுவனம் தொடங்கி அதன் மேலாளராக இருக்கிறார்.

இவர் முனைவர் பட்டம் பெற உதவியாக மே 2019ல் இங்கிலாந்தில் உள்ள அஸ்டன் பல்கலைக்கழகம் இவருக்கு Overseas research Scholar என்ற அரிய வாய்ப்பினைத் தர ஒப்புதல் அளித்துள்ளது. சிறந்த மாணவி, சிறந்த கல்வியாளர், தொழில் வல்லுநர், எல்லாவற்றிற்கும் மேலாகக் குடும்பத் தலைவி மற்றும் ஸ்ரீ நந்தன் என்னும் ஏழாம் வகுப்புப் படிக்கும் மாணவனுக்குத் தாய், முன்னேற வேண்டும் என்ற முனைப்போடு உள்ள பெண்மணி எனப் பன்முகங்கள் கொண்டவர்.

மருத்துவச் சேவையில் சாதனை புரிந்துள்ள டாக்டர் சரண்யா அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு பெண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுவதில் பெருமை கொள்கிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. செந்தில் ரமேஷ் சுப்பிரமணியம்

1980 ஆம் வருடம் டிசம்பர் 8 ஆம் தேதி ஈரோடு மாவட்டம், கொடுமுடி தாலுக்காவில் பனப்பாளையம் என்னும் கிராமத்தில் பிறந்தார். காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தின் உதவியால் இவர் ஊரில் வருடம் முழுவதும் விவசாயம் செழித்து ஓங்கியது. வயல்களில் விளையாடிய அந்த நாள்களில் விவசாயத்தின் மீதான ஆர்வம் பிறந்தது. ஆரம்பப் பள்ளிப்படிப்பைக் கொடுமுடியில் படித்தார். 1994இல் இவருடைய தந்தை தொழில் தொடங்க ஈரோடு வந்ததால் பள்ளிப்படிப்பை ஈரோட்டில் தொடர்ந்தார். பிறகு கோயம்புத்தூர் GCT யில் Production Engineering துறையில் பொறியியல் பயின்றார்.

கல்லூரியில் படிக்கும் போது மின்பொருள் துறையில் வேலை கிடைத்தது. பிறகு சென்னையில் 2 வருடங்கள், அமெரிக்காவில் 3 வருடங்கள் வேலை செய்தார். அமெரிக்காவில் வசித்த அந்தக் கால கட்டத்தில் Organic Goods மற்றும் Food Supplements ஆகியவற்றிற்கு இருக்கும் தேவைகளையும் பயன்களையும் பற்றி அறிந்து கொண்டார். 2007 ஆம் ஆண்டு சொந்தமாகத் தொழில் தொடங்க வேண்டும் என்று முடிவெடுத்து அமெரிக்காவில் இருந்து ஈரோடு திரும்பினார். அமெரிக்கச் சந்தையில் பெருமளவில் vietnam, Thailand, Phillipines ஆகிய ஆசிய நாட்டுப் பொருட்களே கோலோச்சிக் கொண்டு இருந்தன. இதில் நமது நாட்டில் விளையும் எந்தப் பொருளை ஏற்றுமதி செய்யலாம் என ஆராய்ந்து முருங்கைக் கீரையைத் தேர்ந்தெடுத்தார். 2009 ஆம் ஆண்டு Grenera Nutrients Pvt. Ltd., கம்பெனியை ஆரம்பித்தார்.


அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் நிறைய தொழில் கண்காட்சிகளில் பங்கேற்று முருங்கைக் கீரையின் சத்துகள் பற்றி விளக்கினார்.

இதனால் இந்தத் தொழில் மெல்ல வளரத்தொடங்கியது. விவசாய அனுபவமுள்ள இவருடைய தந்தையின் உதவியுடன் தற்பொழுது 300 ஏக்கர் பரப்பில் முருங்கைக் கீரை பயிர் செய்துள்ளார். சுற்று வட்டாரப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் பலரையும் முருங்கைக் கீரைப் பயிரிட இயற்கை வேளாண் முறைக்கு மாற்றி, மாசற்ற மண்ணை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக நெல்லி, மஞ்சள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தார். ஈரோடு மாவட்டம் கடம்பூர் மலைப்பகுதியில் இருக்கும் விவசாயிகளின் உதவியுடன் மஞ்சள் இயற்கை முறையில் விளைவிக்கப்படுகின்றது. இவருடைய பண்ணைகள் அனைத்திற்கும் Esocer frame நிறுவனத்திடமிருந்து Organic Certificate பெறப்பட்டுள்ளது. இயற்கை விவசாயமே இவரது தொழிலின் உயிர் நாடி. இவரிடம் கிட்டதட்ட 100 ஊழியர்கள் பணிபுரிகிறார்கள். இந்த Organic தொழிலை அனைவரும் நேசமுடன் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இயற்கை விவசாயத்தில் சாதனை படைத்து வரும் திரு. செந்தில் ரமேஷ் சுப்பிரமணியம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருதளித்துப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் சிவசந்திரன் பாலசந்திரன்

தருமபுரி மாவட்டம், வெங்கடசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்தவரும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத் தணிக்கையாளருமான திரு.இரா.பாலச்சந்திரன் (உறுப்பினர் எண். 291) நீண்ட காலமாகச் சங்கத்திற்குத் தணிக்கையாளராகத் தொடர்ந்து நியமிக்கப்பட்டு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றார். சென்னை நகரில் சிறந்த தணிக்கையாளர்களுள் ஒருவராய் விளங்கும் இவர், தன்னுடைய தணிக்கைப் பணிக்காக சங்கம் வழங்கும் சம்பளத்தொகையை சங்கத்திற்கே சன்மானமாகத் திருப்பிக் தந்து வரும் தங்க மனம் படைத்தவர்.

இவருடைய மனைவி திருமதி கிருஷ்ணவேணி. இத்தம்பதியரின் மூத்த மகனாக 13–04–1997 அன்று பிறந்த சிவசந்திரன் பாலசந்திரன், பள்ளிப்படிப்பைச் சென்னை கோபாலபுரம் DAV பள்ளியில் 2014 ஆம் ஆண்டு முடித்தார். +2 வில் இவர் படித்தது Commerce பிரிவு. பின்னர் பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் ICAI இணைந்து நடத்திய B.Com., பட்டப்படிப்பில் சேர்ந்து, மூன்று வருடப்படிப்பை, இரண்டே வருடத்தில் முடித்து 2016 ஆம் ஆண்டு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்தார்.

2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ACA Chartered Accountacy தேர்வில் தேர்ச்சி பெற்று, தன்னுடைய 21ஆம் வயதில் Charatered Accountant ஆக உள்ளார். 2018 ஆம் ஆண்டு ஜீன் மாதம் நடைபெற்ற ACS Executive Programme தேர்வில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளார். இது வியக்கவைக்கும் பெரும் சாதனையாகும்.

2019 பிப்ரவரி மாதம் Freemason என்னும் International Moments இல் 21 ஆவது வயதில் Master ஆகப் பொறுப்பேற்று, இந்திய அளவில் Youngest Master எனும் சிறப்பைப் பெற்றுள்ளார்.

அகில இந்திய அளவில் தமிழத்தைச் சேர்ந்த இவருடைய சாதனையை ஆங்கில நாளிதழ்கள் மிகவும் பாராட்டிச் செய்திகள் வெளியிட்டன. இவருக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தைப் பிடித்தவர் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்ணுக்கும், முதலிடம் பெற்ற சிவசந்திரன் பெற்ற மொத்த மதிப்பெண்ணுக்கும் மிக அதிக வித்தியாசம் இருந்தது குறிப்பிடத் தக்கது.

இவருடைய தம்பி இராமச்சந்திரன் லக்னோ National Law School இல் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார்.

Master Boat Club மூலம் நடத்தப்படுகின்ற துடுப்புப் படகுப்போட்டியில் (Rowing) 2018 ஆம் ஆண்டு கலந்துகொண்டு Calcutta Millennium Cup மற்றும் Chennai Colombo Regatta Cup போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். தற்போது மேலும் உயர்படிப்புகள் படிப்பதற்குத் தயார் செய்துகொண்டுள்ளார்.

ACS Executive Programme தேர்வில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்திருக்கும் சிவசந்திரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



**திருமதி டி.இளவரசி**

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் தென்னங்குடி பாளையம் என்னும் கிராமத்தில் உள்ள நைனாக்கவுண்டர் தோட்டத்தில் வாழும் பண்ணை குலத்தைச் சார்ந்த விவசாயக் குடும்பத்தினரான திரு.தேசியழகன் – திருமதி மணிமொழி தம்பதியரின் மகளாகப் பிறந்தார். தன் வாழ்க்கையில் முயற்சிகள் பல மேற்கொண்டு பல்வேறு அரசுத் தேர்வுகளை எழுதி குரூப் 1 தேர்வில் மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்றுத் தற்போது துணை ஆட்சியராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இளவரசி அவர்கள் 2008ஆம் ஆண்டு ஆத்தூர் தேவியா குறிச்சியில் உள்ள தாகூர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து, சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பொறியியல் பட்டப் படிப்பில் கட்டிடப் பொறியியல் பிரிவைத் தேர்வு செய்து படித்தார். அண்ணா பல்கலைக்கழகத்தின் Campus Interview ல் Gammon India நிறுவனத்தில் இளம் பொறியாளராகத் தேர்வு செய்யப்பட்டார். தந்தையின் விருப்பத்திற்கு இணங்க, தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் குரூப் 1 தேர்வை எழுதினார். குரூப் 1 தேர்வுக்கு, தன்னைத் தயார் செய்து கொண்டிருந்த அதே சமயத்தில் குரூப் 2 ஏ தேர்வையையும் எழுதினார் இத்தேர்வில் வெற்றி பெற்று தொழில் மற்றும் வணிகத்துறையில் உதவியாளராகப் பணியில் சேர்ந்தார்.

இளவரசி அவர்களுக்கு ஜீன் மாதம் 2017 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவரது கணவர் திரு.சரண் முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பு முடித்து, சென்னையில் மென்பொறியாளராகப் பணியாற்றுகிறார்.

இளவரசி அவர்களின் மாமனார் திரு. வி.ராஜேந்திரன் (PG Assistant). மாமியார் திருமதி ஆர்.ராதாம்பாள் S.D.E. (BSNL) ஆகப் பணியாற்றுகிறார். கணவர்


மற்றும் மாமானர் மாமியாரின் ஊக்குவிப்பால் 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற குரூப் 1 முதன்மைத் தேர்வை எழுதினார். 2018ம் ஆண்டு எழுதிய குரூப் 2 தேர்வு முடிவுகள் வெளியாகின. அதில் தேர்ச்சி பெற்று செப்டம்பர் மாதத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார்.

2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எழுதிய குரூப் 1 முதன்மைத் தேர்வு முடிவுகள் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியாகின. அதில் தேர்ச்சி பெற்று ஜனவரி மாதம் 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டார். அதில் 650.50 மதிப்பெண் பெற்று மாநில அளவில் முதல் இடம் பெற்றுத் துணை ஆட்சியர் பதவியைத் தேர்வு செய்துள்ளார். இந்த வெற்றி கடின உழைப்பிற்கும் அவருடைய விடாமுயற்சிக்கும் கிடைத்த பரிசு. இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துக்கொண்டார். மேலும் தனக்கு ஆலோசனை வழங்கிய இவரது சித்தப்பா திரு. இசையழகன் (ஆடிட்டர் சென்னை) அவர்களுக்கும் மற்றும் திரு.ரவீந்திரன் (Vajram Institute, New Delhi அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இப்பொழுது இவர் தர்மபுரியில் உள்ள ஆட்சியர் அலுவலகத்தில் பயிற்சி மேற்கொண்டுள்ளார். பயிற்சிக்குப் பின்னர், துணை ஆட்சியளராகப் பொறுப்பேற்றுத் தன் பணியைச் செவ்வனே செய்வேன் என்றும், அனைத்து அரசு நலத்திட்டங்களும் ஏழை, எளிய மக்களுக்கும் விவசாயப் பெரு மக்களுக்கும், பொது மக்களுக்கும் சென்று சேரச் சிறப்பாகப் பணியாற்றுவேன் என்றும், அரசுத் தேர்வு எழுதும் மாணவ மாணவிகளுக்குத் தகுந்த ஆலோசனை வழங்குவேன் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப் 1 தேர்வில் அதிக மதிப்பெண்களுடன் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ள திருமதி டி.இளவரசி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் நேயன் ஷாம் காங்கேயன்

கிரிக்கெட் விளையாட்டில் 16 வயதில் சாதனை படைத்துள்ள நேயன் காங்கேயன் ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகில் உள்ள கொண்டையம்பாளையத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர் பாரம்பரியமிக்க விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், கிரிக்கெட் விளையாட்டில், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் இளம் புயலாக வலம் வருபவர்.


இவர் தந்தை வழிப்பாட்டனார் திரு.கே.கே.சுப்ரமணிய கவுண்டர் அந்தியூர் யூனியன் சேர்மனாகவும், தாத்தா Dr.K.S.சந்திரமோகன் அவர்கள் ஈரோடு மாவட்டக் கவுன்சின் உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் தொண்டாற்றியவர்கள். இவரது தாய்வழிப் பாட்டனார் திரு.கே.பெரியசாமி கவுண்டர் கொங்குச் சமுதாயத்தின் முதல் பட்டதாரியாகவும், சிறந்த சட்ட வல்லுனராகவும், கரூர் நாடாளுமன்ற (MP) மற்றும் சட்டமன்ற உறுப்பினராகவும் (MLA) திகழ்ந்தவர். தாத்தா திரு. P.S.சிவகுமார் அவர்கள் அரசியலில் மாவட்டப் பொறுப்பாளராகவும் மக்கள் பணியாற்றியவர்கள். நேயனின் பெற்றோர் திரு.ஷாம் காங்கேயன் மற்றும் திருமதி மாதங்கி சிவக்குமார் சென்னையில் பொறியியல் வல்லுனர்களாகப் பணியாற்றி வருகின்றனர். நேயனின் செல்லத் தங்கை நயாநிரந்தரி காங்கேயன் கல்வி, நடனம், பாட்டு, கலைத் துறைகளில் பல பரிசுகள் பெற்றுச் சிறந்து விளங்குகிறார்.

நேயன் இரண்டு வயதில் கிரிக்கெட் பேட் பிடிப்பதைப் பார்த்த அவர் தந்தை, அவரைச் சிறந்த கிரிக்கெட் வீரர்களிடம் பயிற்சிக்கு அனுப்பினார். ஐந்து வயது முதலே பல மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் பங்கு பெற்றுப் பல வெற்றிகளையும் விருதுகளையும் குவித்து, கிரிக்கெட் விளையாட்டில் தன் முத்திரையைப் பதிக்கத் துவங்கினார், நேயன் காங்கேயன். அப்போது அவரைப்பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளியாகின.

ஒன்பது வயதில் இவருடைய திறமையை அறிந்து தென்னாப்பிரிக்காவில் உள்ள பாரம்பரியமிக்க Wanderers கிளப் இவரைப் பயிற்சிக்கு அழைத்தது. தென் ஆப்பிரிக்காவில் இரண்டு வருடங்கள் தங்கிக் கிரிக்கெட் விளையாட்டின் நுணுக்கங்களை Gary Kisten போன்ற சிறந்த கிரிக்கெட் ஜாம்பவான்களிடம் பயின்றார். அங்கும் மாநில அளவிலான போட்டிகளில் வெற்றிகளைக் குவித்துத் தன் முத்திரையைப் பதித்தார். மீண்டும் இந்தியா திரும்பிய நேயன் காங்கேயன் இந்திய கிரிக்கெட் வாரியம் (BCCI) நடத்தும் 14 வயதிற்கு உட்பட்டோருக்கான, மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில் தமிழகத்திற்காகத் தேர்வுசெய்யப்பட்டு விளையாடினார். இந்திய கிரிக்கெட் வாரியம் (BCCI) நடத்தும் 16 வயதிற்குட்பட்டோருக்கான போட்டிகளில் புதுவை மாநில அணிக்காக விளையாடி தேசிய அளவில் பெரும் சாதனை படைத்துள்ளார். கோவா அணியுடனான போட்டியில் முச்சதம் (302 ரன்கள்) அடித்து, தேசிய அளவில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். இதற்காக, புதுவை முதலமைச்சர் மாண்புமிகு திரு.நாராயணசாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி நேயனைக் கௌரவித்துள்ளார்.

பல்வேறு முன்னணி கிரிக்கெட் வீரர்களும், புதுவை கிரிக்கெட் வாரிய முன்னாள் தலைவர் திரு.தாமோதரன் அவர்களும் நேயனுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். நேயன் பற்றிய செய்திகள் தேசிய அளவில் ஊடகங்களில் வெளிவந்துள்ளன. கேரள ரஞ்சி மற்றும் முன்னாள் இந்திய (U19) வீரர் ஸ்ரீகுமார் நாயர் அவர்களிடம் சிறப்பாகப் பயிற்சி பெற்று வரும் நேயன் இன்னும் பல சாதனைகள் படைக்கக் கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவருக்கு ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் ஆர்.எஸ்.ரித்தின் பிரணவ்

திண்டுக்கல் மாவட்டம், காசிபாளையம் கிராமத்தைச் சார்ந்த திரு.செந்தில்குமார் – திருமதி. ஸ்ரீமதி ஆகியோரின் புதல்வன், கண்ணன்குலச் செல்வன் ஆர்.எஸ்.ரித்தின் பிரணவ் 19–08–2007 அன்று பிறந்தார். இவர் தற்பொழுது கரூரில் உள்ள தி இந்தியன் பப்ளிக் ஸ்கூலில் 7ஆம் வகுப்புப் படித்து வருகிறார்.

11 வயதாகும் இவர் ஜீன் மாதம் அகில இந்திய அளவிலான டென்னிஸ் ரேங்க்கிங் தரவரிசையில் 12 வயது பிரிவில் இந்திய அளவில் முதல் இடத்திலும், 14 வயதிற்குட்பட்ட பிரிவில் 9 ஆவது இடத்திலும், 16வயது பிரிவில் 144ஆம் இடத்திலும், ஆசிய அளவிலான தரவரிசையில் (14 வயது  பிரிவில்) 99 ஆம் இடத்திலும் உள்ளார். இவரது இளமைக்காலப் பயிற்சியாளர்களான திரு.கோபிநாத் மற்றும் திரு.குமார். (Sai Tennis Academy) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி 2016ஆம் வருடம் அகில இந்திய டென்னிஸ் அமைப்பில் உறுப்பினர் ஆனார். இதன்மூலம் இந்திய அளவிலான போட்டியில் பங்கேற்று 10 வயதுக்குட்பட்ட தேசிய போட்டியான “PUNE OPEN” இல் கலந்துகொண்டு தனது 9வது வயதிலேயே முதல் பட்டம் வென்றார்.

2017 முதல் இந்திய அளவிலான போட்டியில் 12 மாநிலங்களில் பங்கேற்று 24 கோப்பைகளை வென்று உள்ளார். இதன் உச்சமாக 2019ஆம் ஆண்டு 12 வயதுள்ள இந்தியன் நேஷனல் சேம்பியன் பட்டத்தை ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவிலும் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்து உள்ளார். 14 வயதிற்குரிய ஆசிய (Asian Tennis - ATF) போட்டியில் (11.6 years) இளம் வயதில் வென்ற இந்திய வீரர்களுடன் இவரும் ஒருவர்.

கடந்த 1½ ஆண்டுகளில் 12 வயது பிரிவில் தமிழ்நாட்டில் முதல் தர வீரராகவும், 4 மாதங்களாக இந்தியத் தரவரிசையில் முதல் தர வீரராகவும் உள்ளார். இதன் தொடர்ச்சியாக 2019 மே மாதம் இந்திய அணிக்காகத் தேர்வு செய்யப்பட்ட ஒரே தமிழக வீரர்.மே மாதம் வங்கதேசம் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற தென் ஆசிய நாடுகளில் ITF போட்டியில் இந்தியாவிற்குத் தங்கம் வென்ற இவர், தனது அடுத்த பயணமாக ஆகஸ்ட் 2019 இல் கஜகிஸ்தான் (Kazahistan) தலைநகர் Astana -வில் நடக்கும் 12 வயதுக்கானோர் ITF Asian Finals போட்டியில் இந்தியா சார்பாகப் பங்கேற்க உள்ளார்.

**அங்கீகாரம் :**

1) 2018ல் IIFL போட்டியில் மும்பையில் திரு.மகேஷ்பூபதி மற்றும் நடேக்கர் (டேவிஸ் கப் வீரர்) ஆகியோரால் சிறந்த வீரர் எனப் பாராட்டப்பெற்றார்.

2) 2018ல் சானியா மிர்ஷா அகடமியில் தேசியத் தொடரை வென்றதன்மூலம் அங்கு இலவசமாகப் பயிற்சி பெறச் சிறப்புச் சலுகைகளைப் பெற்றார்.

3) 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு டென்னிஸ் அசோசியேசன், தமிழகத்தில் சிறந்த இளம் வீரர் என்ற விருதை கார்த்திக் சிதம்பரம் முன்னிலையில் பெற்றார்.

4) மேலும் முதுபெரும் டென்னிஸ் ஆசான் ‘‘அக்தர் அலி’’ (அர்ஜுனா விருது 11 குடியரசு விருது பெற்றவர்) அவர்களிடம் சிறந்த இளம் வீரர் என அங்கீகாரம் பெற்றார்.

5) டெக்கத்தலான் (Decathalan - India) இந்தியா நிறுவனத்தின் டென்னிஸ் ஆடைப் பிரிவில் விளம்பரத் தூதராக இடம்பெற்ற முதல் தமிழக வீரர். இவரின் சாதனையைப் போற்றும் விதமாக நெடுநாள் தூதராக இவரை நியமித்துள்ளார்கள்.


6) இந்நாள் கரூர் மாவட்ட ஆட்சியர் திரு.அன்பழகன் அவர்களால், ஜீன் மாதத்தில் கௌரவிக்கப்பட்டு, அவரின் சிறப்புப் பரிந்துரையாகத் தமிழக அரசின் விளையாட்டுத்துறை விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டார்.

7) முன்னாள் இந்திய வீரர்களான மற்றும் இந்நாள் தேசிய பயிற்சியாளர்களான ‘‘சந்தீப் கீர்த்தனே’’ மற்றும் ‘‘விஷால் உப்பல்’’ ஆகியோர் இவரைத் தனது மாணவனாகச் சேர்த்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

ஒரு குழந்தையின் சிறப்பு ஆற்றல் அறிந்து அக்குழந்தையை அத்துறையில் முழுமையாக ஈடுபட வைக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் உண்டு. அப்பெற்றோரை ஊக்கப்படுத்த வேண்டிய முக்கியப் பொறுப்பு அக்குழந்தைகளின் தாத்தா, பாட்டி மற்றும் சித்தி, சித்தப்பா மற்றும் மிக முக்கியக் குடும்ப உறுப்பினர்களைச் சாரும். இதற்குச் சிறந்த உதாரணம் ஆர்.எஸ்.ரித்தின் பிரணவ் மற்றும் அவரது குடும்பத்தார்கள்.

டென்னிஸ் விளையாட்டில் அளப்பரிய சாதனைகள் படைத்து வரும் இளம் வீரர் செல்வன். ஆர்.எஸ்.ரித்தின் பிரணவ், வருங்காலத்தில் விம்பிள்டன் போட்டியில் வெற்றி பெற்று உலக அளவில் கொங்கு இனத்தின் புகழை நிலை நாட்டிப் பெருமை சேர்க்க வேண்டுமென்று வாழ்த்தி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் ர.சு.இளஞ்சேரன்

IIT நுழைவுத்தேர்வான JAM என்று சொல்லக்கூடிய முதுகலைக் கணிதப் பாடப்பிரிவிற்கான கூட்டுச் சேர்க்கைத் தேர்வில் தேசிய அளவில் நான்காவது இடத்தைப் பெற்றுச் தேர்ச்சி பெற்றுள்ளார் செல்வன் ர.சு.இளஞ்சேரன். இவர் மிகவும் விரும்பிய சென்னை IIT ல் தற்போது பயின்று வருகிறார். இவரது சொந்த ஊர் கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி வட்டத்தைச் சேர்ந்த காசிபாளையம். இவரது தற்போதைய இருப்பிடம் சென்னியப்பா நகர், தாராபுரம், திருப்பூர் மாவட்டம். தந்தை பெயர் ர.சுப்பிரமணியன், தாயார் க.வானதி. விவேகம் கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறார். கொங்கு வேளாளக் கவுண்டர் இனத்தில் இவர்கள் காடை குலத்தைச் சேர்ந்தவர்கள்.

இளஞ்சேரன் IIT இல் சேர்ந்தவுடன் தனது வகுப்பில், தான் மட்டுமே தமிழ்நாட்டு மாணவர் எனத் தெரிந்தவுடன், தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்க்கை பெற வைக்க வேண்டுமென நினைத்து இளம் மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். இதன் காரணமாகத் தற்போது அவர்களில் சிலர் IIT, NIT போன்ற கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறத் தகுதி பெற்றுள்ளனர். குறிப்பாக, கணபதி என்ற மாணவர் இதே தேர்வில் அகில இந்திய அளவில் 17வது இடத்தைப் பிடித்து IIT சென்னையில் சேர உள்ளார்.

போசான் என்ற துகளுக்குப் பெயரிட்டுப் பெருமை சேர்த்த இந்திய இயற்பியலார் சத்யேந்தரநாத் போஸ் அவர்களின் நினைவாக அமெரிக்க இந்திய அளவில் தொழில் நுட்பக் கழகங்கள் இணைந்து S.N.Bose Scholarship வழங்கி வருகின்றது. இதற்காகக் கணிதப்பிரிவில் ஐஐடி சென்னையில் உள்ள

மாணவர்களில் இளஞ்சேரன் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் அமெரிக்காவிலுள்ள மிசௌரி பல்கலைக்கழகத்தில் கோடைக்கால உள்ளிருப்புப் பயிற்சியில் ஆராய்ச்சி மாணவராகப் பயிலும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

❖ NBHM ன் இரண்டு வருடத்திற்கான மாதாந்திர ஸ்காலர்சிப்பிற்கான எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று உதவித்தொகை பெற்று வருகிறார். இவ்வுதவித்தொகை பெறுவதற்காக இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 மாணவர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தமிழ்நாட்டில் இவர் ஒருவர் மட்டும் இவ்வுதவித்தொகைக்காக இவ்வருடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்).

❖ சென்னை ஐஐடி யில் இருந்து இவர் ஒருவர் மட்டுமே பிரகாஷ் நாரயாணன் ஸ்காலர்சிப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ மும்பை ஐஐடி யில் முனைவர் அனந்தநாராயணன் ஹரிஹரன் தலைமையில் கணிதத்தில் தொகுதித் கோட்பாடு என்னும் பயிற்சியைப் பயின்றவர்.

❖ அலகாபாத்தில் அமைந்துள்ள ஹரிஷ் சந்திராஆராய்ச்சி மையத்தில் கோடைக்கால ஆராய்ச்சித் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2019 மே மாதத்தில் பயிற்சி பெற்றுள்ளார். இது மத்திய அரசின் உதவித்தொகையுடன் கூடிய ஒரு பயிற்சியாகும்.

❖ திருச்சியில் உள்ள புனித அந்தோணியர் தன்னாட்சிக் கல்லூரியில் பாடத்திட்ட அமைப்புக் குழுவில் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ இருமுறை மைசூர், சென்னை ஆகிய இரு இடங்களில் நடைபெற்ற கணிதவியல் பயிற்சி மற்றும் திறமைத்தேடல் திட்டத்திலும் பங்குபெற்றவர்.

❖ இளஞ்சேரன் தனது +2 வரையிலான பள்ளிப்படிப்பைத் தாராபுரம் விவேகம் மேல்நிலைப்பள்ளியில் பயின்றுள்ளார். இளங்கலை கணிதவியலைத் திருச்சியிலுள்ள புனித வளனார் கல்லூரியில் பயின்று கணிதப் பிரிவில் கல்லூரியில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு பாடம் சார்ந்த திறன் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார்.

குறிப்பாக நம் பகுதி மாணவர்கள் மிகக் குறைந்த அளவே தரமான கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெறுகிறார்கள். இதன் தாக்கத்தை நேரில் நன்கறிந்த மாணவனான இளஞ்சேரன் தனக்குப் பின் படிக்கும் இளையோர்களை ஊக்குவித்து தேசிய அளவில் தகுதி உடையவராக்க வேண்டும் என்பதில் முனைப்புள்ளவராகக் காணப்படுகிறார். இளம் தலைமுறைகளில் தமிழ் நாட்டில் திறமையுள்ளவர்கள் இல்லாமல் இல்லை. வாய்ப்பின்மை காரணமல்ல. வழிகாட்டலின்மையே காரணமாகும்.

தேசிய அளவில் சாதனை படைத்துள்ளதோடு, பிற மாணவர்களுக்கும் வழிகாட்டும் செல்வன் ர.சு.இளஞ்சேரன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி எஸ்.சக்தி ஸ்ரீதேவி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, குக்கிராமமான யுகம்பாளிக் காட்டுவலசில் தூரன் கூட்ட சுரேஷ், பிரியா தம்பதியருக்கு மகளாக **09–05–2006**அன்று பிறந்தார். சிறுவயதிலேயே அம்மாயி ரத்தனவள்ளி, அப்புச்சி ஏ.குழந்தைவேலு மற்றும் தாத்தா யுகே.பழனிசாமி, பாட்டி இந்திராதேவி ஆகியோர் சொல்லிடும் குழந்தைகளுக்கான கதைகளை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்ந்தார். சிறுக சிறுக தன் மனதில் தோன்றிய உருவங்களுக்குப் பெயரிட்டு மழலை மொழியில் சுற்றியுள்ளோரிடம் கதைகளைக் கூறிட ஆரம்பித்தார்.

ஈரோடு Indian Public School இல் நான்காம் வகுப்புப் படிக்கும் போதே தன் மனதில் உதிர்த்தவற்றை, மடைதிறந்த வெள்ளம் போல் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிக் கதை சொல்லும் திறனை எழுத்துகளால் கணினியில் வடித்தெடுத்தார். வயது எட்டு நிறைவடையும்போது தன் பொக்கிஷங்களான Ballena the ballet dancer, Candy the Royal Cat, Candy’s adventures, Candy The Royal Cat - Lost in The Woods ஆகிய கதைகளைத் தந்தை சுரேஷ் உதவியுடன் அச்சிட்டு வெளியிட்டதன் மூலம் ஆங்கிலத்தில் சிறந்த ‘கதை சொல்லி’ மற்றும் இளம் எழுத்தாளர் என்பதனை அனைவரும் அறிந்திடச் செய்தார்.

ஈரோடு நவரசம் கலைக்கல்லூரி, பெருந்துறை கொங்கு பொறியியற் கல்லூரிகளில் நடைபெற்ற பெண்களுக்கான பயிற்சிப் பட்டறையின் போது எவ்வாறு எழுதுவது, திறம்படக் கதை சொல்லுவது, உபயோகமான வாழ்வியல் போன்றவைகளை ஆங்கிலப் புலமை வாய்ந்த வல்லுநர் போன்று எடுத்துரைத்துப் பாராட்டுகள் பெற்றார். ஜேஸி இயக்கம் மற்றும் தொண்டு நிறுவனங்கள், இவரது பேச்சாற்றல், எழுத்துத் திறனுக்கு விருது வழங்கிச் சிறப்பித்தனர். ஈரோடு கொங்கு

வேளாளர் இளைஞர் சங்க நூலகத் திறப்பு விழாவின் போது பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களால் இவரது மூன்றாவது ஆங்கிலப் புத்தகம் வெளியிடப்பட்டது.

இவரது The Kid who Taught the Way of Living Volume 1,2,3 மற்றும் 30 Short Stories for 30 days நூல்கள் அச்சில் உள்ளன. விரைவில் தமிழில் குழந்தைகளுக்கான நூல்கள் எழுதிடவும் முயற்சி எடுத்து வருகின்றார். வருங்காலத்தில் உலக அளவில் தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்க்கும் எழுத்தாளராக இவர் வருவார் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. To motivate students by teaching them values, To motivate others to write, to protect native cattle breed (நாட்டுமாடு) என்பவற்றை தாரக மந்திரங்களாகக் கொண்டவர், 13வயது இந்திய இளம் எழுத்தாளர் ''சக்தி ஸ்ரீதேவி''

இளம் வயதிலேயே எழுத்துத்துறையில் வியத்தகு சாதனை படைத்துள்ள செல்வி எஸ்.சக்தி ஸ்ரீதேவி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் என்.பி.நிதீஷ்

வேளாண் தொழில், ஆயத்த ஆடைத் தொழில், மேலும் அதைச் சார்ந்த தொழில்களும் நிறைந்து கிடக்கும் கொங்கு மண்ணாம் திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் அருகேயுள்ள அம்மாபாளையம் கிராமத்தில் நமது கொங்கு விவசாயக் குடும்பத்தில் எஸ்.நடராஜ் – என். பூங்கொடி ஆகியோரின் மகனாக 13–04–2009 அன்று யோகா என்.பி.நிதீஸ் பிறந்தார்.

இந்தியத் திருநாட்டில் தோன்றி இன்று உலகம் முழுவதும் பரவிக்கிடக்கும் யோகாக் கலை உடலும் உள்ளமும் செழிப்புறச் செய்யும் ஓர் உன்னதக் கலை. யோகாக் கலை தமிழகத்தில் பிறந்ததற்குச் சான்றாகத் திருமூலரின் திருமந்திரம் உள்ளது. இந்தியத் திருநாட்டின் அடையாளமாகப் பதஞ்சலி முனிவரின் யோகச் சூத்திரம் திகழ்கின்றது. நமது ஒவ்வோர் அணுவிலும் யோகக் கலை கலந்திருக்கின்ற காரணத்தினால் இந்தியாவை நோக்கி வெளிநாட்டினர் யோகக்கலையை கற்றுக்கொள்ளப் படையெடுத்து வருகின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இவ்வாறு தமிழர் மரபில் கலந்திருக்கும் யோகா கலை நமது நிதிஷின் மரபணுவிலும் கலந்து இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. நிதிஷின் பள்ளிப்பருவத்தில் ஐந்தாவது வயதில் ஒன்றாம் வகுப்புப் படிக்கும்போது பள்ளியில் யோகா ஆசிரியர் சொல்லிக்கொடுத்த ஆசனங்களை ஆர்வத்துடன் வீட்டில் வந்து செய்து காட்டிக்கொண்டிருந்தார்.

இதை உற்றுக் கவனித்த அவரது பெற்றோர் இயற்கையாக யோகா கலை அவருடன் கலந்திருப்பதை அறிந்து கொண்டனர். இந்தக்கலைஇறைவன் கொடுத்த வரமாகக் கருதி அவரை ஊக்குவிப்பதற்காக இணையதளங்களில் பார்த்து இரண்டு வருடங்கள் தானாகப் பயிற்றுவித்தனர். இரண்டு வருடங்கள் கழித்து முறையான பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் அவர்களது உறவினர்களின் வழிகாட்டுதலின்படி திருப்பூர் 15, வேலம்பாளையத்தில் அமைந்துள்ள அறிவுத்திருக்கோயிலுக்கு அனுப்பி

யோகா ஆசிரியரிடம் முறையான பயிற்சியை அளித்தனர். இந்த நிலையில் அங்குள்ள யோகா ஆசிரியரின் வழிகாட்டுதல்படி கோவை வித்யாஸ்ரமம் பள்ளியில் மாநில அளவில் நடந்த யோகாசனப் போட்டியில் இளம் வயதினருக்கான சாம்பியன் ஆப் சாம்பியன் என்னும் வாகையர் பட்டத்தை வென்றார். முதல்போட்டியிலேயே வாகையர் பட்டத்தை வென்ற நித்திஷைப் பார்த்த கௌதம் செல்வராஜ் என்ற திருப்பூரைச் சேர்ந்த யோகா ஆசிரியர் நவீன கால ஆசனங்களை அவருக்குப் பயிற்றுவித்தார். அவரது வழிகாட்டுதலின்படி கடந்த இரண்டு வருடங்களாக 50க்கும் மேற்பட்ட மாநில அளவிலான மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு தனது திறமையைக் காட்டிப் பல பரிசுகளை வென்று கொண்டிருக்கிறார். இதற்கு முத்தாய்ப்பாக 2018 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் மாமல்லபுரத்தில் பல நாடுகளிலிருந்து யோகா வீரர்கள் பலர் கலந்துகொண்ட உலக யோகாத் திருவிழாவில் பல கட்டங்களில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்று ‘சாம்பியன் ஆப் சாம்பியன்’ பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இந்த நிலையில் இணையதளத்தில் இவரது திமையைப் பார்த்த பிராண யோகம் என்ற யோகா நிறுவனத்தை ஹாங்காங் நாட்டில் சிறப்புற நடத்தி வரும் யோகாவில் பல கின்னஸ் சாதனைகளைத் தொடர்ந்துபடைத்து வரும் உலக அளவில் பிரபலமான தமிழகத்தைச் சேர்ந்த யோகராஜ் சி பூவேந்திரன் அவர்கள், நிதிஷைத் தனது சிஷ்யனாகத் தத்து எடுத்துக்கொண்டு தாய்லாந்து நாட்டில் நடந்த சர்வதேச அளவிலான 16 நாடுகள் கலந்துகொண்ட யோகா போட்டிக்கு அழைத்துச் சென்று அவரது திறமையை உலகறியச் செய்தார். அங்கு நடந்த யோகா போட்டியில் நிதிஷ் ஒரு தங்கப்பதக்கம் மற்றும் இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை புரிந்தார்.பல நாடுகளில் இருந்து கலந்துகொண்ட அனைவரும் நிதிஷின் திறமையைப் பார்த்து ஆச்சரியத்துடன் பாராட்டினர்.

நித்திஷ் பற்றி அவரது தகப்பனார் மற்றும் தாயார் கூறும்பொழுது, “நித்திஷ் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரமாகக் கருதுகின்றோம். உலகம் போற்றும் யோகக்கலையில் சிறந்த குழந்தையைக் கடவுள் எங்கள் மூலமாகப் படைத்துள்ளார் என்பதில் பெருமை கொள்கின்றோம். விவசாயத்தையும் பனியன் தொழிலையுமே பயிற்றுவிக்கும் நமது கொங்குச் சமுதாய மக்களுள் வித்தியாசமாக இந்த யோகாக்கலையில் எங்களது மகனை உலகம் வியக்கும் அளவிற்கு உருவாக்க வேண்டும் என்பது எங்கள் லட்சியமாக உள்ளது. இதற்காகக் கிராமங்களில் யோகா ஆசிரியர்கள் இல்லாததால் அருகிலுள்ள நகரத்திற்குத் தூரமும் நேரமும் பார்க்காமல் சென்று சிறந்த யோகா ஆசிரியர்களைக் கண்டுபிடித்துப் பயிற்சி கொடுத்தோம்.

அதற்கு நமது கொங்குச் சமுதாய சொந்தங்களும் உறுதுணையாக இருக்கின்றார்கள். நாங்கள் நடுத்தர விவசாயக் குடும்பத்தில் உள்ளதால் பல போட்டிகளுக்குச் செல்வதற்கும், வெளிநாடுகளில் நடக்கும் யோகா போட்டிகளில் கலந்துகொள்வதற்கும் பொருளாதார ரீதியாகச் சில சிரமங்களை எதிர்கொள்கிறோம். இதற்கு ஆதரவாக, அரவணைப்பாக நமது கொங்குச் சமுதாயச் சொந்தங்கள் இருந்து எங்கள் இலட்சியத்தை நிறைவேற்றி நித்திஷை உலக அளவில் ஒரு சிறந்த யோக நிபுணராக உயர்த்துவோம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. மேலும் நமது சமுதாயத்திற்குத் தான் கற்ற கலையைச் சொல்லிக் கொடுத்து நமது கொங்குச் சமுதாயத்தினர் அனைவரும் ஆரோக்கிய வாழ்வு பெற வழி வகுப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இவரது திறமையை மெச்சி இவர் படிக்கும் பல்லடம் ப்ளூ போர்டு பள்ளி நிர்வாகத்தினர் இலவசமாகக் கல்வியைக் கற்றுக்கொடுப்பதோடு நிறைய உதவிகளைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கும் உதவிகளைச் செய்து கொண்டு வரும் நமது கொங்குச் சொந்தங்களுக்கும் முதலில் எங்கள் நன்றியை மனதார உரித்தாக்குகின்றோம். மேலும் நிதிஷின் யோகாசனங்களை செய்து காட்ட வாய்ப்பளித்த பல்லடம் வனாலயம் நிர்வாகத்தினருக்கும், இளம் சாதனையாளர் விருது வழங்கிக் கவுரவிக்கும் கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கும் எங்கள் நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம்'' என்று தெரிவித்தார்.

கொங்குச் சமுதாய மக்களின் அடையாளமாக யோகா கலையின் மூலமாக உலகம் முழுவதும் சென்று சாதனை செய்யக் காத்திருக்கும் யோகா என் பி.நிதிஷிற்கு நமது ஆசிகளையும் அன்பையும் அரவணைப்பையும் தொடர்ந்து கொடுப்போமாக.

கொங்கு நண்பர்கள் சங்கம் இந்த இளம் சாதனையளாளருக்கு 'கொங்கு இளம் சாதனையாளர்'விருது வழங்கி மேலும் பல சாதனைகள் புரிய வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி எஸ்.சிந்துவர்ஷினி

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரைச் சேர்ந்த திரு.என்.செந்தில்குமார் – திருமதி எஸ்.ராதா தம்பதியரின் மகளாக 2008 ஆம் ஆண்டுப் பிறந்தவர், செல்வி எஸ்.சிந்துவர்ஷினி. இவர் தற்பொழுது ஆத்தூர் Green Park Metric Hr.Sec.School இல் ஆறாம் வகுப்புப் படித்து வருகிறார்.


இவர் சிலம்பம் மற்றும் டேக்வோன்டோ (Taekwon-Do) ஆகிய கலைகளில் வல்லவர். பல போட்டிகளில் பங்கு பெற்றுப் பரிசுகள் பதக்கங்கள் விருதுகள் ஆகியன பெற்றுச் சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். இவர் டேக்வோன்டோ (Taekwon-Do) கலையில் 2015 ஆம் ஆண்டு முதல் தன்னுடைய கடின பயிற்சியினாலும் இடைவிடாத முயற்சியினாலும் பெற்றோர், பயிற்சியாளர் மற்றும் பள்ளித் தாளாளர் ஆகியோரது ஊக்கத்தினாலும் மிகச் சிறந்து விளங்குகின்றார்.

மாநில அளவிலும், தென்இந்திய அளவிலும், இந்திய அளவிலும், தெற்கு ஆசிய அளவிலும் பல போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இவர் கடந்த நான்கு வருடங்களாக காஞ்சிபுரம், சென்னை, நாமக்கல், விஜயவாடா, கோழிக்கோடு, கோவா, ஜெய்ப்பூர், வாபி–குஜராத், ஸ்ரீலங்கா, மற்றும் நேபாளம் ஆகிய இடங்களில் பல் வேறு அமைப்புகள் நடத்திய போட்டிகளில் பங்கு பெற்றுச் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

சிலம்பப் போட்டியில் இது வரை 3 தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 1 வெங்கலப் பதக்கம், டேக்வோன்டோ (Taekwon-Do) போட்டியில் இது வரை 6 தங்கப் பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 4 வெங்கலப் பதக்கம் ஆகியன பெற்றுத் தங்க மங்கையாக திகழ்கிறார், இந்தக் கொங்கு குலச் செல்வி.

டேக்வோன்டோ (Taekwon-Do) போட்டியில் அரிய சாதனைகள் புரிந்து சமுதாயத்திற்கும் தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி எஸ்.சிந்துவர்ஷினி, அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது. இவர் மேன்மேலும் பல சாதனைகள் புரியச் சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி ஆர்.மௌனிகா

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கொங்கு மாமணி திரு.நல்ல கோவிந்தசாமி அவர்களின் தம்பி திரு.சீத்தப்பகவுண்டரின் மகன் வழிப்பேத்தியும், திரு.இலக்குமணன் – திருமதி பாவாயி அவர்களின் மகள் வழிப்பேத்தியும், ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பள்ளபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு.சீ.இராவுத்தன் – விமலா தம்பதியரின் மகளுமாகிய செல்வி ஆர்.மௌனிகா இறகுப்பந்து விளையாட்டில் சாதனைகள் புரிந்து வருகிறார்.

**மௌனிகாவின் பதக்கப் பட்டியலில் சில :**

| எண். | வருடம் | போட்டி | இடம் | பதக்கம் |
|---|---|---|---|---|
| 1. | ஜீன் 2019 | மாநில Under 17 ஒற்றையர் | நாமக்கல் | வெள்ளி |
| 2. | ஜனவரி 2019 | மாநில Under 17 ஒற்றையர் | நாமக்கல் | வெண்கலம் |
| 3. | ஜீன் 2018 | மாநில Under 17 ஒற்றையர் | திண்டுக்கல் | வெண்கலம் |
| 4. | நவம்பர் 2017 | தேசிய Under 17 இரட்டையர் | சண்டிகர் | கால் இறுதி |
| 5. | ஜனவரி 2017 | தேசிய U14 பள்ளிகளுக்கிடையேயான (SGFI) போட்டி | நாசிக் | வெள்ளி |
| 6. | ஜனவரி 2016 | தேசிய U14 பள்ளிகளுக்கிடையேயான (SGFI) போட்டி | ஔரங்காபாத் | வெள்ளி |
| 7. | 2015 | தேசிய U 13 இரட்டையர் | டெல்லி | வெள்ளி |
| 8. | 2017 | கேலோ (KHELO) மாநில அளவில் | சென்னை | வெண்கலம் |

இவை மட்டுமல்லாது மேலும் பல பதக்கங்களை மாநில, மாவட்டப் போட்டிகளில் பெற்றுள்ளார். பதினொன்றாம் வகுப்புப் படிக்கும் இவர் படிப்பிலும் சிறந்த மாணவியாகத் திகழ்கிறார். கடந்த மார்ச் 2019 இல் நடந்த பத்தாம் வகுப்புப்

தேர்வில் 485/500 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேலும் இவருக்கு SUDOKU மற்றும் Spelling Bee போட்டிகளிலும் ஆர்வமும், திறமையும் உண்டு.

இவருடைய மூத்த சகோதரி செல்வி ஆர்.மஞ்சரி நமது கொங்குச் சங்கத்தின் இளம் சாதனையாளர் விருதை 2015 ஆம் ஆண்டு பெற்றார். (499/500) பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநிலத்தில் இரண்டாம் இடம்) அவர் தற்சமயம் சென்னை IIT கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார்.

முயற்சியுடன் பயிற்சி செய்து வருங்காலத்தில் இந்தியாவிற்காகப் பல பதக்கங்களை (ஒலிம்பிக் உட்பட) செல்வி ஆர்.மௌனிகா பெற்றிட வேண்டும் என வாழ்த்தி, 'கொங்கு இளம் சாதனையாளர்' விருதை வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

## 2019 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள்

### முதல் இடம்




| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வன். ஆர்.ஹரி |
| தந்தை பெயர் | : | திரு. கே.ராமசாமி |
| தாயார் பெயர் | : | திருமதி வி.செல்வி |
| ஊர் | : | வீரப்பன்சத்திரம், ஈரோடு |
| பள்ளி | : | கொங்கு நேஷனல் பதின்ம மேல்நிலைப்பள்ளி |

### முதல் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வன் என்.திவின்குமார் |
| தந்தை பெயர் | : | திரு. எஸ்.நல்லசிவம் |
| தாயார் பெயர் | : | திருமதி பி.கீதா |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | கொங்கு கல்வி நிலையம் பதின்ம மேல்நிலைப்பள்ளி |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி வி.பிரியதர்ஷினி |
| தந்தை பெயர் | : | திரு. டி.விஜயராகவன் |
| தாயார் பெயர் | : | திருமதி வி.பிரபா |
| ஊர் | : | இராசிபுரம், நாமக்கல் |
| பள்ளி | : | ஸ்ரீவித்யா மந்திர் பதின்ம உயர்நிலைப்பள்ளி |

**2019 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு அரசுத் தேர்வில்**
**அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள்**

**மூன்றாம் இடம்**



பெயர் : செல்வி ஏ.தேவதர்ஷினி
தந்தை பெயர் : திரு. கே.அங்கமுத்து
தாயார் பெயர் : திருமதி ஏ.வசந்தி
ஊர் : பழனி, திண்டுக்கல்
பள்ளி : பொன்னு பதின்ம மேல்நிலைப்பள்ளி

**மூன்றாம் இடம்**



பெயர் : செல்வி ஆர்.கனிஷ்கா
தந்தை பெயர் : திரு. ரவிச்சந்திரன்
தாயார் பெயர் : திருமதி ஆர்.நிர்மலா
ஊர் : ரங்கம்பாளையம், ஈரோடு
பள்ளி : கொங்கு கல்வி நிலையம் பதின்ம மேல்நிலைப்பள்ளி

**மூன்றாம் இடம்**



பெயர் : செல்வி பி.விபீஷ்ணா ஸ்ரீ
தந்தை பெயர் : திரு. சி.பாலசுப்ரமணியம்
தாயார் பெயர் : திருமதி பி.தங்கமணி
ஊர் : ரங்கம்பாளையம், ஈரோடு
பள்ளி : கொங்கு கல்வி நிலையம் பதின்ம மேல்நிலைப்பள்ளி

## 2019 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்பு (CBSE) அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள்

### முதல் இடம்



பெயர் : செல்வி இ.சிவானி
தந்தை பெயர் : திரு. பொ.இளங்கோ
தாயார் பெயர் : திருமதி இ.அனுரூபா
ஊர் : மோகனூர், நாமக்கல்
பள்ளி : Trinity Intnl School

### இரண்டாம் இடம்



பெயர் : செல்வன் பி.எஸ்.முகிள்
தந்தை பெயர் : டாக்டர் பி.செந்தில்நாதன்
தாயார் பெயர் : திருமதி எஸ்.சங்கீத பிரியா
ஊர் : சென்னை
பள்ளி : DAV Boys Sr.Sec.School

### இரண்டாம் இடம்



பெயர் : செல்வி ச.ஐஸ்வரியா
தந்தை பெயர் : டாக்டர் D.சசிகுமார்
தாயார் பெயர் : டாக்டர் எம்.ஸ்ரீதேவி
ஊர் : சேலம்
பள்ளி : Emerald Valley Pub.School

### மூன்றாம் இடம்



பெயர் : செல்வி சி.எ.தக்ஷின்யா
தந்தை பெயர் : திரு. கே.சந்திரசேகரன்
தாயார் பெயர் : திருமதி ஆர்.ஆனந்தநாயகி
ஊர் : ஈரோடு
பள்ளி : The BVB School

## 2019 ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள்

### முதல் இடம்




| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி எஸ்.கீர்த்தனா |
| தந்தை பெயர் | : | திரு. பி.சுப்பிரமணி |
| தாயார் பெயர் | : | திருமதி எஸ்.கவிதா |
| ஊர் | : | சேலம் |
| பள்ளி | : | பாரதி வித்யா பவன் பதின்ம மேல்நிலைப்பள்ளி |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி எஸ்.கிருத்திகா |
| தந்தை பெயர் | : | திரு. வி.பி.செங்கோட்டையன் |
| தாயார் பெயர் | : | திருமதி எஸ்.வசந்தாமணி |
| ஊர் | : | வேலாயுதம்பாளையம், கரூர் |
| பள்ளி | : | பரணி பார்க் பதின்ம மேல்நிலைப்பள்ளி |

### மூன்றாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி எஸ்.காவியநிலா |
| தந்தை பெயர் | : | திரு. கே. சாமிநாதன் |
| தாயார் பெயர் | : | திருமதி என்.பிரமிளா |
| ஊர் | : | தருமபுரி |
| பள்ளி | : | ஸ்ரீவிஜய் வித்யாலயா பதின்ம மேல்நிலைப்பள்ளி |

## 2019 ஆம் ஆண்டு 12ஆம் வகுப்பு (CBSE) அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள்

### முதல் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி எஸ்.சௌம்யா |
| தந்தை பெயர் | : | திரு. ஆர்.சந்திரசேகர் |
| தாயார் பெயர் | : | திருமதி வி.எம்.தீபா |
| ஊர் | : | பீளமேடு, கோவை |
| பள்ளி | : | The Suguna PIP School |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி எஸ்.ரிதன்யா |
| தந்தை பெயர் | : | திரு. பி.சிவசக்தி |
| தாயார் பெயர் | : | திருமதி எஸ்.ரேவதி |
| ஊர் | : | ஈரோடு |
| பள்ளி | : | CS Academy |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வன் எஸ்.ராகுல் |
| தந்தை பெயர் | : | திரு. ஆர்.செல்வராஜ் |
| தாயார் பெயர் | : | திருமதி எஸ்.வளர்மதி |
| ஊர் | : | சென்னை |
| பள்ளி | : | The Schram Academy |

### மூன்றாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வன் ஆர்.ஆதித்ய ராஜ் |
| தந்தை பெயர் | : | திரு. பி.இராஜ முருகன் |
| தாயார் பெயர் | : | திருமதி ஆர்.தனலட்சுமி |
| ஊர் | : | சென்னை |
| பள்ளி | : | DAV Sr.Secondary School |

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

14.07.2019 அன்று நடைபெற்ற 2019 ஆம் ஆண்டு

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Running Race<br>LKG & UKG Std (Boys) | I டி.சுவனேந்திரன்<br>II வி.அத்விக்<br>III வி.கிருத்திக் சரண்<br>IV எஸ்.பி.அத்விக்<br>IV பி.எஸ்.விஷாக்<br>IV ஜி.இனியன்<br>V பி.ஜே.ஷஷ்வின்<br>VI கே.கேசவ் குமார்<br>VII ஏ.நந்தகுமார்<br>VIII எஸ்.டி.தனிஸ்க்<br>IX சஞ்ஜித் |
| 2 | Running Race<br>I to II Std. (Boys) | I வி.ஹரிசங்கர்<br>II எஸ்.விக்னேஷ்வர்<br>III ஜி.பி.தருண்பாலாஜி |
| 3 | Running Race<br>III to IV Std. (Boys) | I எஸ்.இ.லிங்கேஷ்<br>II டி.ஸ்ரீசாந்த்<br>III ஆர்.குகன் |
| 4 | Running Race<br>V to VI Std. (Boys) | I இ.தருண்<br>II ஏ.பாலசூர்யா<br>III எஸ்.அபிநவ் |
| 5 | Running Race<br>VII to VIII Std. (Boys) | I எஸ்.பி.விஜயராஜகோபாலன்<br>II கே.மித்திலேஷ்<br>III டி.பவிஷ் |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 6 | Running Race<br>IX to X Std. (Boys) | I கிஷோர் சுப்ரமணியன் |
| 7 | Running Race<br>21 to 30 Years (Men) | I திரில் வீரா<br>II எம்.சதீஷ்குமார்<br>III எஸ்.கலைவாணன் |
| 8 | Running Race<br>31 to 40 Years (Men) | I எஸ்.இராம்மோகன்<br>II எஸ்.பாலாஜி<br>III டி.கோபிசங்கர் |
| 9 | Running Race<br>41 to 45 Years (Men) | I துரைசாமி<br>II ஜெகதீஷ்<br>III சி.கேசவன் |
| 10 | Running Race<br>46 to 50 Years (Men) | I ஈஸ்வரமூர்த்தி<br>II ஜி.சுப்பிரமணியம்<br>III பி.பெரியசாமி |
| 11 | Running Race<br>51 to 60 Years (Men) | I இளங்கோ பொன்னுசாமி<br>II எம்.இராமசாமி<br>III கே.பி.சுப்ரமணியன் |
| 12 | Running Race<br>61 - 67 Years (Men) | I பழனிசாமி<br>II டி.நடராஜ்<br>III சதாசிவம் |
| 13 | Running Race<br>67 and above (Men) | I இராமசாமி<br>II துரைசாமி<br>III வேலுசாமி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 14 | Ball Throw<br>III to IV Std. (Boys) | I எஸ்.இ.லிங்கேஷ்<br>II எஸ்.டி.கிருத்திக்<br>III ஆர்.குகன் |
| 15 | Ball Throw<br>V to VI Std. (Boys) | I கே.மித்திலேஷ்<br>II எஸ்.அபிநவ்<br>III ஏ.பாலசூர்யா |
| 16 | Ball Throw<br>VII to VIII Std. (Boys) | I ஆதவன்<br>II கார்த்திக் பாலாஜி<br>III டி.பவீஷ் |
| 17 | Ball Throw<br>IX to X Std. (Boys) | I சிபி<br>II தர்ஷின்<br>III எஸ்.கிஷோர் |
| 18 | Shot Put<br>21 to 30 Years (Men) | I திரில் வீரா<br>II கலைவாணன்<br>III தமிழ்ச்செல்வன் |
| 19 | Shot Put<br>31 to 40 Years (Men) | I கந்தகார்த்திக்<br>II பாலாஜி<br>III ராம்மோகன் |
| 20 | Shot Put<br>41 to 50 Years (Men) | I ஜெகதிஷ்<br>II கிருஷ்ணசாமி<br>III கார்த்திகேயன் |
| 21 | Shot Put<br>51 to 60 Years (Men) | I சிவசெல்வம்<br>II கே.பி.சுப்ரமணியன்<br>III இராமசாமி |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 22 | Running Race<br>LKG & UKG Std (Girls) | I கே.எம்.ஜியா<br>II எல்.ஹிருதயா<br>III கே.தீக்க்ஷிகா<br>IV இ.ரித்திகா<br>V ஆர்.ஸ்ரீயா<br>VI என்.சாய்தனுஸ்ரீ<br>VII எஸ்.அவந்திகாஸ்ரீ |
| 23 | Running Race<br>I to II Std. (Girls) | I பி.ஜே.தீஸ்ஸனா |
| 24 | Running Race<br>III to IV Std. (Girls) | I அக்ஷன்யா<br>II மேஹா<br>III ஷர்மிகிருஷ்ணா |
| 25 | Running Race<br>V to VI Std. (Girls) | I எஸ்.ரக்ஷிதா<br>II எஸ்.காவியா<br>III நந்திதாஸ்ரீ |
| 26 | Running Race<br>VII to VIII Std. (Girls) | I லக்ஷிகா<br>II ஏ.தன்வி<br>III சஹானா |
| 27 | Running Race<br>IX to X Std. (Girls) | I ஜி.கீர்த்தனா<br>II பி.வேதா<br>III இ.மிர்துவர்ஷிணி |
| 28 | Running Race<br>16 - 20 Years (Girls) | I ஆர்.கிருத்திகா<br>II ஆர்.வைஷ்ணவி<br>III ஆர்.நிமிதா |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 29 | Running Race<br>16 - 20 Years (Girls) | I ஆர்.கார்த்திகா<br>II ஆர்.வைஷ்ணவி<br>III ஆர்.நிமிதா |
| 30 | Running Race<br>21 - 30 Years (Girls) | I பி.பிரீத்தா<br>II ஆர்.செல்லகிருத்திகா<br>III பி.கோமதி |
| 31 | Running Race<br>31 - 40 Years (Women) | I சுமதி<br>II சத்யபிரியா<br>III கவிப்பிரியா<br>III சரண்யா |
| 32 | Running Race<br>41 - 50 Years (Women) | I லட்சுமி<br>II கீதா<br>III பி.சுமதி |
| 33 | Running Race<br>51 - 60 Years (Women) | I தமயந்தி<br>II டி.சரஸ்வதி<br>III கே.ஜெயமணி |
| 34 | Running Race<br>60 Years and above (Women) | I பார்வதி அப்பாவு<br>II சுசிலா ரங்கசாமி<br>III லீலாவதி துரைசாமி |
| 35 | Ball Throw<br>III to IV Std. (Girls) | I டி.அக்ஷன்யா<br>II எர்.ஜோசிகா<br>III சஞ்சனா<br>III ஷிவானி |
| ‘36 | Ball Throw<br>V to VI Std. (Girls) | I இனியா<br>II சுகிர்தவர்ஷினி<br>III சம்யுக்தா<br>III காவியா |

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 37 | Ball Throw<br>VII to VIII Std. (Girls) | I ஹரணி<br>II பிரித்தி<br>II வர்ஷா<br>III சாதனா |
| 38 | Ball Throw<br>IX to X Std. (Girls) | I மிர்துவர்ஷிணி<br>II வேதா<br>II கீர்த்தனா |
| 39 | Ball Throw<br>15 to 20 Years (Girls) | I நிமித்தா<br>II கார்த்திகா<br>II வைஷ்ணவி |
| 40 | Ball Throw<br>21 to 30 Years (Girls) | I பத்மபிரியா<br>II செல்லகிருத்திகா<br>II எஸ்.சுபா |
| 41 | Ball Throw<br>31 to 35 Years (Women) | I மேனகா<br>II கோமதி பாலாஜி<br>III பி.சரண்யா |
| 42 | Ball Throw<br>36 to 40 Years (Women) | I சங்கீதா<br>II கவிபிரியா<br>II ரஞ்சனி |
| 43 | Ball Throw<br>41 to 50 Years (Women) | I சுமதி<br>II மகேஷ்வரி<br>II லட்சுமி |
| 44 | Ball Throw<br>51 to 60 Years (Women) | I ஜெயமணி<br>II தமயந்தி<br>II சரஸ்வதி |
| 39 | Ball Throw<br>61 Years and above (Women) | I பழனியம்மாள்<br>II பார்வதி<br>III சுசிலா |

# கயிறு இழுக்கும் போட்டி

| வ. எண். | முதல் பரிசு | இரண்டாம் பரிசு |
|---|---|---|
| 1 | நடராஜ் | சி.அரவிந்தன் |
| 2 | சதாசிவம் | சந்திரசேகர் |
| 3 | சண்முகம் | சிவசெல்வம் |
| 4 | தேவராஜ் | சிவசாமி |
| 5 | கண்ணன் | சுரேஷ்வர் |
| 6 | ஈஸ்வரமூர்த்தி | திருமலை |
| 7 | துரைசாமி | பாலாஜி |
| 8 | கலைவாணன் | பாலச்சந்திரன் |
| 9 | ஆறுமுகம் | சுப்பிரமணி |
| 10 | கந்தகார்த்திக் | நடராஜன் |
| 11 | லோகேஷ்வரன் | தமிழ்ச்செல்வன் |
| 12 | முத்து | லோகேஷ்வரன் |
| 13 | பிரதாப் | கோவிந்தராஜ் |
| 14 | நல்லசிவம் | கோபிசங்கர் |
| 15 | இராமசாமி | பூபதி |
| 16 | இரமேஷ் | இளங்கோ |
| 17 | சத்தீஷ்குமார் | வேலுசாமி |

# லக்கி கார்னர்

| | |
|---|---|
| முதல் பரிசு | சுதீர் |
| இரண்டாம் பரிசு | கார்த்திக் பாலாஜி |
| மூன்றாம் பரிசு | பாலசூர்யா |

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

07.07.2019 அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | **கட்டுரைப் போட்டி** | |
| | பள்ளி | I ஜி.ஏ.அக்ஷரா |
| | | I ஜி.ஏ.நக்சத்திரா |
| | | II எஸ்.சம்யுக்தா |
| | | II கே.பி.கங்கேஷ் |
| | | III பி.மோனிகா |
| 2 | **கவிதைப் போட்டி** | |
| | 7ம் வகுப்புவரை | I கே.பி.கங்கேஷ் |
| | | II பி.மோனிகா |
| | | III எஸ்.சம்யுக்தா |
| | சிறப்புப் பரிசு | கே.அஸ்வின் (3 Std) |
| | 8 முதல் 12ம் வகுப்புவரை | I எஸ்.சங்கவித்தா |
| | | II ஏ.தன்வீ |
| | | III ஆர்.கார்த்திகா |
| | | III எஸ்.பி.விஜயராஜகோபாலன் |
| 3 | **பாட்டுப் போட்டி** | |
| | LKG to UKG வகுப்பு வரை | I எஸ்.கே.சக்தியன் |
| | | II சாய் தனுஸ்ரீ |
| | | III தீஷிகா |


| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | I பி.ஜே.தேஷ்னா<br>II எஸ்.காவியா<br>III ஜி.ஏ.அக்ஷரா |
| | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை | I நக்ஷத்ரா<br>I கார்த்திகா<br>II வர்ஷா<br>II சங்கவிதா<br>II கங்கேஷ்<br>III லக்ஷ்சிகா<br>III பி.மோனிகா<br>III ஆதவன் |
| 4 | **பேச்சுப் போட்டி** | |
| | 5 முதல் 7ஆம் வகுப்பு வரை | I கே.பி.கங்கேஷ்<br>II ஜி.ஏ.அக்ஷரா<br>III பி.மோனிகா<br>III லக்ஷிகா கேசவன் |
| | 8 முதல் 12ஆம் வகுப்பு வரை | I ஏ.தன்வி<br>II ஜி.ஏ.நக்ஷத்ரா<br>III ஆர்.கார்த்திகா<br>III எஸ்.வர்ஷா |
| | ஆறுதல் பரிசு | ஏ.ஆதிகுமரன் |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 5 | **மாறுவேடப் போட்டி** | |
| | Pre Kg (Special Prize) | I பிரித்விகா |
| | LKG to UKG வரை | I இனியன் ஹிருதயா |
| | | II எஸ்.வி.ஆத்விக் |
| | | III சாய் தனுஸ்ரீ |
| | சிறப்புப் பரிசு | I வி.எஸ்.சஹாணா |
| | | II எஸ்.சம்ருத் |
| | **1** முதல் **5**ஆம் வகுப்பு வரை | I நிவ்ரித்தி |
| | | II பி.ஷிவானி |
| | | III ஸ்ரீஹரிநாதன் |
| | **6** முதல் **8**ஆம் வகுப்பு வரை | I கே.பி.கங்கேஷ் |
| | | II பி.மோனிகா |
| | | III எஸ்.வர்ஷா |
| 6 | **ஓவியப் போட்டி** | |
| | Pre KG to LKG | I எல்.ஹிருதயா |
| | | II கே.எம்.ஜியா |
| | | III சாய் தனுஸ்ரீ |
| | | IV அத்விக் விஜயராஜ் |
| | **1** முதல் **3**ஆம் வகுப்பு வரை | I டி.அக்ஷன்யா |
| | | II கே.அனுபிரபா |
| | | III பி.ஜே.தேஷ்னா |
| | | IV பி.ஷிவானி |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | 4 முதல் 5ஆம் வகுப்பு வரை | I ஜி.ஏ.அக்ஷரா<br>II ஸ்ரீ ஹரிநாதன்<br>III நந்திதாஸ்ரீ<br>IV லக்சிகா கேசவன் |
| | 6 முதல் 8ஆம் வகுப்பு வரை | I ஷம்யுக்தா<br>II பி.மோனிகா<br>III எஸ்.வர்ஷா<br>IV என்.இனியா |
| | 9 முதல் 11ஆம் வகுப்பு வரை | I ஜி.ஏ.நக்க்ஷத்ரா<br>II ஆர்.கார்த்திகா<br>III என்.சிபிஅமுதன்<br>IV சங்கவித்தா |
| 7 | **நடனப் போட்டி**<br>Pre Kg முதல் UKG வரை | I ஜி.இனியன்<br>II ஹிருதயா |
| | 1 முதல் 5ஆம் வகுப்பு வரை | I நிவ்ரிதி<br>II ஸ்ரீஹரிநாதன்<br>III தருண் பாலாஜி |
| | 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | I மோனிகா<br>II கே.பி.கங்கேஷ்<br>II ரக்ஷிசிதா |
| | சிறப்புப் பரிசு | I பி.சிவானி மற்றும் ஆர்.கார்த்திகா<br>II காவியா மற்றும் வர்ஷா |

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | ஆறுதல் பரிசு | I சங்கவித்தா<br>II சம்யுக்தா |
| 8 | **கோலப் போட்டி** | I கீதா செந்தில்குமார்<br>II எஸ்.சுமதி<br>III கே.பாரதி<br>IV ஆர்.சித்ரா |
| | ஆறுதல் பரிசு | I நிமிதா ரவிக்குமார் |

# கொங்கு நாட்டில் கண்ணகுல வரலாறு



கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி மக்கள் "தமிழ் குடிமக்கள்". கொங்கு நாட்டில் கொங்கு வேளாளர்கள் குடியேறிய காலம் சங்க காலம் என்று கருதப்படுகிறது. கொங்கு நாட்டின் முதற் குடிமக்கள் கொங்குவேளாளர். கொங்குநாடு எப்பொழுதும் தனக்கென்று தனி எல்லைகளையும், வரலாறு, கலை பண்பாடு நாகரீகம் ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

கொங்கு வேளாளர்களுக்கு உழவுத் தொழிலே முதன்மையானது. உண்மையையும், உழைப்பையும், நேர்மையும், ஒழுக்கத்தையும், தன்மானத்தையும் உயிராகக் கருதியவர்கள்; நல்ல தேகபலம் உடையவர்கள்; மிகக்கடுமையாக உழைக்கக்கூடியவர்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கியவர்கள்; சாவா மருந்தானாலும் விருந்தினரை வீட்டிற்கு வெளியே வைத்து என்றும் உண்ணமாட்டார்கள். விருந்திட்டு, தான் உண்ணாமல் இருக்கின்ற அரும்பண்பு இவர்களிடம் உண்டு. தோட்டத்திலே விளையும் தானியங்களை வீட்டுக்குக் கொண்டு வராமல் தோட்டக்களத்திலேயே கொங்கு முறத்தால் தானியங்களை வாரிக் கொடுத்த மூதாதையர் வழிபாடு; பெரியோரை வணங்குதல் இவர்கள் பண்பாடு. முன்பு கொங்குநாடு 24 உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

"வடக்கு பெரும்பாலை, வைகாவூர் தெற்கு குடக்குப் பொறுப்பு வெள்ளிக்குன்று கிடக்கும் களித்தண்டலைமேவு, காவேரி சூழ்நாடு குளித்தண்டலையளுவு. "கொங்கு மக்கள் தாங்கள் குடியிருக்கும் பகுதியில் குலகுருக்களை அழைத்துக் குடியமர்த்திக் கொண்டவர்கள். (கூட்டங்கள்) காணிகளை ஏற்படுத்திக்கொண்டவர்கள். திருமணத்தினை ஒரே குலத்தில் செய்யமாட்டார்கள். ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் சகோதர, சகோதரிகள் ஆவர். வேறு கூட்டத்தில் தான் பெண் எடுப்பார்கள். கூட்டத்தை விசாரித்து, பொருத்தம் பார்த்தும் அல்லது குலதெய்வத்தில் பூ வாக்குக் கேட்டும் திருமணம் செய்வார்கள்.

திருமணம் போன்ற சுப காரியங்களில் அருமைப் பெரியவர் முன்நின்று சீர்கள் செய்வர். கொங்கு நாவிதர், கம்பர் பாடிய மங்கள வாழ்த்தினைப் பாடியபின்

புலவர்கள் கம்பர் வாழி16 யும், ஏரெழுபதும், திருக்கை வழக்கமும் படித்துள்ளனர். அவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன.

கொங்கு வேளாளர் திருமணம் தான் உண்மையிலே சீர்திருத்தக் கல்யாணம். 18 குடிபாட்டு மக்களுக்கும் ஒவ்வொரு சீரிலும் பங்கு உண்டு. ஒவ்வொரு கொங்கு வேளாளரும் தனி ஆளுமையுடன் வாழ்ந்தார்கள். கொங்குச் சமுதாயத்தில் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தத்தம், வாழ்வியல் முறைகளையும், தர்மம் சார்ந்த விதிகளையும் காலம், காலமாய்ப் போதித்து வந்தார்கள்.

கொங்கு ஏழு சிவாலயங்கள் செல்லுதல் மிகச்சிறப்பு

1. அவிநாசி
2. திருமுருகன் பூண்டி
3. பவானி கூடுதுறை
4. திருச்செங்கோடு
5. கரூர்
6. வெஞ்சமாங்கூடலூர்
7. கொடுமுடி

| | |
|---|---|
| கொங்கு வேளாளர் இனம் | கொங்கு வேளாளக்கவுண்டர் |
| வம்சம் | காராள வம்சம் |
| குலம் | கங்க குலம் |
| காணி | அவர் அவர் குலதெய்வக் கோவில் உள்ள ஊர் |
| கோத்திரம் | சிவன் கோத்திரம் (சத்ரியன்) |
| குலக்கோயில் | அவர் அவர் குலதெய்வம் |
| குலகுரு | அவர் அவர் குலகுரு |

| | | |
|---|---|---|
| ஆதீனம் | | பேரூர் மருதாச்சல அடிகள் கோவை சிரவை ஆதீனம் (குமரகுருபர சுவாமிகள்) பழனி சாது சண்முகஅடிகள் |

கொங்கு வேளாளர் குலங்களில் கண்ணன்குலம் மிக மிக முக்கியமான குலங்களில் ஒன்று. கண்ணன் கூட்டம் கொடுமணல் என்னும் ஊர் பதிற்றுப்பத்தில் குறிக்கப்பட்ட பழம் பேரூர், அங்குக் கிடைத்த 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஒடுகளில் கண்ணன் ஆதன் என்று தமிழ்ப்பிராமி எழுத்துகள் எழுதப்பெற்றுள்ளன. வரலாற்றுச் சிறப்பும் இலக்கியப் புகழும் உடையது.

கண்ணன் என்ற பெயர் மிகத் தொன்மையுடையது. கவுண்டரில் பாதி கண்ணன் என்று கூறுவர். நசியனூர் கண்ணன், காளமங்கலம் கண்ணன், கிளாம்பாடி கண்ணன், கொளாநல்லி கண்ணன், காகம் கண்ணன், காஞ்சிக்கோவில் கண்ணன், கன்னியவாடிக் கண்ணன், மௌசிக் கண்ணன், மோரூர் கண்ணன், முளசி சம்பை கண்ணன்.

சேலம் மாவட்டத்தில் உள்ள கண்ணன், கண்ணந்தை, நாட்டுவேளாளர் கண்ணன் மூன்று குலமும் ஒன்றே. இவர்கள் பங்காளிகள். சத்தாங்கண்ணி, ஆலத்தூர், மணியனூர், தகடையூர், கொன்னையாறு, ஆனங்கூர் கூடல் மற்றும் பாதிரை ஆயி 18 ஊர்கள், கண்ண குலத்தாருக்குக் காணியூர்கள்.

சேர, சோழ, பாண்டிய மன்னர் மூவருக்கிடையில் ஏற்பட்ட எல்லைத் தகராறைத் தீர்த்து வைத்ததால் மகிழ்ச்சி அடைந்த மூவேந்தரும் கண்ணன்குலத்தைச் சேர்ந்த முத்துசாமிக்கவுண்டர் மகன் நல்லதம்பிக்கவுண்டருக்கு மும்முடி நல்லதம்பி மன்றாடி என்ற பட்டத்தைக் கொடுத்துச்சிறப்பித்தார்கள். தலையநாட்டு பாடி 12 பூண்டி 36ம் கூடிய 48கிராமத்தை ஆண்டு வரும்படி தலையநாட்டின் தலைமை ஊரான கன்னிவாடியில் நல்லதம்பிக்கவுண்டரை அமர்த்தினர்.

கண்ணகுலத்தாருக்கு முதல் காணியூர்
தலையநாட்டு கன்னிவாடி

நல்லதம்பி மன்றாடியாரின் வம்சா வழியினர் கன்னிவாடியை ஆண்டு வந்தனர்.

ஒரு நாள் கன்னிவாடி கண்ணகுலத்தைச் சேர்ந்த கந்தசாமிக்கவுண்டர் மகள் நல்லம்மாளும் மற்றும் தோழிகளும் காதப்பாழி என்ற காட்டிற்கு விறகு

சேமிக்கச் சென்றார்கள். இடைக்காலப்பாடி என்ற ஊரைச் சேர்ந்த பள்ளி வேளாளக்குலத்தைச் சேர்ந்த வள்ளியம்மாளும் மற்ற பெண்களும் விறகு சேமிக்கக் காதப்பாழி காட்டிற்குச் சென்றார்கள். நல்லம்மாள் விறகுகளைக் கட்டி முடித்து வீட்டுப் பக்கத்தில் இருந்த கிணற்றில் தோழிகளுடன் தண்ணீர் குடித்துக் கொண்டு இருந்தாள். பள்ளி வேளாளர் குலத்தைச் சார்ந்த வள்ளியம்மாள், 'நங்கை எனக்கும் கொஞ்சம், தண்ணிபிடிச்சுக் கொடு' என்று கேட்டாள்.

''என்ன புதுசா உறவு சொல்லிக் கேட்கிற நான் தண்ணீர் மொண்டு கொடுக்க முடியாது. தண்ணீர்மொண்டு கொடுப்பதை யாராவது பார்த்தால் எங்கள் இனத்தார், ஜாதியில் இருந்து தள்ளி வைத்து விடுவார்கள்'' என்று கூறி மறுத்து விட்டாள். இதனால் ஆத்திரம் அடைந்த வள்ளியம்மாள் உன்னை என் அண்ணனுக்குத் திருமணம் செய்து வைக்கிறேன் பார்' என்று சபதம் எடுத்தாள்.

அதற்கு நல்லம்மாள், ''என்னை உன் அண்ணனுக்குக் கட்டி வைக்கிறேன்னு கனா காணாதே; உன் அண்ணனுக்குக் கருப்பு நாயைத் திருமணம் செய்யாவிட்டால் நான் கண்ணகுலத்திலே பிறந்தவள் அல்ல'' என்று சபதம் எடுத்தாள்.

இருவரும் தங்கள் வீடு சென்று தங்கள் பெற்றோரிடமும், ஊர் பெரியவர்களிடமும் கூறினார்கள். இதனால் இருதரப்பிலும் பகையுணர்ச்சி ஏற்பட்டது. நல்லம்மாள் தன் தந்தை கந்தசாமிக்கவுண்டரிடம் சொன்னாள். அவர் ஊரில் உள்ளவர்களை அழைத்து வரச் சொல்லி நல்லதம்பி மன்றாடியாரிடம் நாயத்தைச் சொன்னார்கள்.

'இந்த மாதிரி சண்டை சச்சரவுகள் வம்பு தும்பு பேச்செல்லாம் பக்கத்து ஊர்க்காரர்களோடு கண்டும் காணாம நடக்கிறதுண்டு. ஆனா என்ன இருந்தாலும் பள்ளி வேளாண் வீட்டுக்கு நம்ம பெண்ணை எப்படிக் கட்டி வைக்கிறது ? இனிமே நல்லம்மாள் விறகு பொறுக்க அந்தக் காட்டிற்குச் செல்லவேண்டாம்' என்று நல்லதம்பி கூறினார். கண்ணகுலத்துக் கன்னிப்பெண்ணுக்குப் பங்கம் வராமல் பார்த்துக்கொள்வது நமது கடமை என்று அவர் சொல்லிவிட்டார்.

வள்ளியம்மாளும் தன் தந்தை கோபால் கவுண்டரிடம் (பள்ளி வேளாளக்கவுண்டர்) நம் ஜாதியை இழிவுபடுத்தி நல்லம்மாள் பேசினாள் என்று கூறினாள். இது ஊரில் பரவியது. நாம் பெண் கேட்டால் என்ன என்று எல்லோரும் கூற, அப்போது ஆட்சி செய்த மன்னனின் ஆதரவைக் கேட்டார்கள்.

மன்னர்படையில் பள்ளி வேளாளர் ஜாதியைச் சேர்ந்தவர்கள் நிறையப்பேர் இருந்ததால் அரசனும் அவர்களுக்கு ஆதரவாக நல்லம்மாளைத் திருமணம் செய்து கொடுக்கும்படி, மும்முடி நல்லதம்பிக்கவுண்டருக்கு ஓலை எழுதி அனுப்பினான்.

அரசனின் ஓலையைப் படித்த நல்லதம்பிக்கவுண்டர் என்ன செய்வது என்று தெரியாமல் தன் பங்காளிகளை அழைத்து அரசன் ஓலையைப் பற்றிக்கூறி, 'அரசனிடம் நாங்கள் பேசிக்கொள்கிறோம்' என்று கூறிவிட்டு வந்தார். அரசகட்டளை உத்தரவுக்குக் கட்டுப்பட்டாக வேண்டும். ஆகவே, தங்கள் ஊரைச் சுற்றியுள்ள அனைத்து ஜாதியினைரையும் அழைத்துப் பேசி மன்னனைப் பகைத்துக்கொள்ள முடியாது. இருந்தாலும் பள்ளி வேளாளர்க்குத் தங்கள் பெண்ணைக் கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். நல்லதம்பிக் கவுண்டரும் தம் கண்ண குலத்துக்குத் தீங்கு வந்து விடக்கூடாது என்று கந்தசாமிக் கவுண்டரிடம் கூறினார். அவரும் நம் குலத்திற்கே அவமானம்; இதை ஏற்கமுடியாது என்றார். மன்னனிடம் ஆதரவு பெற்ற கோபால் கவுண்டர் (பள்ளி வேளாளக்கவுண்டர்), அவரது உறவினர்களை அழைத்துக்கொண்டு கன்னிவாடிக்கு வந்து, மும்முடி நல்லதம்பி கவுண்டரிடம் நல்லம்மாளைத் திருமணம் செய்து கொடுக்கச் சம்மதம் கேட்டனர்.

நல்லதம்பிக்கவுண்டரும் திருமணத்திற்குச் சம்மதித்து நாளும் கிழமையும் குறித்து வெள்ளிக்கிழமை அன்று திருமணம் வைத்துக்கொள்ளலாம் என்று அனுப்பி வைத்தார். தனது பங்காளிகள் மற்றும் பிற சமூகத்தைச் சேந்தவர்களையும் அழைத்து நல்லம்மாள் சபதம் நிறைவேறத் திட்டம் தீட்டினார்கள். திருமணத்தேதி குறிப்பிடப்பட்ட அந்த நாள் வெள்ளிக்கிழமையன்று கோபால் கவுண்டரும் அவரது உறவினர்கள் (பள்ளி வேளாளக் கவுண்டர்கள்) மங்களப் பொருட்களுடன், தாரை தப்பட்டையுடன் கன்னிவாடி வந்து சத்திரத்தில் தங்கினார்கள். மணமகள் நல்லம்மாள் வீடு பந்தலிட்டு வாழை மரங்கள் கட்டித் தோரணங்கள் தொங்கவிட்டிருந்தார்கள். மேளதாளங்கள் முழங்க மணவறையும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதைப்பார்த்த இடக்காலப்பாடியைச் சேந்தவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

பள்ளி வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள் கூறைப்புடவை, நகைகளைத் தட்டில் ஏந்திப் பெண்ணுக்கு, புடவை, பொன், பூ குங்குமம் கொடுக்க வந்திருப்பதாகக் கூறினார்கள்.

கண்ணகுலத்தார் தங்களின் திட்டப்படி நல்லம்மாள் வளர்த்த கருநாய்க்கு வண்ண ஆடைகள் போர்த்தி, கட்டி வைத்திருந்தனர். சீர்காரி, பெண்ணை மணவறைக்குக் கூட்டி வருமாறு கூறினார். நல்லாண்டி மனைவி பொன்னு அங்கே இருக்கிறது என்று கூறினாள். ஆடையை சிர்காரி விலக்கினாள். அங்கே கருநாயைக் கட்டியிருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்து ‘இது என்ன கருநாயைக் கட்டி வைத்துள்ளீர்கள் என்று சீர்காரி கேட்க, ‘உங்களுக்குக் கருநாயைக் கட்டி வைப்போம் என்று தானே கூறினோம்’ என்று நல்லாண்டி மனைவி கூறி, சீர்காரியை விளக்குமாற்றால் அடித்தாள். அவளுடைய சத்தத்தைக் கேட்டு, சத்திரத்தில் தங்கியிருந்த பள்ளி வேளாளர்கள் ஓடி வந்தார்கள். முன்கூட்டியே திட்டமிட்டபடி ஆண்டி, நாவிதன், பறையர் தங்கள் ஆயுதங்களுடன் அவர்களை வளைத்துக்கொண்டனர், இருதரப்பிலும் சண்டை ஏற்பட்டது.

திட்டமிட்டபடி கண்ணகுலத்தவர்கள் மூலனூர் பகுதியை நோக்கிச் சென்றார்கள். இதை அறிந்த பள்ளி வேளாளர்கள் கண்ணகுலத்தையும், நல்லம்மாளையும் மும்முடி நல்லதம்பிக்கவுண்டர், கந்தசாமிக்கவுண்டரையும் அவர்கள் சென்ற வழியில் தேடத் தொடங்கினார்கள்.

கண்ணகுலத்தார் தாங்கள் சென்ற பாதையில் பொற்காசுகளைப் போட்டவாறு சென்றார்கள். இவர்களைத் துரத்திய பள்ளி வேளாளர்கள் பொற்காசுகளைப் பொறுக்கிக்கொண்டு திசைமாறிப் போனார்கள். கண்ணகுலத்தார் பொன்னை வீசிச் சென்ற இடம் பொன்பரப்பி என்று பெயர் ஏற்பட்டது.

பொன்பரப்பியில் இருந்து புறப்பட்ட கண்ண குலத்தினர் மூலனூர் எல்லையைக் கடந்த போது இரண்டு வண்டிகள் குடை சாய்ந்து அச்சு முறிந்து விட்டது. கண்ணகுலத்தைச் சேர்ந்தவர்களில் ஒரு சிலரும் 500 கோத்திர கோமாரு செட்டியார்களும், அங்கே தங்கி விடுவது என்று முடிவு செய்து தாங்கள் கொண்டு வந்த சோளீஸ்வரன், வஞ்சியம்மன், செல்லாண்டியம்மன் ஆகிய தெய்வங்களை வைத்துக் கோயில் கட்டி அங்கேயே வசிக்கத் தொடங்கினார்கள்.

மும்முடி நல்லதம்பியரின் தலைமையில் வந்தவர்கள் அமராவதி ஆற்றின் கரையை அடைந்தனர், ஆற்றில் பெரு வெள்ளம் பெருகி ஓடியது. வண்டியில் வந்தவர்கள் அனைவரும் திடுக்கிட்டு நின்றார்கள். அப்போது சபதம் இட்ட நல்லம்மாள் மனம் உருகி மணலூர் கோட்டக்கரை சிவசெல்வி நல்ல நாயகி

அம்மனிடம் எங்களுக்கு வழிகாட்டு தாயே என்று வேண்டினாள். வெள்ளம் தணிந்தது; பரசல்களிலும், நடந்தும் அமராவதி ஆற்றைக் கடந்து வாளவந்தனூரை அடைந்தனர்.

தென்னீஸ்வரர், பெரியநாயகி அம்மன், அத்தனூர் அம்மன் ஆகிய தெய்வங்களை எழுந்தருளச் செய்து ஒருசிலர் அங்கேயே தங்கி விட்டார்கள். அமராவதி ஆற்றைக் கடக்கும் போது தங்கள் துணிமணிகள் நனையாமல் மறுகரைக்கு வந்தவர்கள் ஆதி நாட்டாரென்றும், ஆடை நனைந்து வந்தவர்கள், ஆதிகண்ணனென்றும், முழுவதும் நனைந்து வந்தவர்கள் ஆதி கண்ணந்தை என்று மூன்று பிரிவாகப் பிரிந்து அவரவர் பிரியப்படி செல்லலாம் என்று முடிவு செய்தார்கள்.

ஆதி நாட்டார் வெள்ளகோவிலுக்கும், காங்கேயத்திற்கும் இடையே வந்து தங்கித் தாங்கள் கொண்டு வந்த சோழீஸ்வரர், கரியகாளியம்மன் தெய்வங்களை எழுந்தருளச் செய்து தங்கள் பூர்வீக கண்ணபாடி நினைவாக கண்ணபுரம் என்றும் காணியை ஏற்படுத்தி அங்கேயே வாழத் தொடங்கினார்கள்.

மும்முடி நல்லதம்பி மன்றாடியார் தலைமையில் காங்கேய நாட்டிலுள்ள மற்ற இருகுலத்தாரும் புங்கரை வழியே நத்தக்காடையூர் சென்றடைந்தனர். அந்த கூட்டத்தில் நல்லதம்பி மனைவி பார்வதிக்கு சூரிய உதயத்தில் ஓர் ஆண் குழந்தை நொய்யல் ஆற்றங்கரையில் பிறந்தது. அக்குழந்தைக்கு சூரிய காங்கேயன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். அங்கே சில பேர் தங்கி விட்டார்கள்.

நொய்யல் ஆற்றைக் கடந்ததும், அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப எத்திசை வேண்டுமானாலும் செல்லலாம் என்று முடிவு எடுத்து நல்லதம்பி மன்றாடியார் தலைமையில், பூந்துறை நாட்டைச் சேர்ந்த விளக்கேத்தி, எழுமாத்தூர் வழியாக மொடக்குறிச்சியை அடைந்தனர். ஒரு பிரிவினர், நசியனூர், வந்தடைந்து அப்பத்தாள் சுவாமியை எழுந்தருளச் செய்து அங்கேயே வசிக்கத் தொடங்கினார்கள். மற்றவர்கள் காஞ்சிக்கோவில், ஜம்பை, கற்றாங்காணி, ஆகிய இடங்களைச் சென்றடைந்தனர், குலதெய்வங்களை எழுந்தருளச்செய்து அங்கே வசிக்கத் தொடங்கினர்.

மற்றொரு பிரிவினர் காகம் என்ற ஊரை அடைந்து வசிக்கத்தொடங்கினார்கள். மற்றவர்கள் காளமங்களம் அடைந்து குலவிளக்கு

அம்மனையும், கிளாம்பாடியை அடைந்தவர்கள் சொக்கநாச்சி அம்மனையும், கொளநால்லியை அடைந்தவர்கள் குழலி அம்மனையும் எழுந்தருளிச் செய்து அங்கேயே வசிக்கத் தொடங்கினார்கள்.

நல்லதம்பி மன்றாடியாரும், அவர் மகன் சூரிய காங்கேயனும், மற்றவர்களும் காவிரி ஆற்றைத் தாண்டி இறையமங்கலம் சென்று மௌசி, மோரூர் ஆகிய ஊர்களில் காணி கொண்டு வாழத் தொடங்கினார்கள். கண்ணகுலத்தில், சிறந்து விளங்கிய சூரிய காங்கேயனை 'ஆரியர் போற்றும் மோரூர் சூரிய காங்கேயன்' என்று போற்றினார்கள்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனார் கூற்றுக்கேற்ப, கண்ணகுலத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது உலக நாடுகள் அனைத்திலும் அரசியல் உட்பட எல்லாத் துறைகளிலும் சிறந்து சிறப்பாக வாழ்ந்துகொண்டு உள்ளார்கள்.

கற்பு நெறி குறையாத காராள வம்சம், வேற்புக் குறையாத வேளாளர் இனம், காப்புக் குறையாத கவுண்டர்கள் குலங்கள் ஆழ்போல் தழைத்து, அருகு போல் வேரூன்றி, மூங்கில் போல் கிளை கிளைத்து வளர்ந்து வரும் கொங்கு வேளாளக் கவுண்டர் குலவம்சம், வாழ்க! வாழ்கவே!


திரு.முத்துசாமி
முன்னாள் தலைவர்
கொங்கு வேளாளர் இளைஞர் சங்கம்,
கொங்கு கலையரங்கம், சம்பத்நகர், ஈரோடு–638011
செல்: 98428 69888, 90950 69888

## கொங்கு வேளாளர் சமூக நல்லுறவு

– கொங்கு மாமணி விருதாளர் புலவர் செ.இராசு

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்த எல்லாச் சமூகத்தவர்களோடும் நேசமும், நல்லுறவும் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்று கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலம் தெரிகின்றது. பிற சமுதாயங்களோடு இணைந்து பலர் ஆலயப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். கொடைகள் அளித்துள்ளனர்.

முருங்கத்தொழுவு, நசியனூர், வெள்ளோடு போன்ற ஊர்களில் பொருளந்தை குலத்தாரும், சாத்தந்தை குலத்தாரும், கண்ணகுலத்தாரும் ஊர்க்கணக்கரோடு சேர்ந்து கோயில்திருப்பணிகளைச் செய்துள்ளனர். எலவமலை சாத்தந்தை குலத்தார் கோயில் பூசாரிகளான ஆண்டிகளுடன் சேர்ந்து கோயில் கட்டியுள்ளனர். ஊதியூர் வாணவராய நல்லூர்க் கோயிலில் வத்தமுதலி மக்கள் தெய்வானை கோயில் திருப்பணிக்கு உதவியதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஊஞ்சலூர் நாகீசுவரர் கோயில் கல்வெட்டில் கொங்கு வேளாளர் தனஞ்செயகுலத்தாயாண்டார் அவ்வூர் மலைய வேட்டுவர், அந்துவ வேட்டுவர், நச்சுழி வேட்டுவர் ஆகியோரோடு இணைந்து கொடுமுடிக் கோயில்களின் மன்றாட்டுப் பெற்றுள்ளார். பூந்துறையில் காடைகுலப் பெருமக்கள் குப்பிச்சி நயினார், நல்ல நயினார், மூத்த நயினார் வேலாண்ட நயினார் ஆகியோர் பூவாணி வேட்டுவர், வெம்ப வேட்டுவர், வில்லிவேட்டுவர் ஆகியோரோடு சேர்ந்து பூந்துறை அய்யனார் கோயிலுக்கு விளக்கெரிக்க எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். சேவூரில் இருந்த வேளாளர் சபையும் (வெள்ளாநாட்டார்), வேட்டுவர் சபையும் (பூலுவ நாட்டார்) இணைந்து காரையப்பாடி என்ற ஊரை அழகப் பெருமாள் கோயிலுக்குக் கொடையாக அளித்துள்ளனர்.

கோயில் கட்டுக்குக்கொடை கொடுத்தும் ஆலயப்பணிகள் செய்தும் பொருட்செலவு செய்த கொங்கு வேளாண் பெருமக்கள் கொடையைக் கல்லில் வெட்ட ஓலை எழுதியவர்கள் பெயரையும், கல்லில் எழுத்துகளைப் பொறித்தவர் பெயரையும், ஆலயப்பணி செய்த சிற்பியர் பெயரையும் கல்லில் பொறித்து அவர்கள் பெயரும் நின்று நிலவச்செய்த பெருமை வேறு எங்கும் காணப்படாத

நிகழ்ச்சிகளாகும். கொற்றனூர்ப் பெரிய குல வேணாடுடையாரும், சிறுக்கிணறு ஆந்தை குலத்தாரும் இணைந்து கட்டிய பெரியநாயகியம்மன் கோயில் திருப்பணி வேலை செய்த பாப்பனாசாரி பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஜமீன் ஊத்துக்குழி சாத்தந்தை குலக் குமரசாமிக்காலிங்கராயர் அகத்தூர் அம்மன் கோயிலில் இருவேறு காலங்களில் செய்த திருப்பணிக் கல்வெட்டில் அய்யாறு குட்டியாசாரி மகன் எழுவராயன் கைவேலை, குருநாத ஆசாரிமகன் பத்திரனாசாரி என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

கத்தாங்கண்ணி வெண்டுவ குலத்தார் செய்த ஆயிஅம்மன் கோயில் திருப்பணிக் கல்வெட்டுகளில் கவில் எழுதியது சதாசிவ முதலியார் உபாத்தியாயர் முத்து, சின்னாபோயன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. பாண்டி நாட்டிலிருந்து 24 வேட்கோவர் குடும்பங்களைக்கொண்டு நாட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து கொங்கு நாட்டில் குடியேற்றி அவர்கட்கு "கொங்குத் திரு நீலகண்டர்" என்று பெயர் கொடுத்துக் கொங்குவேளாளர் உட்படப் பல சமூகத்தாருக்குக் கொடுக்கவேண்டிய நவபாண்டங்கள், அவர்கட்கு மற்ற சமூகத்தார் கொடுக்க வேண்டிய பணம் இவைகளை நிர்ணயம் செய்து செப்பேடு தந்தனர். உண்பதும் உடுப்பதும் ஒன்று; கொள்வினை கொடுப்பினை மட்டும் இல்லை' என்று உரிமை அளித்தனர்.

நாகம்பள்ளியில் பண்டாரங்கட்கு இடையில் ஏற்பட்ட சிக்கலை நீக்கி ஒப்பந்தம் ஏற்பட ஆதி, அந்துவன், சாத்தந்தை, பூச்சந்தை குலத்தார் உதவினர். கைகால் ஊனமுற்ற முடவர்கள் காப்பகம் பூந்துறை காடை குலத்தார் சத்தியமங்கலத்தில் (கஸ்பாபேட்டை) (முடவர் சத்திரம்) ஏற்படுத்தி ஏழு ஊர்கள் கொடை கொடுத்து அச்சத்திரம் இயங்க யார் யார் எவ்வளவு பொருள் தரவேண்டும் என்பதையும் நிர்ணயம் செய்தனர்.

வேளாண்மையை மேற்கொண்ட வேளாளர்கட்கும் வேட்டைத்தொழிலை மேற்கொண்ட வேட்டுவர்கட்கும் தொழில் போட்டி காரணமாக ஆங்காங்குச் சிறுபிணக்குகள் ஏற்பட்டாலும் வேளாளர் வேட்டுவர் இடையே பன்னெடுங்காலமாக நல்லுறவு நிலவி வந்துள்ளது என்பதைப் பல ஆவணங்கள் கூறுகின்றன. மணலூர் நாட்டில் கொங்கு வேளாளர் கண்ணகுலத்தார்க்கும் பள்ளிவேளாளர்கட்கும் (வன்னியர்) கருத்து மாறுபாடு ஏற்பட்ட போது அப்பகுதி வேட்டுவர்கள் கண்ண குலத்தார்க்கு ஆதரவாகவும், பக்க பலமாகவும் இருந்துள்ளனர். கன்னிவாடி கண்ணகுலப் பட்டயம் வில்வேட்டுவர், விளக்கு வேட்டுவர், கண்ணாடி வேட்டுவர்,

கரும்புளி வேட்டுவர், மாச்சாடி வேட்டுவர் ஆகியோரைக் கண்ணகுலத்தார் தங்கள் 'பாதிப் பங்காளிகள்' என்று அழைத்துள்ளதாகக் கூறுகிறது.

ஆலத்தூர்க் காணியுடைய கொங்கு வேளாளர்கள் உள்ளூர்க்கோயிலில் அம்மை அழைக்கும் உரிமையை வேட்டுவர்கட்கு அளித்துள்ளனர். தென்னிலை வேட்டுவர் தலைவர் கொங்குராயன் மாந்தபுரத்தின் கால்நடைகளைக் கவர்ந்து தொல்லை கொடுக்க முனைந்த போது கொங்கு வேளாளரோடு சேர்ந்து எதிர்த்துப் போரிட்டு வீரமரணம் அடைந்தவர் காவில வேட்டுவர் பெரிய தம்பிக்கவுண்டர் மகன் பெரியண்ணன்.


வேட்டுவத் தலைவர் கொங்குராயனை வென்று அழகன் சர்க்கரை காரையூர் கொடுமணல் காணி பெறும் போது அதை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டவர்களில் விசயமங்கலம் வேட்டுவர் விசயகவுண்டர், கார்வளி வெள்ளைவேட்டுவர் முத்தரைக்கவுண்டர், கீரனூர் குடுமி வேட்டுவர் செம்பராயன் என்பவர்கள் அடங்குவர். முத்தூர் உரிமைக்காக அங்குள்ள வேளாளர்களோடு இணைந்து போரிட்டுச் சிறைப்பட்டுச் சிவசமுத்திரம் சென்றவர் வெங்கச்சி வேட்டுவர் கண்டிய கவுண்டர் மகன் பெரிய சோழியப்பன். அம்முயற்சியால் வீரமரணம் அடைந்து புகழ் பெற்றவர்களில் வேட்டுவர் காவிலுவர் கருமத சரவண கவுண்டர் மகன் சோழியப்பன் என்பவரும் ஒருவர்.

பூந்துறை வாரணவசிக் கவுண்டர் முடவாண்டிகள் சத்திரம் ஏற்படுத்தியபோது வீட்டுக்கு 8 பணம், பட்டிக்கு ஒரு பணம் மகமை கொடுத்து வேட்டுவகுலப் பெருமக்கள் உதவினர். தீரன் சின்னமலை தன் போர் முயற்சிக்குத் தகுந்த இடம் தேடியபோது தன் காட்டை அளித்தவர் பட்டாலி வேட்டுவர் அனுமந்தக்கவுண்டர். மொடவாண்டிகள் பட்டயம் 'கொங்கு வேட்டுவர்' என்றே அழைக்கிறது. கொங்கு வேளாளர்களும் வேட்டுவகுலப் பெருமக்களை 'வாளரச மணவாளர்' 'குருகுலத்தார்' கும்பிட்டாரை வெட்டாத குருகுல வம்சம் என்று அழைத்துச் சிறப்பித்தனர்.

## கோவை அ.அய்யாமுத்து

(டிசம்பர், 1898-21/12/1975)

நமது சமுதாயத்தில் கால ஓட்டத்தில் மறக்கப்பட்ட மாமனிதர்கள் நிறைய உண்டு. அந்தப் பட்டியலில் முதலிடத்தில் வருபவர் கோவை அய்யாமுத்து அவர்கள். விடுதலைப் போராட்டத்தில் தம்பதியராகச் சிறைச் சென்ற பெருமையும் இவருக்கும், இவரது மனைவி திருமதி கோவிந்தம்மா அவர்களுக்கும் உண்டு.



"கோவை அய்யா முத்து அவர்களை அரசியல் உலகமும், கதர் உலகமும் நன்கு அறியும். நாட்டில் நன்கு தெரிந்த தேசபக்தர். அவர் மனைவியுடன் போராட்ட காலத்தில் சிறை சென்றவர் தமிழகத்தில் கதர் இயக்கத்தைப் பலமாக வேரூன்றச் செய்ததில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. நல்ல நிர்வாகி மட்டுமின்றி நல்ல கவிஞரும், எழுத்தாளரும் கூட. 1954 ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் போது சிறந்த சிறு தொழில் கண்காட்சியை ஏற்பாடு செய்த பெருமை இவருக்கு உண்டு. மனதில் இளகிய உள்ளம் கொண்டவராக இருந்தாலும் சொல்லில் கடுமையாக இருப்பார். செயலில் கறாராக இருப்பார். அவருடைய வாழ்க்கை இளைஞர்களுக்கு முன்னுதாரணம்."

**அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள் இவரைப்பற்றிக் கூறியது.**

கதரியக்கத்தில் இவரது அளப்பரிய பணியைப் பார்த்து அயர்வறியாத உழைப்பாளி என மகாத்மாவால் பாராட்டப்பட்டவர். "அய்யாமுத்தென்றால் கதர்.கதர் என்றால் அய்யாமுத்து. நான் அறிந்த தேசத்தொண்டர்களுள் மிக யோக்கியமானவர்களில் முதல் வரிசையில் ஒருவர். குணம், சாமர்த்தியம், அறிவு மூன்றிலும் குறைவில்லாதவர்". என ராஜாஜியால் புகழப்பட்டவர். "சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம் ஆகிய துறைகளில் நான் தொண்டாற்றும் போது என்னோடு இருந்து சில சமயங்களில் வழிகாட்டியாகக் கூட இருந்தார்." என்று பெரியார் குறிப்பிட்டிருக்கிறார். பெரியார் அவர்கள் தான் நடத்தி வந்த குடியரசு பத்திரிகையை இவரது பொறுப்பில் கொடுத்தார். ஈரோட்டில் 8000 பிரதிகள் அச்சாகியிருந்த

அப்பத்திகை அய்யாமுத்து அவர்கள் தலைமையில் சென்னைக்கு மாறிய நான்கே மாதங்களில் பதிமூன்றாயிரமாக உயர்ந்தது.

பொள்ளாச்சி கிணத்துக்கடவிற்கு அருகில் உள்ள சங்காரம் பாளையத்தில் இருந்த தனது நிலத்தை (சுமார் 16 ஏக்கர்) சர்வோதயா சங்கத்திற்கு அளித்தவர். காந்தி பண்ணை என்று அழைக்கப்படும் இவரது இந்தத் தோட்டத்தில்தான் கிணத்துக்கடவு காதி வஸ்திராலயத்தின் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. கோவை மாநகரில் ஓர் உழைப்பாளர் குடும்பத்தில் 1898ல் பிறந்தவர். பயிரன் குலத்தைச் சார்ந்த இவரது சொந்தக் கிராமம் காங்கேயத்தைச் சார்ந்த பரஞ்சேர்வழி. இவரது பாட்டனார் ஆயிக்கவுண்டர் காலத்திலேயே கோவை சென்று குடியேறி விட்டார்கள். கோவை புஞ்சை புளியம்பட்டியில் பாரத சர்க்கா சங்கத்தின் கதர் உற்பத்திச் சாலையை நிறுவி 1931 வரை ஆறு ஆண்டுகள் அங்குப் பணியாற்றினார். அருகில் இருந்த காவல் நிலைய வளாகத்தில் இருந்த கிணற்றில் ஹரிஜன மக்களும் நீரெடுக்கப் போராடியவர். ராட்டையில் நூல் நூற்பது, தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் சேரிகளுக்குச் சென்று அவர்களுக்குச் சுகாதாரத்தைக் கற்றுக்கொடுத்து அங்குச் சுத்தம் செய்வது போன்ற பல பணிகளை மேற்கொண்டார். கதருக்காகக் குடிநூல் என்னும் மாதாந்திரப் பத்திரிகையை நடத்தினார்.

“எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே…
தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம் - கல்வி
தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம் - ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லினைப் போக்குவோம்

எத்தனை காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
சொந்த நாட்டியே நம் நாட்டிலே”

மலைக்கள்ளன் படத்தில் வரும் பிரபலமான பாடல் இது.

தஞ்சை ராமையா தாஸ் பல்லவி மட்டும் எழுதிய பின் ஏதோ மனத்தாங்கலில் வெளியேற மீதம் முழுப்பாடலையும் எழுதி நிறைவு செய்தவர் விடுதலைப் போராட்ட வீரர் கோவை அய்யாமுத்து அவர்கள். ஆனால் இவரது பெயர் பெரும்பாலும் எங்கும் குறிப்பிடப்படவில்லை. சிவாஜி மாதப் பத்திரிகையில் வெளிவந்த இவரது கட்டுரைகளையும், பிற கடிதங்களையும், படங்களையும் திரு.நா.மகாலிங்கம் அவர்கள்

வானதி பதிப்பகத்தில் சேர்த்து அய்யாமுத்து அவர்களின் எழுத்துகள் 'எனது நினைவுகள்' என்னும் அழியாத படைப்பாக வெளிவந்தது. "எனது நினைவுகள்" என்னும் இந்த சுய சரித நூல். விடுதலைப்போர், கதரியக்கத்தின் செயல்பாடுகள், மது விலக்கு மற்றும் அன்றைய கோவை மாநகரம், குமரி முதல் இமயம் வரை இவர் மேற்கொண்ட பயணங்கள், திரைக்கடல் கடந்து மெசபடோமியா, பர்மா, இலங்கை ஆகிய தேசங்களில் மேற்கொண்ட பயணங்கள் என இவை அனைத்தின் ஆவணத் தொகுப்பு என்றே சொல்லலாம்.

ராஜாஜி என் தந்தை,
நான் கண்ட பெரியார்,
காந்தி தரிசனம் போன்ற நூல்களையும், எங்கே செல்கிறோம்,
சுதந்திரா காட்சி ஏன்?

சோசலிசம் போன்ற கட்டுரைத் தொகுப்புகளையும், இராஜ பக்தி, இன்ப சாகரன் போன்ற நாடகங்களையும், நாட்டுப்புறம், மேய்ந்த லாடம் போன்ற கவிதைத் தொகுப்புகளையும் எழுதியவர், கஞ்சன் என்கிற திரைப்படத்திற்குக் கதை, வசனம், பாடல் எழுதி அதனைத் தாமே இயக்கினார்.

அரசியல் உலகமும், கதர் உலகமும் நன்கு அறிந்த தேசபக்தரான கோவை அய்யாமுத்து அவர்களைப் பற்றி அதிகம் வெளிவராத அரிய தகவல்கள் நிறைய உண்டு. வைக்கத்துப் போர், சுசீந்திரத்தில் தாணுமாலயன் ஆலயப் பிரவேசப் போராட்டம் ஆகியவற்றின் போது பாரதியார் பாடல்களை உணர்வுபூர்வமாகப் பாடி மக்கள் திரளை எழுச்சி கொள்ள வைத்தார். புதுப்பாளையம் காந்தி ஆசிரமம் அமைக்கும் பணியின்போது கிட்டத்தட்ட ஆறு மாத காலம் அங்கேயே தங்கி பி.கே. இரத்தின சபாபதி கவுண்டர் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார். மகாத்மாகாந்தி இவரை அயர்வறியாத உழைப்பாளி எனப் பாராட்டியிருக்கிறார். ஏனென்றால் ஓய்வு என்பது இவருக்குப் பிடிக்காத ஒன்றாகவே இருந்தது. ''ஓயாத வேலை இருந்தால் எனதுள்ளம் இன்பத்தில் துவளும். வேலையில்லாத போது மனச்சோர்வு உண்டாகும். சாகும் வரையில் வேலை செய்து கொண்டே இருக்க முடியுமானால் மனிதன் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் சலிப்பும், சஞ்சலமும் இன்றி வாழ முடியும். வேலையின்மை அல்லது வேலை செய்ய முடியாத நிலைமையைப் போன்ற கொடிய நோய் மனிதனுக்கில்லை'' என்ற திரு.அய்யாமுத்து அவர்களின் வரிகளின் மூலம் இதனை நன்கு அறியலாம்.

நகர வாழ்க்கை வெறுத்த தருணத்தில் சிங்கராம்பாளையத்திற்கு அருகில் சுமார் 23 ஏக்கர் நிலத்தை வாங்கி அதனைப் பண்படுத்தி விவசாய பூமிக்கு “காந்தி பண்ணை” என்றும், வீட்டிற்கு ‘ராஜாஜி இல்லம்’ என்றும் பெயர் சூட்டினார். யாதும் பெறாத மனித உருவங்கட்கெல்லாம் தமிழகத்தின் சந்திலும். பொந்திலும், சுடுகாட்டிலும் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டு வரும் நாளிலே நம்மை மானத்தோடு வாழ வைத்த மகாத்மாகாந்திக்கு ஒரு சிலை ஏன் எழுப்பக்கூடாதென்ற எண்ணம் அவருக்குத் தோன்றவே, காந்தி பண்ணையின் முகப்பில் ஒரு மேடை எழுப்பி அதன் மீது காந்தி சிலை அமைத்தார். அதனை முறைப்படி கோவை நவ இந்தியா பத்திரிகை ஆசிரியர் திரு.V.N.ராமசாமி 1970இல் திறந்து வைத்தார்.

மூதறிஞர் ராஜாஜீ அவர்கள் கோவை அய்யாமுத்து அவர்கள் மீது தனிப்பற்றுக் கொண்டிருந்தார். ராஜாஜி என் தந்தை என்னும் 176 பக்கங்கள் கொண்ட புத்தகத்தை எழுதியிருக்கிறார். இந்திய சுதந்திர தின வெள்ளி விழாவில் கலந்துகொண்டு தாமிரப் பட்டயம் பெற்ற இவரின் மனைவி திருமதி கோவிந்தம்மாவும் சுதந்தரப் போராட்டத்தில் கலந்துகொண்டவர். இருமுறை சிறை சென்று ஓராண்டு தண்டனை அனுபவித்தவர். 1993இல் திருச்செங்கோட்டில் ராஜாஜியுடன் கைதாகி ஆறு மாதங்கள் கடினகாவல் தண்டனை பெற்று வேலூர் பெண்கள் சிறையில் சி வகுப்புக் கைதியாக வேதனைப்பட்டவர். அறிவார்ந்த சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவராக விளங்கியவர் அய்யாமுத்து அவர்கள். தேச விடுதலையா, சமுதாய விடுதலையா எது முக்கியம் என்பது குறித்து அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற சமூகச் சீர்த்திருத்த மாநாட்டில் அய்யாமுத்து அவர்கள் பின்வருமாறு பேசுகிறார்:

“நாம் கொப்பளங்களுக்கு மருந்து பூசுவதுடன் நின்றுவிடாமல் இரத்தம் சுத்தியாகும் பொருட்டு உள்மருந்தும் சாப்பிடவேண்டும் என்று காந்தியார் கூறுகின்றார். எனவே தேசவிடுதலைக்கும் போராட வேண்டும், சமுதாய விடுதலைக்கும் போராட வேண்டும். தேச விடுதலை பெற்று விட்டால் சமுதாய விடுதலையும், பொருளாதார விடுதலையும் பெற்று மக்கள் சரிநிகர் சமமாக வாழச் செய்வது மிக எளிதாகும். தேசிய விடுதலைப்போர் வீரர்களும், சமுதாய விடுதலைப்போர் வீரர்களும் தோளோடு தோள் சேர்ந்து ஒன்றாக நிற்க வேண்டும்.


இத்தகைய சிறப்பும், பன்முகத் திறமையும் கொண்ட கோவை அய்யாமுத்து அவர்களின் புகழை இத்தலைமுறையினரும் அறியும் வண்ணம் பரப்புவது நமது கடமையாகும். அவரது சுயசரிதையான ‘எனது நினைவுகள்’ தமிழ்நாட்டின் ஒரு காலகட்டத்தின் சரியான கணிப்பு. இந்நூலைப் பதிப்பித்த வானதி பதிப்பகம் ஏ.திருநாவுக்கரசு அவர்கள் கோவை அய்யாமுத்து அவர்களைப் பற்றிக் கூறியுள்ள பின்வரும் வரிகள் அவரின் நீடித்த புகழினைப் பறைசாற்றும்.

“சுதந்தரப் போராட்ட வரலாற்றில் காந்தி சகாப்தம் முக்கியமானது. பட்டிதொட்டிகளுக்கெல்லாம் நாட்டுப்பற்றைப் பரப்பத் தன்னலமற்ற தியாகிகள் இரவுபகல் பாராமல், பசி, தூக்கம் இல்லாமல் பெரும்படையெனத் திரண்டு ஒரே முனைப்பாகத் தொண்டாற்ற முன் வந்தனர். அத்தகைய திருக்கூட்டத்தைச் சார்ந்த பலரின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் ஒருங்கே பெற்றவர் உயர்திரு அய்யாமுத்து அவர்கள். கொங்கு நாட்டுச் சிங்கம் எனப் பிரசித்தி பெற்றவர். கோவையைச் சேர்ந்தவர் எனினும் தமிழகம் முழுவதிலுமுள்ள பெருமக்களின் நம்பிக்கையையும், ராஜாஜி, பெரியார் போன்ற பெரும் தலைவர்களின் நன்மதிப்பையும் ஒருங்கே பெற்றவர். தூய தேசபக்தர், கவிஞர், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், தேசப்பற்றையே உயிர்மூச்சாகக்கொண்டவர், நாடகாசிரியர், நண்பர்களில் சிறந்த நண்பர் எனப் போற்றப்படுபவர்”

வளர்க, அய்யாமுத்து அவர்களின் நீடித்த புகழ்!

- ஏ.உமாமகேஸ்வரி

## சிலம்பொலி செல்லப்பன்



கொங்குதமிழ் நாட்டினிலே
தோன்றியநல் தமிழாறு!
இசையோடு பாய்ந்தோடும்
இன்னிசைச் தேனருவி!
வைகைநதித் தமிழ்ச்சேயை
வளர்க்கின்ற தாய்ச்செவிலி!
மேடை தொறும் நற்றமிழின்
புகழ்பாடும் பூங்காற்று!
சங்கமெனும் கடல்கடைந்து
தமிழமுதம் தரும்நெடியோன்!
புலமையெனும் பூந்தடத்தில்
பூத்தசெந் தாமரை!
பாதந்தோறும் தேனெடுத்துக்
கூடுகட்டும் கோத்தும்பி!
தமிழோடு தனைக்கரைத்த
செம்புலப் பெயல்நீரான்!
இத்தகைய
சிறப்புகள் அத்தனையும்
சேர்ந்தொன்றாய் உருவானான்
சிலம்பொலியாம் செல்லப்பன்
எனுந்திருப் பெயர்கொண்டான்!

கவிதையொடு கட்டுரைகள்
காப்பியம்நல் திரைஇசையும்
தகவுடைய சிறுகதைகள்
தன்வரலா றாய்வுநூல்
என்றுபல துறைநூல்கள்
இவன்தோய்ந்தே ஆராய்ந்து
சொல்லழகும் பொருளழகும்

துள்ளிவரும் கருத்தழகும்
பல்சுவையும் நடமிடவே
அணிந்துரைகள் வனைந்துள்ளான்!
பரந்துள்ள கடல்நீரைப்
பருகிட்ட குறுமுனிபோல்
விரிந்துள்ள நூற்சிறப்பை
வித்தகமாய்த் தான்தொகுத்துச்
சிறுதுளியாம் பனித்துளியில்
பெரும்பனையும் தோன்றுதல்போல்
அணிந்துரையில் முழுநூலை
அடக்கிஇவன் காட்டிவிட்டான்!

இந்நூல்
கல்லூரி மாணவர்க்குக்
கரைகாட்டும் ஒளிவிளக்கு!
கற்பிக்கும் ஆசானுக்(கு)
உற்றதொரு ஊன்றுகோல்!
ஆய்வுநூல் மாணவர்க்கு
அறியதொரு புதையலாகும்!
கல்லாரைக் காற்றாராய்க்
கரைசேர்க்கும் பெருந்தோணி!
கருத்துபல கசிந்தூறும்
கன்மலையின் சுனையாகும்!
அணிந்துரைகள் அணிவகுக்க
அழகியதோர் நூலாக
எம்மொழியாம் தமிழ்மொழியில்
இதுபோல வந்ததில்லை!

எனவே இவன்
தன்திறத்தால் தமிழ்மொழியைத்

தானுயர்த்தி வைத்தானா?
தானுரைத்த தமிழாலே
தானுயர்ந்து நின்றானா?
எம்மாலே பதிலுரைக்க
இயலாது பெரியோரே!
உம்மாலே விடைகூற
ஒல்லுமோ இயம்பிடுக!

நன்னூல்கள் தருவதுவே
நமது கடன் என்றிருக்கும்
பன்னூலின் தாயகமாம்
பழனியப்பா பிரதர்ஸார்
இந்நூலைத் தமிழன்னைக்(கு)
ஏற்புடைய ஆரமெனச்
சூட்டுக்கு முன்வந்தோம்
தொடர்ந்தெம்மை ஆதரிப்பீர்!
பாத்திரத்தை எடுத்துவைத்துப்
பருகிடவே முன்வைத்தோம்!
பாத்திறமும் பல்திறமும்
பயன்துய்த்து மகிழ்ந்திடுக!

(சிலம்பொலியார் அணிந்துரைகள் நூலுக்குப் பதிப்பகத்தார்
வழங்கிய பதிப்புரை)

## சி.க.கருப்பண்ணன்



சுங்க இலாகாவில் மிக உயர்ந்த பணியிலிருக்கும் பொழுதே கொங்கு நாடு இல்லக் (மகளிர் விடுதி) கட்டிடத்திற்காக சேலம், ஈரோடு, நாமக்கல் பகுதிகளில் அன்றைய சங்க நிர்வாகிகளுடன் இணைந்து பெருமளவு நிதி வசூலிக்கப் பெரிதும் உதவிய பெருமகன் எஸ்.கே.கருப்பன் என்கிற சி.க.கருப்பண்ணன் ஐ.ஆர்.எஸ். அவர்கள். கோவை செழியன் அவர்களின் உற்ற நண்பராக இருந்து கொங்கு வேளாண் கவுண்டர்கள் பேரவைக்கு ஊக்கமளித்த பெருந்தகையாளர் சி.க.கருப்பண்ணன் அவர்கள். சங்கச் செய்தி மடலின் ஆசிரியராகப் பொறுப்பு வகித்த காலத்தில் அதை முறையாகப் பதிவு செய்து அஞ்சல் கட்டணம் குறையக் காரணமானவர். தீரன் சின்னமலைக்குச் சென்னையில் சிலை வைக்க வேண்டும் என்று செய்தி மடலில் முதன்முதலில் வலியுறுத்தி எழுதியவர். கொங்கு முன்னோர்களை அட்டைப்படங்களாக அலங்கரிக்கச் செய்து அவர்களைப்பற்றிய தரவுகளைத் திரட்டிக் கட்டுரைகளாக எழுதியவர்.

தனது இறுதிக்காலம் வரை தொடர்ந்து, கொங்கு மக்களுக்காக ஓயாது எழுதிக் கொண்டிருந்தவர். தனது மனைவியின் நினைவாக ‘செல்லம் மழைலையர் பள்ளி’ என்ற பெயரில் நாமக்கல்லில் ஏழைக் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தோடு கூடிய இலவசக் கல்வியைப் புகட்டியது மட்டுமல்லாமல் அவர்களுக்கு தூய தமிழ்ப்பெயர்களைச் சூட்டி மகிழ்ந்த தமிழ்ப்பற்றாளர். அகில இந்திய அளவில் சுங்க இலாகா அலுவலர்கள் சங்கப் பொறுப்பில் இருந்த பொழுது மய்ய அரசுடன் துணிச்சலுடன் போராடி, வாதாடிப் பல வெற்றிகளைப் பெற்றுத் தந்தவர்.

‘நேர்மையின் சிகரம்’ என்ற எல்லோராலும் பாராட்டப்பட்டாலும், தன்னை ஒரு துணிச்சல் மிக்க சுயமரியாதைக்காரர் என்று போற்றப்படுவதையே தாம் பெரிதும் விரும்புவதாக அடிக்கடி குறிப்பிடுவார்.

சங்க செயற்குழுவின் முன்னாள் உறுப்பினரான இவர், குடும்பவிழாவில் வழங்கும் சாதனையாளர் விருதிற்காக தனது பெயரில் பத்தாயிரம் ரூபாய் வைப்புத்தொகை வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மறைந்த அன்னாரது புகழ் ஓங்குக !

இப்படிக்கு
வீ.க.செல்வக்குமார்
செயலாளர்

# குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப் பணி



**முன்னுரை :**

குமாரமங்கலம் என்றவுடன் நினைவுக்கு வருவபர் டாக்டர் ப.சுப்பராயன். மிகச்சிறந்த மனிதர். இவர் குடும்பத்தைச் சேர்ந்த பலர், பல துறைகளில் உயர் பதவி, பொறுப்புகளை ஏற்று நாடறிய வாழ்ந்தனர். தமிழினத்திற்கே அக்குடும்பத்தாரால் அளப்பரிய பெருமை என்றாலும் மிகையல்ல. அத்தகைய குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருள் :**

டாக்டர் சுப்பராயன் குடும்பத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல ஒரு பல்கலைக்கழகம் என்றே சொல்லலாம்.

**கல்வி :**

கல்வியின் மீது கொண்ட அளவற்ற ஆசையால், லண்டனுக்குப் போய் திரு.சுப்பராயன் படித்தார். முதல் உலகப்போர் தொடங்கியதால், தாயகம் திரும்ப முடியாத சூழ்நிலையில், அயர்லாந்து சென்று அங்கே உயர்கல்வி படித்தார். சட்டத்துறையில் டாக்டர் பட்டம் பெறுவது அன்றைய நாள்களில் அபூர்வம். அந்த ஆராய்ச்சிப் பட்டத்தையும் பெற்றுத் தாயகம் திரும்பினார்.

**குடும்பம் :**

அவருடைய மனைவி திருமதி இராதாபாய் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்களுக்கு 3 மகன்கள் மற்றும் மகள். இந்து சீக்கியர், கிருத்துவர், பார்சி ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்கள். டாக்டர் சுப்பராயன் வீட்டில் சம்பந்தம் செய்திருக்கின்றார்கள்.

**சாதனைகள் :**

- விடுதலைக்கு முந்தைய சென்னை மாகாணத்தின் மூன்றவாது முதலமைச்சர்; அப்பதவிக்கு வந்த முதல் தமிழர்.

- அரசுப்பணியாளர்களுக்கு தேர்வாணையம் Hindu Religious Endowment) இவரால் தான் கொண்டு வரப்பட்டது.
- திருவள்ளுவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டதும், டெல்லி நாடாளுமன்றத்தில் திருவள்ளுவர் திருவுருவப் படம் வைத்ததும் இவருடைய முயற்சியால்தான் நிறைவேறின.
- சுயமரியாதைக் கருத்துகளைத் தமிழ்நாட்டில் வித்திட்டவர்களில் இவருக்குப் பெரும் பங்குண்டு.
- நாட்டுடமை ஆக்கப்பட்டது வங்கிகள்.

**குடும்பத்தினர் பணியாற்றிய துறைகள் :**

- இந்தியாவிலேயே முதன்முதலாகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்டுகீட்டுச் சட்டம் கொண்டு வந்தவர்.
- டில்லி பாராளுமன்றத்தின் முதன்முதலில் ஒலித்த பெண்குரல் இராதாபாய் சுப்பராயன்.
- இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது மூத்த மகன் பி.பி.குமாரமங்கலம் நிகழ்த்திய சாகசம் காவியம்.
- இரண்டாவது மகன் ஜெபர்த கோபால் குமாரமங்கலத்தின் சாதனைக்குச் சான்று நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்
- ஒரே மகளான பார்வதி கிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினராய் இருந்தார்.

**முடிவுரை :**

அளப்பரிய சாதனைகளைச் செய்து நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த டாக்டர் சுப்பராயன் குடும்பத்தினரின் பணி மகத்தானது. நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட தியாக தீபங்களான டாக்டர் சுப்பராயன் குடும்ப வரலாற்றினை, இன்றைய இந்திய இளைய தலைமுறைக்கு, குறிப்பாக, தமிழக இளைஞர்கள் மனதில் பதியச் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜி.ஏ.அக்ஷரா |
| தந்தையின் பெயர் | : | ஜெ.ஜி.அருண்ராஜா |
| பள்ளி | : | வேல்ஸ் வித்யாஸ்ரம், பல்லாவரம் |
| வகுப்பு | : | ஐந்தாம் வகுப்பு |

# குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி



**முன்னுரை :**

தாய் தமிழ்நாட்டில் பெருவாழ்வு வாழ்ந்து, மறைந்த மாமேதைகளில் ஒருவரும், சுயமரியாதைக் கருத்துகளைத் தமிழ்நாட்டில் வித்திட்டவர்களில் ஒருவருமான டாக்டர் ப.சுப்பராயன் அவர்களைப் பற்றியும், அவர் குடும்பத்தினரின் சமூகப் பணியைப்பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**பொருள் :**

சென்னை இராஜதானியின் பிரதம அமைச்சராக, மத்திய, மாநில அமைச்சராக, மாநில ஆளுநராக, இந்திய நாட்டின் தூதுவராக, தாய்மொழிப்பற்றும், தாய் நாட்டுப் பற்றும் கொண்டவராக, ஆங்கிலேயர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட, நிர்வாகத் திறமை கொண்டு விளங்கிய மாபெரும் மனிதர் டாக்டர் ப.சுப்பராயன்.

**குடும்பம் :**

டாக்டர் ப.சுப்பராயன் குடும்பத்தைப் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல ஒரு பல்கலைக்கழகம் என்றே சொல்லலாம். அவருடைய மனைவி திருமதி இ.ராதாபாய் பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர்களின் மூன்று புதல்வர்களும் ஒரு மகளும் சுய சிந்தனைவாதிகளாக வளர்ந்து அவர்களின் குடும்பத்திற்கும், பாரத தேசத்திற்கும் பெருமை சேர்த்தவர்கள். தமிழினத்திற்கே அக்குடும்பத்தாரால் அளப்பரிய பெருமை என்றாலும் அது மிகையல்ல.

**உயர் பதவி:**

டாக்டர் ப.சுப்பராயன் அவர்களும், ஆசிய ஜோதி நேருவும் கல்லூரித் தோழர்கள். டாக்டர் சுப்பராயன் அவர்கள் விடுதலைக்கு முந்தைய சென்னை மாகாணத்தின் மூன்றாவது முதலமைச்சராகப் பதவி ஏற்றவர். முதலமைச்சர் பதவிக்கு வந்த முதல் தமிழர். அவருக்குச் சமமாக அவருடைய துணைவியார் இராதாபாய் சுப்பராயன் அவர்களும் பல்வேறு தளங்களில் பணியாற்றியிருக்கிறார்.

**சாதனை:**

- தமிழ்நாட்டில் நிகழ்ந்த பல "முதல் சாதனைக்கு" அடிக்கல் நாட்டிய பெருமை இவருக்கே உரியது. அரசுப்பணியாளர்களுக்குத் தேர்வாணையத்தை (Public Service Commission) முதன் முதலாக உருவாக்கியவர்.
- இந்து சமய அறநிலையச் சட்டம் (Hindu Religious Endowment) இவரால்தான் கொண்டு வரப்பட்டது.
- இதர பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான இட ஒதுக்கீட்டின் பிதாமகர். டாக்டர் சுப்பராயன்.
- உலக மகாகவியாகப் போற்றத்தக்க தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு 1960 ஆம் ஆண்டு அஞ்சல் தலை வெளியிட்டதும், டெல்லி நாடாளுமன்றத்தில் திருவள்ளுவர் திருவுருவப் படம் திறந்து வைத்தும் இவர்தான்.

**வாரிசுகளின் சாதனை :**

முதல் குமாரர் பி.பி.குமாரமங்கலமாகிய பரமசிவம் பிராபகர் குமாரமங்கலம் இராணுவத் தளபதியாகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர். இரண்டாவது குமாரர் ஜெயவந்த் கோபால் குமாரமங்கலம் தேசிய நிலக்கரி வளர்ச்சி வாரியத் தலைவராக பணியாற்றி அந்நிறுவனத்திற்குப் புகழ் சேர்த்தவர். மூன்றாவது குமாரர் சுரேந்திர மோகன் குமாரமங்கலம் லண்டனில் கல்வி கற்றுக் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் ஈர்க்கப்பட்டுப் பல ஆண்டுகள் கம்யூனிஸ்டாகவே பணியாற்றினார். சென்னை மாகாண அரசின் அட்வகேட் ஜெனரலாகவும் விளங்கினார். பின்னாட்களில் காங்கிரஸ் காட்சியில் இணைந்து மத்திய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தார். ஒரே மகளான பார்வதி கிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றி நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர்.

**முடிவுரை :**

நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட குமாரமங்கலம் குடும்பத்தினரின் தியாகங்கள், மொழி, இனம், கடந்த உறவுகள் இவையெல்லாம் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பாராளுமன்ற மைய மண்டபத்தில் 1979 ஜனவரி 18 அன்று துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள்சர்மா, டாக்டர் சுப்பராயன் படத்தைத் திறந்து வைத்தார். குமாரமங்கலம் ஜமீனில் பிறந்த டாக்டர் சுப்பராயனின் படம் இந்தியப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றுள்ளதற்கு அவருடைய தீரமும் தியாகமும் அடித்தளமிட்டன.

| | | |
|---|---|---|
| பெயர் | : | க.அ.நக்ஷத்ரா |
| தந்தையின் பெயர் | : | ஜெ.ஜி.அருண்ராஜா |
| பள்ளி | : | வேல்ஸ் வித்யாஸ்ரம், பல்லாவரம் |
| வகுப்பு | : | ஒன்பதாம் வகுப்பு |

# குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி



**முன்னுரை :**

"கொடுத்து, கொடுத்துச் சிவந்த கைகள்" என்ற கூற்றுப்படி சேலம் குமாரமங்கலம் குடும்பத்தினரும் அவ்வாறே வாழ்ந்தனர். அவர்களின் மகத்தான சமூகசேவைகளைப் பற்றியும், அதன் தாக்கத்தைப் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**வரலாறு :**

குமாரமங்கலம் நஞ்சையா நன்கு அறியப்பட்ட ஜமீன். பவானி ஆற்றில் காலிங்கராயன் அணையைக் கட்டி, அணையைச் சரிபார்க்கவும் தடுப்பு அணையைக் குமாரபாளையம் அருகே பூலாம்பட்டியில் கட்டி, இன்றும் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றனர். அர்த்தநாரீஸ்வரர் பக்தர்களுக்குத் திருச்செங்கோடு மலையில் பக்தர்களுக்காக மணிமண்டபமும் கட்டினர். 17 ஆம் நூற்றாண்டில் குமாரமங்கலம் மைசூர் இராச்சியத்தில் நன்கு அறியப்பட்ட ஜமீன் ஆகும்.

பரமசிவன் சுப்பராயக் கவுண்டர் ஓர் இந்திய அரசியல்வாதி; சுதந்திர போராட்ட வீரர் மற்றும் இராஜதந்திரி ஆவார். ஜெனரல் பி.பி.குமாரமங்கலத்தின் தந்தை இவர். முன்னாள் மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலம். இவரது மகன். முன்னாள் மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் தாத்தாவும் ஆவார்.

**சீர்திருத்தங்கள் :**

பனகல் அரசாங்கத்தின் ராஜா 1921 ஆம் ஆண்டில் பொதுவுடமை அரசாங்க ஆணையை (ஜி.ஓ.எண். 613) அறிமுகப்படுத்தியும், 1927 ஆம் ஆண்டு வரை செயல்படுத்தப்படவில்லை. இந்தச் சட்டம் தலித்துகளுக்கு இடஒதுக்கீடு மற்றும் இந்தியக் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லீம்களுக்கான பிரதிநிதித்துவத்தை

அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தியது. சுப்பராயன் அரசாங்கம் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தி, பிராமணர்களுக்கான இட ஒதுக்கீட்டை 22 சதவீதம் முதல் 16 சதவீதம் வரை எனவும் மற்றும் பிராமணரல்லாதவர்கள் 40 சதவீதம் முதல் 42 சதவீதம் வரை என மாற்றப்பட்டது.

சேலம் தொகுதியின் உறுப்பினரான மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலம் அவரது தொகுதிக்குப் பொது மருத்துவமனை மற்றும் ஒரு மேம்பாலத்தைப் பெறுவதில் முக்கியப் பங்கு வகித்தார்.

இவரது மகன் மோகன் குமாரமங்கலமும், இப்பொழுது, மாணவர்களுக்குக் கல்விக் கடன்களைப் பெறுவதற்கும், சேலம் தொகுதி எஃகு ஆலை நிதியுதவியுடன், நான்கு கிராமங்களுக்குக் குடிநீரை எடுத்துச் செல்வதற்கும், அவர் மேற்கொண்ட முயற்சிகள் அவரை அத்தொகுதியில் பிரபலமாக்கியிருக்கின்றன.

**முடிவுரை :**

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற வள்ளுவரின் வாக்குப்படி, சேலம் குமாரமங்கலம் குடும்பத்தினர் அன்றிலிருந்து இன்றுவரை, கற்ற கல்வியைச் சமூக சேவைக்காவும், மக்கள் முன்னேற்றத்திற்காகவும் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றனர். சேலம் குமாரமங்கலம் குடும்பத்தினர் நம் கொங்கு வேளாளக் கவுண்டர்களின் மாணிக்கங்கள் என்றால் அது மிகையாது.


பெயர் : எஸ். ஷம்யுக்தா

தந்தையின் பெயர் : கே.சீனிவாசன்

பள்ளி : கேந்தர் வித்யாலயா பள்ளி

வகுப்பு : ஆறாம் வகுப்பு

# குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி



**முன்னுரை :**

திருச்செங்கோடு வட்டம் குமாரமங்கலம் அருகில் போக்கம்பாளையம் என்னும் கிராமத்தில் ஜமீன்தார் பரமசிவ கவுண்டர், பாவாயி அம்மாளுக்கு **1889** ஆம் ஆண்டு சுப்பராயன் அவர்கள் மகனாகப் பிறந்தார். இவர் சென்னைக் கல்லூரியில் பயின்று தன்னுடன் படித்த ராதாபாய் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். சுப்பராயன் அவர்களும், அவரது வாரிசுகளும் ஆற்றிய சமூகப்பணி பற்றிக் காண்போம்.

**பொருள் :**

குமாரமங்கலம் (சேலம் அருகே) போக்கம்பாளையம் ஜமீன் பரம்பரை வாரிசான டாக்டர் பி.சுப்பராயன் அவர்கள் சென்னை மாகாணத்தின் முதல்வராக இருந்தார். அவர் மனைவி நாடளுமன்ற உறுப்பினராக இருந்தார். சுப்பராயன் அவர்களுக்கு மோகன் குமாரமங்கலம் என்ற மகனும், பார்வதி கிருஷ்ணன் என்ற மகளும் இருந்தனர். சுப்பராயன் அவர்களின் மகனான மோகன் குமாரமங்கலம் லண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியாவின் மிகச்சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். அவருடைய சகோதரி பார்வதி கிருஷ்ணன் மற்றும் இவரும் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றினர். பின்னர், காங்கிரசில் அமைச்சரானார் மோகன் குமாரமங்கலம். அவருடைய மனைவி கல்யாணி முகர்ச்சிக்கு ரங்கராஜன் குமாரமங்கலம் மகனாகப் பிறந்தார். மோகன் குமாரமங்கலம் ஒரு விமான விபத்தில் காலமானார். ரங்கராஜன் குமாரமங்கலம் சிறந்த வழக்கறிஞர், தொழிற்சங்கவாதி, சேலம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு ராஜீவ்காந்தியின் அமைச்சரவையில் உறுப்பினராக இருந்தார். பின்னர் பாரதீய ஜனதா கட்சியில்

இணைந்து, திருச்சி தொகுதியில் வெற்றிபெற்று அமைச்சராகிக் குறுகிய காலத்திலேயே திறமையான நிர்வாகி எனப்பெயர் பெற்றார்.


ரங்கராஜன் குமாரமங்கலத்தின் மகன் மோகன் குமாரமங்கலம். இவர் அமெரிக்காவில் பணிபுரிந்து வந்தார். அமெரிக்காவில் இருந்து வந்து **6** மாதங்கள் தான் தன் தந்தையுடன் வாழ்ந்தார். அதற்குள் ரங்கராஜன் அவர்கள் காலமாகிவிட்டார். தாத்தா பெயரை நிலை நிறுத்துபவன் பேரன் என்பது தமிழகத்தின் சொல்வழக்கு, தாத்தா மோகன் குமாரமங்கலத்தின் பெயரையே ரங்கராஜன் அவர்களுடைய மகனுக்குச் சூட்டப்பட்டது. ரங்கராஜன் அவர்களின் மகன் மோகன் குமாரமங்கலம் தான் பார்த்து வந்த பணியை விட்டு விலகி மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக இந்தியா திரும்பினார். அவர் சேலத்தில் தங்கிப் பணியாற்றினார். பின்னர் இளைஞர் காங்கிரசில் இணைந்து சேலம் மக்களவைத் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் அனைவரும் மதம் மாறித் திருமணம் செய்துகொண்டனர். அரசியலுக்கு வந்ததும் தன் ஜமீன் சொத்துகளை மக்களுக்கு வழங்கிவிட்டனர்.

**முடிவுரை :**

கொங்குச் சமுதாயத்தில் பிறந்து, தாத்தா, அப்பா, மகன் என்று அனைவருமே மத்தியில் அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர்களின் அரசியல் மற்றும் சமூகப்பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவர்கள் வாழையடி வாழையாக மக்களுக்குத் தொண்டு செய்வது மேன்மேலும் தொடரக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.மோனிகா |
| தந்தையின் பெயர் | : | ப.பரமேஸ்வரன் |
| பள்ளி | : | ஸ்ரீசைதன்யா டெக்னோ பள்ளி, மனப்பாக்கம் |
| வகுப்பு | : | ஆறாம் வகுப்பு |

# குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி



**முன்னுரை :**

சுப்பராயக் கவுண்டர் **1889** ஆம் ஆண்டு செப்டம்பர் **11**ஆம் தேதி சேலம் மாவட்டத்தின் குமாரமங்கலத்தில் கொங்கு வேளாளக் கவுண்டர் குடும்பத்தில் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் பரமசிவக் கவுண்டர். இவர் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தினரின் சமூகப்பணியைப்பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**குமாரமங்கலம் குடும்பத்தினரின் சமூகப்பணி :**

சுதந்திரப் போராட்டத்திற்கும், சுதந்திரத்திற்குப் பிறகும், நாட்டின் வளர்ச்சிக்கும் குமாரமங்கலம் குடும்பத்தினரின் பங்களிப்பு ஒப்பற்றது.

நேரு குடும்பத்தைப்போலவே, மறைந்த டாக்டர் சுப்பராயக் கவுண்டர், அவரது மகன் மோகன் குமாரமங்கலம் மற்றும் பேரன் ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் மத்திய அமைச்சரவையில் அமைச்சர் பதவிகளை வகித்தனர். கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் அவர்கள் உயர் பதவிகளை அடைந்தனர்.

மெட்ராஸ் பிரசிடென்சியின் முதலமைச்சராக சுப்பராயன் **(1926–1930)** இருந்தபோது, ஏழைகளுக்கும் நலிந்தவர்களுக்கும் பல புரட்சிகர நலப்பணித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதில் முக்கியப் பங்கு வகித்தார். பள்ளிக்கட்டணம், பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான கல்வி மானியம், கடன் நிவாரணத்திட்டம் மற்றும் ஆங்கிலத்தைக் கட்டாயமாகக் கற்பித்தல் ஆகியவற்றில் சலுகைகளை அறிமுகப்படுத்தினார்.

மறைந்த மோகன் குமாரமங்கலம்,இந்திரா காந்தி அமைச்சரவையில் அமைச்சராக இருந்தபோது, எஃகு அமைச்சகத்தில் நிர்வாகச் சீர்திருத்தங்களைக்கொண்டு வந்தார். ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்கள் அரசியல்

தொடர்பைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் உதவி செய்வதில் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரி என்று மத்திய சமூக நலத்துறை முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் தெரிவித்தார்.


முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி கே.வெங்கடசாமி, இவர்கள் மூவரும் நேர்மை, எளிமை மற்றும் மனிதநேயத்திற்காக அறியப்பட்டவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை :**

தொழிலதிபர் டாக்டர் என். மகாலிங்கம் (முன்னாள் தலைவர், கொங்கு நாடு அறக்கட்டளை மற்றும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்) கூறியது போல் அவர்களின் செயல்பாடுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்துடன் கட்டுப்படுத்தாமல் அனைவருக்கும், குறிப்பாக, ஏழைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு இருந்தன. குமாரமங்கலம் குடும்பத்தைப்போலவே, சாதி மற்றும் சமூகத்திற்கு மேலாக உயர்ந்து நமது சமூகத்தின் நலனுக்காக உழைத்து நமது கொங்கு வேளாளக் கவுண்டர்களின் பெருமையை உயர்த்துவோம்.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கா.பா.கங்கேஷ் |
| தந்தையின் பெயர் | : | கா.காளீஸ்வரன் |
| பள்ளி | : | வேலம்மாள் வித்யாஷரம் |
| வகுப்பு | : | ஏழாம் வகுப்பு |


# கனவு மெய்ப்பட வேண்டும்



கனவு மெய்ப்பட வேண்டும் – என்
கரங்கள் வலுப்பட வேண்டும்
மனிதம் மலர்ந்திட வேண்டும் – பெரு
மனங்கள் இணைந்திட வேண்டும்
மரங்கள் வளர்த்திட வேண்டும் – நல்
மனத்தோர் இதைச் செய்ய வேண்டும்
வயல்கள் செழித்திட வேண்டும்
விவசாயம் தழைத்திட வேண்டும்
நதிகள் இணைத்திட வேண்டும் – இந்த
நாட்டில் ஒற்றுமை வேண்டும்
வறுமை அகன்றிட வேண்டும் – புது
வளமான தேசமும் வேண்டும்
சோலைகளாய் மலர்ந்திருக்க வேண்டும் – கல்விச்
சாலைகளில் தமிழ் பேச வேண்டும்
உறவுகள் மேம்பட வேண்டும் – பலர்
உள்ளங்கள் பரிசுத்தமாகிட வேண்டும்
நோயற்ற வாழ்வதுவே வேண்டும் – மனித
நேயமது மலர்ந்திருக்க வேண்டும்
அன்பு பெருகிட வேண்டும் –மக்கள்
அனைவரும் நலம் பெற வேண்டும்
மழைதரும் மேகங்கள் வேண்டும் – எல்லா
மனிதரும் மகிழ்ந்திருக்க வேண்டும்
இத்தனையும் நான் கண்டு மகிழ – அன்பு
இறைவா உன் பெருங்கருணை வேண்டும்.


| | | |
|---|---|---|
| பெயர் | : | கா.பா.கங்கேஷ் |
| தந்தையின் பெயர் | : | கா.காளீஸ்வரன் |
| பள்ளி | : | வேலம்மாள் வித்யாஷரம் |
| வகுப்பு | : | ஏழாம் வகுப்பு |

# கனவு மெய்ப்பட வேண்டும்



சிரிக்க வைப்பது கனவல்ல!
சிந்திக்க வைப்பதுதான் சிறந்த கனவு!
ஊர் சுற்றித் திரிவதல்ல கனவு !
உறங்கிய திறனை எழுப்புவது தான் கனவு !
நாகரீகமாய்த் திரிவதல்ல கனவு !
நம்பகமாய்த் தொண்டு செய்வதே கனவு !
மரத்தை வெட்டி வீடாக்குவதல்ல கனவு !
மரத்தை வளர்த்து மழை வளம் பெருக்குவதே கனவு !
தமிழை விட்டு வேற்று மொழி பேசுவதல்ல கனவு !
தமிழை அனைவரும் பேசி வளர்த்திடுவதே கனவு !
“கனவே கலையாதிரு” “கற்பனையே தொலையாதிரு”
என் கனவுகள் மெய்ப்பட என்னுள் “என்
கனவுகள் மெய்ப்படச் செந்தூரமாய் மலர்ந்திட வேண்டும்”


பெயர் : ப.மோனிகா
தந்தையின் பெயர் : ப.பரமேஸ்வரன்
பள்ளி : ஸ்ரீசைதன்யா டெக்னோ பள்ளி, மனப்பாக்கம்
வகுப்பு : ஆறாம் வகுப்பு

# கனவு மெய்ப்பட வேண்டும்




மலர்ந்த முகம் கொண்ட மக்கள் வேண்டும்
பார்க்கும் இடம் எல்லாம் பரவசம் வேண்டும்
குழந்தை உள்ளம் கொண்ட கூட்டம் வேண்டும்
பாசம் எல்லாம் ஒரு சேர வேண்டும்

தோல்வியற்ற தொழில் வேண்டும்
தடையற்ற தண்ணீர் வேண்டும்
கலங்கமற்ற கல்வி வேண்டும்
பசியற்ற பாரதம் வேண்டும்

தங்கத் தமிழகம் உலகின் அங்கமாக வேண்டும்
தரணி எங்கும் போற்றிப் புகழ வேண்டும்
ஆம். பாரதியின் கூற்றுபடி, காலங்கள் மாறும்
கனவுகள் மெய்ப் படும்


| | | |
|---|---|---|
| பெயர் | : | எஸ்.சம்யுக்தா |
| தந்தையின் பெயர் | : | கே.சீனிவாசன் |
| பள்ளி | : | கேந்தர் வித்தியா பள்ளி |
| வகுப்பு | : | ஆறாம் வகுப்பு |

# கனவு மெய்ப்பட வேண்டும்



| | |
|---|---|
| நீர் | இந்நீரில்லாத் தமிழ்நாட்டிலே காவிரி அன்னையே நீ<br>வருடம் முழுவதும் தவழ்ந்திட வேண்டும்<br>பள்ளி செல்லும் உன் குழந்தைகள் குடங்களைத் தூக்கி<br>அலையும் நிலைமை இனி ஒரு போதும் வேண்டாம் |
| காற்று | மழைக்காற்றே நீ புயலாக வராமல் நின்று நிதானாமாக வந்து<br>எங்களுக்கு உணவளிக்கும் விவசாயக் குடும்பங்களை<br>வாழ வைத்து ஏரிக் குளங்களை நிரப்புவாயாக. |
| நெருப்பு | தீயே! வனங்களைத் தின்றும் பசி அடங்காமல் என்<br>உடன் பிறப்புகளை அல்லவா உன் பசிக்கு<br>இரையாக்கிவிட்டாய் உன் வீரத்தை ஏன் எங்கள் மேல்<br>சோதித்துப் பார்க்கிறாய் பசுமை நிறைந்த வனம்<br>உன்னை என்ன செய்தது அவற்றை வாழவழி விடு. |
| நிலம் | தூத்துக்குடி ஸ்டெர்லைட் தொழில் வளர்ச்சி என்று<br>இன்னும் உன்னை இவ்வளவு தூரம் மானுடர்கள்<br>வதம் செய்து கொண்டிருக்கிறார்களே; என்று நீ உன்<br>வளத்தைப் பேணிக் காக்கப் போகிறாய். |

ஆகாயமே இவ்வாறு நீ பூமியில் இருந்து வரும் அனைத்து
மாசுகளையும் உள்வாங்கிக் கொண்டு எங்களுக்குப்
புவிவெப்பமயமாதல் என்ற உலையில் அல்லவா தள்ளிவிடுகிறாய்
பஞ்சபூதங்களே போதும், நீங்கள் ஆட்டிவைத்தது போதும்
எங்களுக்கு இனி எதுவும் வேண்டாம்
என் தாத்தா பாட்டி வாழ்ந்த காலத்தைப் போல
எங்களையும் அவர்களைப் போல இயற்கையோடு
ஒன்றிவாழ வழி விடு என்று என் கனவு உலகத்தில் நான்
என் கனவு மெய்ப்படுமா!
விடியும் பொழுது நல்லதொரு விடியலாக விடியட்டும்!


பெயர் : கோ.அஸ்வின்

தந்தையின் பெயர் : செ.கோகுலகிருஷ்ணன்

பள்ளி : வேலம்மாள் நீயுஜென் பள்ளி, சோழிங்கநல்லூர்

வகுப்பு : மூன்றாம் வகுப்பு

# கனவு மெய்ப்பட வேண்டும்



மனதில் உறுதியும் செயலில் விவேகமும்
பூக்கக் கனவு பழமாகும்
கலாமின் 2020 கனவு
இளைஞர்களுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வரவு

ஏழை எளிய கனவுகள் மெய்ப்பட
கல்விக் கண் போதும் அவர்கள் முற்பட
சிப்பியின் கனவு முத்துச் சுரக்க
மனிதனின் கனவு நிம்மதி பெருக்கம்

முயற்சி கண்ட கனவு வினைப்பட
விடாமுயற்சி கண் அது உண்மைப்பட
வீணையின் வழி இசை பிறக்கும்
சந்தனையின் வழிக் கனவு மெய்க்கும்

மாணவர்களுக்குக் கனவே ஞானம்
அது மெய்க்க வள்ளுவமே வழியும்
மக்களுக்கு அன்புடைமையே கனவு
நெஞ்சங்களில் பணிவும் பாசமுமே அதற்கு நிகழ்வு

நம்பிக்கையில் சிதறும் அச்சங்கள்
மெய் கனவுகளில் பறக்கும் சோம்பல்கள்
சோதனை கண்ட இதயங்களுக்கு
மெய்க் கனவுகள் ஊட்டும் சாதனையை

இமைக்குள் விழிக்கும் கனவு வாழ்க!
இதற்காக இமைக்கா துடிக்கும் இதயங்கள் வளர்க!


பெயர் : சங்கவிதா செந்தில்குமார்
தந்தையின் பெயர் : செந்தில்குமார்
பள்ளி : எஸ்.எஸ்.எம்.பள்ளி, பெருங்களத்தூர்
வகுப்பு : ஒன்பதாம் வகுப்பு


# கனவு மெய்ப்பட வேண்டும்



கனவு மெய்ப்பட வேண்டும்
என்
நெடுநாள் கனவு மெய்ப்பட வேண்டும்!
கனவோடு ஒடு...
கடும் உழைப்பால்
விளைந்த வெற்றியைப் பாடு...
மெய்யோ பொய்யோ கனவைத் துரத்து;
கஷ்டத்தைத் தாண்டிப் போவோம் பறந்து...
கனவுகள் போகவேண்டாம் கலைந்து,
வெற்றியால் கவலை போகும் மறைந்து;
வெற்றி உன் வாசல் வர
உனக்கொரு கனவு வேண்டும்...
இலட்சியத்தோடு பின் ஓட
கனவு மெய்ப்படும்...
நிச்சயமாக!

| | | |
|---|---|---|
| பெயர் | : | அ.தன்வி |
| தந்தையின் பெயர் | : | ம.அமராபதி |
| பள்ளி | : | பத்ம சேஷாத்ரி பள்ளி |
| வகுப்பு | : | எட்டாம் வகுப்பு |

# கனவு மெய்ப்பட வேண்டும்



மறுமலர்ச்சி மலர்ந்து
    கனவு மெய்ப்பட வேண்டும்;
பெண் என்று – தாழ்த்திய
    சமூகம் மறைந்து
ஆண் பெண் சரிநிகர் என்ற
    கனவு மெய்ப்பட வேண்டும்;
எல்லா மழலையும் கல்வி புகக்
    கனவு மெய்ப்பட வேண்டும்;
சாதிமத வேற்றுமை நீங்கி இன
    ஒற்றுமை என்றும்
கனவு மெய்ப்பட வேண்டும்;
    ஏழையில்லா நாடு உருவாகும்
கனவு மெய்ப்பட வேண்டும்;
    கனவே – நீ கனவாய்க்
கலையாது – நீ மலர்ந்து
    ஒளிவீசுவாயாக!


பெயர் : ர.கார்த்திகா
தந்தையின் பெயர் : எஸ்.இரவிக்குமார்
பள்ளி : ஸ்ரீ ஆனந்த் ஜெயின் வித்யாலயா மெட்ரிக்குலோசன் மேல்நிலைப்பள்ளி, சென்னை
வகுப்பு : பதினொன்றாம் வகுப்பு


# கனவு மெய்ப்பட வேண்டும்



விட்டத்துக் கொக்கியில் புடவை கட்டி
இரு முனை இணைத்துத் தூளியாக்கி
விரிவாங்கிக் கட்டை வைத்து
அதில் சுழலும் பொம்மை கட்டி
கீழே மிதியடி, செருப்பு, உலக்கை வைத்து
வெளிச்சத்தை விலக்கி
இன்னும் பல செய்தும்
வராத தூக்கத்தைச் சிசுவுக்குக் கனவோடு வரவழைக்கிறது
தூளிப் புடவையில் ஒட்டியிருக்கும்
தாயின் வாசனை
கவலைகளற்ற காலங்களில் விரியும் கனவு
மெய்ப்பட வேண்டும் நாளைய தலைமுறைக்கு!


| | | |
|---|---|---|
| பெயர் | : | எஸ்.பி.விஜயராஜகோபாலன் |
| தந்தையின் பெயர் | : | ஆர்.சீனிவாச பிரபு |
| பள்ளி | : | K.V.CLRI, Chennai |
| வகுப்பு | : | எட்டாம் வகுப்பு |


# வாழும் வள்ளுவம்



வள்ளுவம் என்றும் வாழ்கிறது
தமிழ் மனங்கள் தோறும் நீள்கிறது
அதிகாரம் செலுத்தாமல்
அதிகாரத்தைச் சொல்லியது புதிய முறை!
அறம் பொருள் இன்பங்களைப்
படித்து நடந்திடத் தயாராகிறது புதிய தலைமுறை!!
ஈராயிரம் ஆண்டுகளுக்குப் முன் விளக்கேற்றியது வள்ளுவர்
இன்றும் சமூகத்திற்கு ஒளிபாய்ச்சுகிறது அதன் மகத்துவம்
பல்லாயிரம் ஆண்டுகளுக்கு பின்னும் வாழும் வள்ளுவர்
என்றும் சமூகத்தைப் பீடிக்கும் நோய்க்கு இதுவே மருத்துவம்
இரண்டிற்குள் உலகத்தையே அடக்கினார் வள்ளுவர் குரளாலே
அச்சொற்படி நடந்திட்டாலே சமூகம் வாழும் – வள்ளுவத்தாலே!!


| | | |
|---|---|---|
| பெயர் | : | எஸ்.சிவராகவ் |
| தந்தையின் பெயர் | : | (லேட்) எஸ்.சண்முகம் |
| கல்லூரி | : | சட்ட கல்லூரி |
| வகுப்பு | : | BL இரண்டாம் ஆண்டு, சிவகங்கை |

# வாழும் வள்ளுவம்



கடவுளே உலகின் அடிப்படை – எனக்
கடவுள் வாழ்த்தாய்த் தொடங்கி
பாரின் உயிர்களுக்கு அமிழ்தம் – மழை என
வான்சிறப்பை இன்றளவும் உணர்த்தி,
ஒழுக்கம் மானிடர்க்கு அவசியம்
என்பதை உணர்த்தி,
கல்வி கண் போன்றது – என
கற்போரைப் பறைசாற்றி
நாட்டின் இடரைப் போக்கி
இன்பத்தைக் காக்கும் – பெரியோரை
என்றும் துணைகொள் என்று;
உழவரே உலகோர்க்கு அச்சாணி
ஏர்த்தொழிலை ஊக்கப்படுத்திக்
குறுகிய இரண்டடி குறளில்
எல்லாப் பொருளையும் – முப்பாலாய்
விளக்கிய – பெருநாவலரே
இத்தெய்வநூலை ஈட்டிய தெய்வப்புலவரே,
உலகு – வள்ளுவத்தை
என்றும் எங்கும் போற்று!


| | | |
|---|---|---|
| பெயர் | : | ஆர்.நிமித்தா |
| தந்தையின் பெயர் | : | எஸ்.இரவிக்குமார் |
| கல்லூரி | : | Cresent Institute of Science and Technology, Chennai |
| வகுப்பு | : | B.Tech., (Biotechnology) |

# வாழும் வள்ளுவம்



வள்ளுவம் வழி வாழ்பவன்
　　வாழ்க்கையில் விதி வெல்பவன்
வள்ளுவனின் 1330 பொய்யா மொழி
　　மனிதனின் உயிர் வாழ்க்கைக்கு ஓர் ஒளி
வள்ளுவம் வழி வாழ்க்கை மகிழ்ச்சி
　　அதற்கு சிலம்பொலி செல்லப்பனார் ஒரு சாட்சி
முப்பால்நூல் கூறும் இரு வரி கவிதையாய்
　　இருவர் வாழ்ந்தால் சுகம்
கடைப்பிடி அன்பென்னும் அதிகாரம்
　　இனி வாழ்க்கையில் உனக்கு எல்லாம் பலகாரம்
வள்ளுவரின் நட்பியல் பழகு
　　துரோகம் என்னும் துன்பத்திலிருந்து நீ விலகு
வள்ளுவம் பல்லாண்டு வாழ்க
　　வள்ளுவரால் பலரும் ஞானத்தோடு வாழ்க


பெயர் : செல்வி ஸ்ரீஅபிதாசெந்தில்குமார்
தந்தையின் பெயர் : செந்தில்குமார்
வகுப்பு : (CA)